
456
உமா
ஆசிரியர்: ஜி. உமாபதி
UMA
4
AUG. 51 ஆவணி

சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி, விஷக்கடி, சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம் புண்கள்
OINTMENT
Germex
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட். மதராஸ்-1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 JUL 1957
MADRAS

# கலை அழகு மிகுந்து கவர்ச்சிகரமாகத் திகழ "பாக்கேஜிங்"



நீங்கள் தயாரிக்கும்
சரக்குகளை விற்பனைக்கு
அனுப்புவதற்கு முன்பாக,
அழகுறச்செய்ய ஏன்
''பாக்கேஜிங்''
நிபுணர்களைக் கலந்து
ஆலோசிக்கக்கூடாது?

உமா பிரிண்டர்ஸ் எந்தச் சரக்கிற்கும் ஏற்ற எழிலான தோற்றமும், பாதுகாப்புடன் கூடியதுமான, எல்லாவித அட்டைப் பெட்டிகள் தயார் செய்யத் தேவையான இயந்திர வசதி படைத்தவர்கள். நெடு நாளைய அனுபவம் உடையவர்கள். அவர்களைக் கலந்து ஆலோசி யுங்கள். உங்கள் பணிபுரிய என்றும் உற்சாகத்துடன் இருப்பவர்கள்

# உமா பிரிண்டர்ஸ்

ஸ்தாபிதம்: 1945

உமா இல்லம், சென்னை-1, (தமிழ்நாடு).

தென்னிந்தியாவில், அச்சிட்ட கலர் 'கார்ட்டன்'கள், அட்டைப் பெட்டிகள் தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.

எங்களிடத்தில் ஓவியம், பிளாக்குகள் மற்றும் அச்சுவேலைகளுடன், ஆப்ஸெட் பகுதியும் உள்ளது.



6F

போன்: 2200. தபால் பெட்டி: 1377. தந்தி: ATTAPOTTY

## விரும்பியதை அடையுங்கள்

# மாய மோதிரம்

நீங்கள் காதலித்தவர்கள், இந்த மாய மோதிரத்தை அணிந்தால், உங்கள் காலடியில் அவர்கள் விழுவார்கள். எவ்வளவு கல் மனத்தினர்களானாலும், தூரத்தில் இருந்தாலும், அவர்களது மனம் இளகி, உங்கள் கட்டளைப்படி நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவையைப் பெறலாம். நீங்கள் விரும்பியவர்களை மணந்து, பெரும் பொருளுடன், மக்கட் பேறையும் அடையலாம். வியாபாரத் துறையிலும், பரீட்சையிலும் வெற்றியை காணலாம். உங்கள் ராசி நல்ல திருப்பத்தை அடைந்து, அதிர்ஷ்டமுள்ளவர்களாக இருக்கலாம். திருப்திகரமான சுக வாழ்வையும் பெறலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94 பைசா. ஒரு பிரத்தியோகமானது 3-94 பைசா.

இது நல்ல தருணத்தில் தயாரித்தது. அற்புத பலனை தரும். திருப்தியடையவில்லையெனில், பணம் வாபஸ் பெறலாம். ஒரு முறை பரீட்சை செய்தால் பலனை அடையலாம்.

*Principal:*

**THE BENGAL MESMERISM HOUSE**

**(U. M.) NAKODAR, (P. B)**

## சென்னை பிளாஸாவில்

*12-வது வாரம்*

**வாஹிதா ரெஹ்மான்-குருதத்,**
**மாலா ஸின்ஹா - ஜானிவாக்கர்**
**நடிக்கும்**

குருதத்தின்

# "பியாஸா"

சங்கீதம்: **S. D. பர்மன்**

மனிதனின் சாவாத உணர்ச்சி, நம்பிக்கை, பயம், தோல்வி, ஆசை, ஏமாற்றம், காதலுக்கும் நட்புக்குமிடையில் நடக்கும் போராட்டம் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளைக் கொண்ட சிறந்த திரைச் சித்திரம்.

**தினசரி மூன்று காட்சிகள்**



# உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

## பொருளடக்கம்


| செடி 5<br>மலர் 4 | ஆகஸ்ட், 57 | ஏவிளம்பி-ஞு<br>ஆவணி - மீ |
|---|---|---|



தமிழில் போதனு மொழி (தலையங்கம்) .... 7
கட்டபொம்மனும் ம. பொ. சி-யும் .... 8
பெரியாரின் அர்த்தமற்ற
ஆகஸ்ட்டுப் போராட்டம் .... 9
பரிதாபத்துக்குரியவர் படாஸ்கர்! .... 10
தம்பிக்கு (கடிதம்) .... 11
உங்களுடன் ஒரு கணம் .... 13
இலக்கியச் சுவை (புதிய கட்டுரைத் தொடர்) ... 15
நினைவின் முத்திரை .... 19
மதிப்புரை .... 29
எங்கள் இதயங்கள் பேசுகின்றன .... 30
சுபம்! .... 31
கலை வாழ்க்கைக்கே....! ... 43
கனவிலே வந்தவன் ... 46
வாடா விளக்கு (தொடர்கதை) .... 47
நீயும் நானும் (கவிதை) ... 57
இனிய பாதி .... 58
போலீஸ்காரன் மகன் (தொடர்கதை) ... 64
'ஏன்வேண்டும் இன்பத் திராவிடம்?' (மதிப்புரை) .... 70
ஜோடி ... 74
'தங்கமலை ரகசியம்',
'மல்லிகா', 'பியாஸா'. (விமரிசனம்) .... 76


...ம் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.


197224


இணை ஆசிரியர்
புலவர் ...ஸ். ஆறுமுகம்

உமா

# தமிழில் போதன மொழி

நிதி அமைச்சர், அவையிலும் மற்றும் பொறுப்புள்ள இடங்களிலும் தமிழ் நாட்டின் எல்லாவிதக் கல்லூரிகளிலும் போதன மொழி தமிழாக இருக்க வேண்டுமென்று பேசிக்கொண்டு வருகிறார். ஆனால், அதைச் செயற் படுத்த முடியாத சக்தியற்ற நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன?

சென்னை சர்வகலாசாலையை ஏகபோக உரிமையாக்கிக் கொண்ட லட்சுமணசாமி முதலியாரின் ஆதிக்கத்தின் அதட்டலுக்குப் பயந்தா? அண்ணாமலைப் பல்கலைக் கழக அரசரின் அதிகாரத்தின் காரணமா? அல்லது, மந்திரி சபையிலேயே ரகசிய எதிர்ப்பா என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், தமிழ் நாட்டின் முன்னேற்றத் துக்காகவும் ஓரளவு பரிந்து பேசும் பண்பும் இனப்பற்றும் உள்ளவர் என்பதை நம் நிதி அமைச்சர் நிரூபித்துக் கொண்டு வரும் இந்த நேரத்தில், இதில் எந்த ரகசியத்தையும் மறைக்காமல், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க தீவிரத்தோடும் வீரத்தோடும் செயற்படத் துணிந்தால், மக்களின் மகத்தான ஆதரவோடு பாராட்டும் கிடைக்கும்.

இன்று ஆங்கில மோக மயக்கத்தில் உள்ள வேஷதாரிகளும் கை கொடுக்க வந்தே தீருவார்கள். பொது மேடையிலும் வீட்டிலும் நண்பர்களிடத்திலும் ஆங்கிலத்தில் பேசினால்தான் பெருமையென்று கருதியிருந்த இவர்கள், தமிழை ஆட்சி மொழிஆக்கிய போதும் இப்படித்தான் அலறினார்கள். இப்போது எல்லா இடங்களிலும் தமிழில் பேசியாக வேண்டுமென்ற கட்டாயச் சூழ்நிலை உருவாக்கி விட்டதால், அதைத் தவிர்க்க முடியாமல் வரவேற்று, தட்டுத் தடுமாறித் தமிழிலேயே பேசி வரும் விந்தையையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோமல்லவா?

ஆலயப் பிரவேசத்தை ஆரம்பித்த போதும், ஆஷாடபூதிகளும் அதிகாரத்தில் உள்ளவர்களும், ஜாதி வெறி கொண்டோரும், சிறுமதி படைத்தோர்களும் சீறினார்கள். பின்னே அதே ஆலயப் பிரவேச விழாக்களில் இவர்கள் அதிகமாக ஒத்துழைத்ததுடன், அவ்விழாவிற்குத் தலைமை வகித்தும் தம் பெயரை விளம்பரப் படுத்திக் கொண்டார்கள்.

அண்ணல் மகாத்மா மதுவிலக்குக் கொண்டு வந்த போதும், மதிவாணர்களும் அன்றைய ஆட்சி பீடத்திலும் அதிகாரத்திலும் இருந்தவர்களும், உயர்தரக் குடியர்களும் பின்னே அதன் சிறப்பை உணர்ந்து புகழ் பாடத் தொடங்கினார்கள்.

அதுபோன்றே, போதன மொழி தமிழில் வந்த பிறகு, தமிழ் நாட்டிலே பிறந்து தமிழறிவு வளர்ந்து ஆங்கிலத்தை அதிகமாகப் புரிந்து கொள்ளாத பாவத்தால், பண்புடன் பகுத்தறிவும் இருந்தும், முன்னேற முடியாத நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மணிகள்

நகராண்மைக் கழக அதிகாரத்திலும், அரசாங்கத்தின் ஆதரவிலும் நடக்கும் பள்ளிகளிலும் படிப்பதால், அங்கு தமிழுக்கு முதல் இடம் தந்து போதனு மொழியாக்கி நடத்தி வருவதால், ஆங்கில போதனையை அவர்களால் அதிகமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையால், அதிகமாக வெற்றி பெறுவோர்களெல்லாம் நிறையப் பணம் சம்பாதித்து, தாய் மொழியைக் குறைத்து ஆங்கில மொழியை அதிகமாகப் பயில்வதற்காக 'கான்வெண்ட்' பள்ளியிலும், தனித் தனியே உபாத்தியாயர்கள் அமைத்தும் போதிக்கச் செய்யும் பொருள் படைத்தவர்களின் குடும்பத்தைச் சார்ந்த மாணவ-மாணவிகளாகவே இருக்கின்றனர். இவர்களுக்குத்தான் வசதியோடு சிபாரிசும் கிடைத்து உத்தியோகத்தைக் கைப்பற்ற ஏதுவாகவும் முடிகிறது. இது எங்கு மாறிப் போகுமோ என்று பதவி வகிக்கும் எத்தர்கள் சமுதாயத்தை ஏமாற்றுகிறுர்கள்.

ஆதலால், இதை உடனடியாகச் சட்டமாக்கினுல், நாட்டு மக்களின் பேராதரவோடு அவைக்கு வந்துள்ள மற்ற எல்லா அங்கத்தினர் களின் நல்லாதரவும் கட்சிச்சார்பற்று ஒருமனதாகக் கிடைக்கு மென்று உறுதி கூறுகிறோம்.

## கட்டபொம்மனும் ம. பொ. சி-யும்

நம் பாரத நாட்டிலே வெள்ளை யர்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டு ஆண்டுகள் பல ஆகிவிட்டன. ஆனுல், இந்தியா அடிமைப் பட்டுக் கிடந்த சோகக் கதையைச் சதா சொல்லிக் கொண்டேயிருக்கும் ஆங்கிலேயர்களின் நினைவுச் சின் னங்களை நீக்க இப்பொழுதுதான் மத்திய ஆட்சிக்கு 'ஞானம்' பிறந் திருக்கிறது. இத்தனை ஆண்டுகள் கழித்தாவது ஒரு நல்ல நடவடிக் கையை மேற்கொண்டிருப்பதற் குப் பொது மக்கள் நன்றி சொல் வார்கள். ஆட்சி பீடத்தின் மேற் படி செயல், பொது மக்களின் தூண்டுதலின் விளைவுதான் என்ப தைக் கூறவே வேண்டியதில்லை. அரசாங்க உத்தரவு பிற மாகா ணங்களில் பரவியது போல, நம் சென்னையிலும் செயற்படக் காத் திருக்கிறது.

இதே சமயம், மற்றுமொரு செய்தியையும் குறிப்பிட வேண் டும். முன் மாதிரி இல்லாமல் இப் போது நம் சட்டசபையில் 'பர பரப்பு' நிலவி வருகிறது. கட்ட பொம்மன் சிலை அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி அங்கே கேள்விகள் எழுந்தன. உணர்ச்சி நிறைந்த பேச்சுக்கள் நடைபெற்றன. அந்நிகழ்ச்சியின் பலனுகக் கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் நல்லுணர்ச்சி ஏற்பட்டது. "கட்ட பொம்மனுக்குச் சிலை அமைக்க யாராகிலும் முன் வந்தால் அர சாங்கம் உதவி செய்யத் தயார்!" என்று அவர் அறிவித்தார்.

வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற பெயர் உச்சரிக்கப்பட்டால், நன்றி மறவாத் தமிழ் நெஞ்சங் களிலே உடனே பளிச்சிடுவது தமிழ்த் தலைவர் திரு ம. பொ. சி. அவர்களின் பெயரேயாகும். அந்த அளவுக்குத் தமிழ் நாட்டுக்குக் கட்டபொம்மனை அறிமுகப் படுத்தி வைத்திருக்கின்ருர் சிலம்புச் செல்வர்.

வெள்ளையர்களை ஒழிக்கப் போராடிய முதல் வீரர் அவர். ஆனுல் அந்நியர்கள் நம் தமிழ்ச் சகோதரரை வஞ்சம் தீர்த்துக் கொண்டனர்; மறத்தமிழன் கட்ட பொம்மன் கயத்தாற்றில் தூக்கி லிடப்பட்டார். வீரபாண்டியனின் தியாகத்தைக் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன— அவரை ஈன்ற மண்ணுன பாஞ் சாலங் குறிச்சியும், ரத்த தானம் ஏற்ற கயத்தாறும். இப்படிப்பட்ட விவரங்களை யெல்லாம் தமிழ் மக் கள் மறந்து விடாமல் இருக்கவும்

நன்றி மறந்த நாடு தமிழகம் என்னும் அவப் பெயர் ஏற்படாமல் இருக்கவும், வீரபாண்டியக் கட்டபொம்மன் விழா கொண்டாடி வரும் மகத்தான பெருமைக்கு உரியவரும் ம. பொ. சி. அவர்களே யாவார்.

அமைச்சரின் அறிவிப்புக்குப் பதில் அனுப்பி யிருக்கிருர் சிவஞானம் அவர்கள்; சென்னை கோட்டை வாயிலில் கட்டபொம்மன் சிலை அமைக்க ஆட்சியாளரிடம் அனுமதி கேட்டிருக்கின்ருர். "அரசாங்க அலுவலக வாசலில் இந்தச் சிலையை வைப்பதுதான் கட்டபொம்மனுக்கு நாம் செய்யும் மரியாதையாகும். கோட்டையில் சிலை வைக்க அரசாங்கம் அனுமதி தரத் தயாராளுல், அந்தச் சிலையைத் தயாரிப்பதற்கான முயற்சிகளை நான் மேற்கொள்ளுகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார் தமிழரசுக் கழகத் தலைவர்.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி, திரு. வி. க. திருப்பூர் குமரன், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய சிவா போன்றவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதைப் போலவே, கட்டபொம்மனின் பிறந்த ஊரிலும் அவரது தியாகத்தின் அடையாளம் ஒன்றை அமைப்பது அவசியம். அத்துடன், அன்னுரின் நினைவு நாள் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படவும் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

இந்தியப் புரட்சியின் நூற்ருண்டு விழா கொண்டாடப்பட விருக்கின்ற அதே நாளிலேயே வீரபாண்டியக் கட்டபொம்மன் சிலையையும் அமைப்பவதில் செந்தமிழ்த் தலைவருடன் சென்னை ஆட்சியும் பூரணமாக ஒத்துழைக்குமென்று நம்புகிருேம்.

## பெரியாரின் அர்த்தமற்ற போராட்டம்

திராவிடக் கழகத் தலைவர் திரு ஈ. வே. ரா. வுக்கு ஒரு பழக்கம் உண்டு. தம் பெயர் தமிழர்களுக்கு மறந்து போய் விட்டதோ என்ற சந்தேகம் ஏற்படும் போதெல்லாம், அவ்வப் போது போராட்டங்களை ஆண்டுதோறும் நடத்துவது அவருக்கு சகஜமாகி விட்டது. 'ஹிந்தி ஒழிப்பு' 'கொடி எரிப்பு', ராமர் பட எரிப்பு', 'பிள்ளையார் உடைப்பு', ஹோட்டல் பூஸ்வாணம்'–இப்படிப் பல போராட்டங்களுக்குத் தலை கொடுத்திருக்கிருர். தேர்தல் காலத்தில் அவர் பெயர் அடிபட்டதுடன் திருப்தி அடையாமல், இப்பொழுது இன்னெரு புதிய போராட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளார் பெரியார். இதற்குப் பெயர் ஆகஸ்ட்டுப் போராட்டம்!

ஆனுல், செயல் புதிதல்ல–மறுபடியும் 'பிருமணுள்' என்ற சொல்லை அழிக்கப் போகின்ருர்களாம்....!

சிறிய செயல்கள் செய்பவர்கள் எப்படி பெரியவர்களாக முடியும்? பொது மக்களுக்குப் பாதகம் தரக்கூடிய–தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்தாத இத்தகைய செயல்களை இனியாவது அனுமதிக்காமல் இருக்க வேண்டியது நமது ஆட்சிப் பொறுப்பினரின் முக்கியமான கடமையாகும். தேர்தலிலே தங்களுக்கு உதவி செய்தவராயிற்றே என்று எண்ணி வாய்மூடி மௌனியாக இருந்து விடாமல் பந்தபாசம் நீக்கி, தமிழகத்திலும் ஜனநாயகம் ஒழுங்காக நடைபெறுகிறதென்பதை நிரூபிப்பதில் முதல் அமைச்சர் தக்க கவனம் செலுத்த வேண்டும்.

## பரிதாபத்துக்குரியவர் படஸ்கர்!

ஆம்; படஸ்கர் அவர்கள் பரிதாபத்துக்குரியவர்தான்! அவருடைய தீர்ப்பு அதிகார பூர்வமாக வெளியாவதில் ஏற்பட்டுள்ள கால தாமதத்தைக் கண்டுதான் மேற்படி முடிவுக்கு வரவேண்டியவர்களாகிருேம்.

திரு படாஸ்கரின் அறிக்கை இந்திய அரசாங்கத்துக்குக் கிடைப்பதற்கே இத்தனை மாதங்கள் ஆகி

விட்டன. இனி மேற்படி அறிக்கையின் கடைசித் தீர்ப்பு பத்திரிகைகளில் வெளி வர இன்னும் எத்தனை நாட்கள் ஆகுமோ, தெரியவில்லை.

திருத்தணி, ஹோசூர் இரண்டும் தமிழ் நாட்டுடன் இணைக்கப்படலாமென்றும்; செங்கற்பட்டு, வடஆற்காடு, சித்தூர் ஜில்லாக்களின் எல்லையோரத்திலுள்ள தெலுங்கு மொழி வழங்கப்படும் கிராமங்கள் ஆந்திராவுடன் சேருமென்றும்; படஸ்கர் தீர்ப்பு பற்றிச் செய்தித்தாள்கள் 'ஹேஷ்யம்' கூறுகின்றன.

நம் அமைச்சரவை தொடக்கத்திலேயே விழிப்புணர்ச்சியுடன் இருந்திருந்தால், எல்லைப் பிரச்சினை என்றோ தீர்வு கண்டிருக்கும். ஆனால், ஆந்திரர்களுக்கு வாய்த்த தலைமை அமைச்சரோ, தமிழகத்திற்கு வந்து, திருத்தணி ஆந்திரத்துடன் சேருவதுதான் உசிதம் என்றும் ஆந்திரர்கள் கோபக்காரர்கள் என்றும் இன்னும் என்னவெல்லாமோ பேசும் அளவுக்கு முனைந்து விட்டார். நாட்டை ஆளும் முதல் மந்திரியின் பொறுப்புள்ள பேச்சாக இது அமைய முடியாது.

ஆனால், தமிழர்களின் கோபத்தைப் பற்றியும் வீர தீரத்தைப் பற்றியும் பூரணமாக அவர் அறியவில்லை போலும். தன்மானம் அணுவளவேனும் பாதிக்கப்படுவதை எந்தத் தமிழனும் பொறுக்கமாட்டான் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

திரு படஸ்கர், ஆந்திரர்களின் கைப்பாவையாகி விடாமல், தமிழர்களின் நியாயமான உரிமைகளையும் சிந்தித்துப் பார்த்துத்தான் வட எல்லைப் பிரச்சினையைப் பற்றிய தம்முடைய தீர்ப்பை மத்திய ஆட்சிக்குத் தெரிவித்திருப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு பந்த் எல்லைத் தகராறு முடிவை அறிவிப்பதற்கு முன்பு, திரு காமராஜ், திரு சஞ்சீவி ரெட்டி இருவரையும் கலந்து பேசுவாரென்று அறிகிறோம். இந்தச் சந்தர்ப்பத்திலாவது விழிப்புணர்ச்சியுடன் இருந்து, தமிழகத்திற்குச் சேரவேண்டிய பகுதிகளை அடைவதற்கு நம் முதலமைச்சர் ஆவன செய்வாரென்று நம்புகின்றோம்.

## வளரும் எழுத்தாளர் சங்க ஆரம்ப விழா

திருச்சியில் *21-7-57*ல் கூடிய வளரும் எழுத்தாளர் சங்க ஆரம்ப விழா வெகு சிறப்புற நடைபெற்றது. 'கண்ணன்' ஆசிரியர் திரு 'ஆர்வி' அவர்கள் விழாவைத் துவக்கி வைத்து, 'வளரும் எழுத்தாளர் சங்கத்திலுள்ள அநேக அங்கத்தினர்கள் 'கண்ண'னில் கதைகள் நிறைய எழுதி வெற்றி பெற்றவர்கள் என்று எண்ணும் போது பெருமிதம் அடைகிறேன்' என்று பாராட்டினார்கள்.

தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்த 'உமா' ஆசிரியர் ஜி. உமாபதி அவர்கள் வளரும் எழுத்தாளர்கள் எழுதும் எழுத்தில் பண்பு கலந்த படிப்பினையாக உள்ள செய்திகள் பரவி, அதன் மூலமாக நாட்டின் முன்னேற்ற வளர்ச்சியில் அவர்கள் பங்கு கொள்ள வேண்டுமென்று பேசினார்கள். பின்னர், திரு 'சுகி' அவர்கள், எழுத்தாளர்கள் தம் பேனாவை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று விளக்கம் தந்தார்கள். திரு அகிலன் அவர்கள், 'எழுத்தாளர்கள் இச் சமுதாயத்தையே மாற்றியமைக்கும் செம்மல்கள்; அவர்கள் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு நாட்டு நலனில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்' என்று பேசினார்கள்.

'சிவாஜி' ஆசிரியர் திரு திருலோக சீதாராம் அவர்கள் தனக்கே உரித்தான கவிதைகளைப் பாடியும் பேசியும் எல்லோரையும் உணர்ச்சி வயப்படுத்தினார்கள். பின்னர் திரு ஸ்ரீரங்கம் நரசிம்மனும், வித்துவான் திரு சூசைக்கண்

னும் பேசினார்கள். திருச்சி எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு ரெட்டியார் அவர்கள், வளரும் எழுத்தாளர் நண்பர்கட்கு வாழ்த்துக் கூறும்போது, முன்னே படிப்பில் நன்றாக ஞாபகம் செலுத்தி, பிழையில்லாமலும் தமக்குச் சரியாகப் புரிந்த பிறகும் எழுத முன்வர வேண்டும் என்றார்கள். கடைசியாகச் செயலாளர் திரு அமலன் வாழ்த்துக் கூற விழா இனிது முடிந்தது.

இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்காக திருவாளர்கள் பாரதி தங்கராசன், தே. பார்த்தசாரதி, ஜி. பாலகிருஷ்ணன், பொன்னன் மற்றும் பலரும் ஒத்துழைத்தார்கள். எல்லோரையும் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றோம். சங்கம் மேன்மேலும் வளரவும் வாழ்த்துகின்றோம்.

## டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

அரசியலில் 'தென்னாட்டுத் திலகர்' என்றால் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு அவர்களைத் தான் குறிக்கும். தமிழகத்தில் தேசப் பற்றையும் தேசிய உணர்ச்சியையும் ஊட்டிய பெரும் தலைவர்களிலே திரு நாயுடுவும் ஒருவர். அரசியல் வட்டத்தில் பல ஆண்டுகள் அனுபவம் பெற்றவர் அவர்; அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்; பத்திரிகை வாழ்விலும் அதிக அனுபவம் வாய்ந்தவர் இவர்.

சட்டசபையில் சபாநாயகர் அனுதாபம் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்: 'அவருடைய மறைவு மூத்த அரசியல் வாதிகளிடையே பூர்த்தி செய்ய முடியாத நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது.'

டாக்டர் அவர்களின் பிரிவால் வருந்தும் அவரது மனைவி, மக்களுக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

## டி. கோவிந்தராஜுலு நாயுடு

வைரம், பொன், வெள்ளி நகை வியாபாரத்தில் 'நாயுடு' என்றால், அந்த நாயுடு திருவாளர் டி. கோவிந்தராஜுலு நாயுடு அவர்களாகத்தான் இருக்க முடியும். அவ்வளவு தூரம் பிரபல மடைந்திருந்தவர் அவர். அன்னாரது அருள் நிறைக் குணமும், ஏழைகள் பால் கொண்டிருந்த கருணையும், தெய்வபக்தியும் அவருடைய பெருமையையும் புகழையும் எடுத்துரைத்தன.

தம் தொழிலில் மன்னரென விளங்கிய திரு நாயுடு அவர்களின் மறைவால் வாடும் மகாலட்சுமி போன்ற அவர் மனைவிக்கும் அருமைப் புதல்விகளுக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உரியவை. திரு நாயுடு அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். நூறு ஆண்டுகள் வாழ்ந்த ஒரு மனிதர் எவ்வளவு காரியங்களைச் சாதிக்க முடியுமோ அத்தனையையும் திரு நாயுடு தம் ஐம்பது வயதில் சாதித்தார். திரு டி. ஜி. என். அவர்கள் கல்வி நிலையமும் மருத்துவ விடுதியும் ஏற்படுத்த எண்ணியிருந்தார். அந்த

ஒரு குறையையும் அவருடைய மருமகன்மார்கள் பூர்த்தி செய்து, அவருடைய ஆத்மாவுக்குச் சாந்தி தேடுவார்களென்று நம்புகிறோம்.

# தம்பிக்கு

## தமிழினத்தின் எதிர்காலம்!

அன்புள்ள தம்பி,

இந்நாட்டின் அரசியலும் சமுதாய அமைப்பும் இன்றுள்ள சூழ்நிலையில் சென்று கொண்டிருந்தால், குறிப்பாக தமிழினத்தின் எதிர்காலம் இருண்டுபோகும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இதற்கான சில சம்பவங்களைச் சொல்கிறேன், கேள்:

தமிழகத்தின் சட்டசபையிலே நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளை நீ கண்டிருப்பாய். அங்கே அடுக்கு மொழியை மற்றவர்கள் பேசுகிறார்களென்று இன்னொரு சாரார் குறை கூறுவதும், குறை கூறுவோரே அதைப் பேசி அவமானப்படுவதும், வழக்கமாகிவிட்டது. சிந்திரி-முந்திரி, என்றும் கந்தரி-சுந்தரி என்றும் வாசகங்கள் அங்கு நடமாடுகின்றன. நல்லாட்சி நடக்கும் எந்த நாட்டிலும் இத்தகைய கீழ்த்தரமான நிலை கிடையாது.

அங்கே நாடு முன்னேற நல்ல பல திட்டங்களை மாற்றுக் கட்சியாரோடு கலந்து செயல்படத் துணிவார்கள். அங்கு கேட்கப்படும் கேள்விகள், நம் நாட்டிலே கிடைக்கும் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி பலவிதமான இயந்திரங்களைத் தயாரிப்பதை அதிகமாக்குவது எப்படி என்பது பற்றி. இங்கோ அமைச்சர்களைக் கேட்கப்படும் கேள்விகள், குற்றாலத்திலே நூறு ரூபாய் பெறுமானமுள்ள மரங்களை மூன்று ரூபாய்க்கு விற்றது ஏன், போலீஸ் உயர்தர அதிகாரி லஞ்சம் வாங்கினாரா, அறியாமையால் ஏற்பட்ட அநியாயச் செலவுகள் என்ன என்ற சம்பவங்கள் கொண்ட பயங்கரக் கேள்விகள் இங்கே!

சுதந்திரம் கிடைத்து பத்தாண்டுகள் ஆன பிறகும், பாதையிலே வாழும் மக்களின் எண்ணிக்கை குறைய வில்லை.

உணவு பற்றிய பிரச்சினை இன்னும் தீரவில்லை. இதற்குக் காரணம் மாரி இல்லாததா? மாநிலம் பூராவும் நிறையப் பொழிந்திருக்கிறது. இவைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம், ஆட்சியாளரின் அனாவசியமான போக்குகளேயே யாகும். ஆடம்பரமான செலவுகளும் அவசர அவசியமற்ற அனாவசியத் திட்டங்களும்தான் அன்றாடம் நிறைவேறுகின்றன.

இன்னொரு பக்கம் நமக்குச் சேர வேண்டிய சந்திரகிரி, காளாத்தி, சித்தூர், புத்தூர், திருத்தணி, சூலூர்ப்பேட்டை, திருவள்ளூர், பொன்னேரி, ஹோசூர் போன்ற பகுதிகள் பறி போகக் காத்திருந்தன. இதற்காக காலமெல்லாம் புள்ளி விவரங்களையும் சரித்திரச்

சான்றுகளையும் எடுத்துக் காட்டி போராடிக் கொண்டு வருகிறோம். இவைகளைப் பற்றி மற்றக் கட்சியிலோ கழகத்திலோ உள்ள தமிழர்கள் பேசுவது இல்லை. ஆனால் ஒரு விசித்திரம் தம்பி! 'திராவிடநாடு' கேட்கும் ஒரு சிலர் ஆரியரல்லாதார் பட்டியலிலே சேர்ந்துள்ள மலையாளிகள் நம் நாட்டிலே மட மடவென பதவியைப் பிடிக்கிறார்கள் என்பதை இப்போது உணருகிறார்கள்; தமிழினம் கூலியாக வாழும் நிலை மாறவேண்டும் என்று நாம் வாதாடிய போதெல்லாம் இத்திராவிட வீரர்களும் வீராங்கனைகளும் சும்மா இருந்தனர். அவர்களுக்கும் ஞானோதயம் ஆரம்பித்து மலையாள மங்கையர்களுக்குத்தான் ஆட்சியில் இடம் கிடைக்கிறது என்று புகார் கூறுகிறார்கள்-அவையிலே! இந்த அளவிற்காவது நம்மைத் திருத்த வந்தவர்கள், இப்போது நம்மால் திருத்தப்பட்டு வருகிறார்கள் என்பதைக் காணும் போது நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

இன்று இங்கே நம்முடைய தேசத்தில் இன்னொரு விசித்திரம். மத்திய—மாகாண அரசாங்க ஊழியர்கள் ஒரே கட்டிடத்தில் மாகாண ஆட்சியில் குமாஸ்தாவாக மிகத் திறமையோடு வேலை செய்வோருக்கு சம்பளக் குறைவு. அந்தத் திறமை கூட இல்லாதவர்கள் மத்திய ஆட்சியில் சம்பளம் அதிகமாக வாங்குகிறார்கள். ஒன்றுபட்ட தேசத்தில் இந்த வித்தியாசங்கள் எதற்கு? இந்த ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக யிருப்பதினால் அலுவலகங்களிலே வேலைகள் சரிவர நடப்பதில்லை. ஏற்கனவே தாமதமாக நடந்து வருவதற்குக் காரணம் 'சிவப்பு நாடா' முறை வேறு. அத்துடன், இவர்களுக்குள்ளேயே பிரிவினை எண்ணங்கள் வேறு. இதனால் அரசாங்கச் சம்பந்தப்பட்ட அத்தனை இலாக்காக்களிலுமே ஊழல் நிறைய இருப்பதாக எண்ணி மக்கள் மனம் வருந்துகிறார்கள். அதோடு ஐந்தாண்டுத் திட்டம் என்று ஒன்று ஏன் நடத்துகிறார்கள் என்றே மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளாத நிலை வேறு. நியாயம் தானே? இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மில் முதலாளிகளுக்கும் மாபெரும் வியாபாரிகளுக்கும்தான் அரசாங்கப் பண உதவி கிடைக்கிறதே தவிர, நடுத்தர வியாபாரிகளுக்குக் கிடைப்பதில்லை.

இவைகளையெல்லாம் பார்க்கும் மக்கள் மனம் புழுங்காமல் வேறு என்ன செய்வார்கள்? பாவம், அவர்கள் காலையில் எழுந்தவுடன் பத்திரிகையிலே பார்க்கும் செய்திகளெல்லாம் பயங்கர நிகழ்ச்சிகளேயாகும். ஒருவன் உத்தியோகம் கிடைக்காததினால் தற்கொலை செய்து கொண்டான்; ஒரு குடும்பமே வறுமை தாளாது அடுக்காக மாண்டு போனது; இரவு ராணிகள் பிடி பட்டார்கள்; இன்னொரு ஊரில் போட்டிக் கழகத் தகராறுகளினால் சிலர் கொலையுண்டார்கள், பலர் கொலை செய்தார்கள் என்றும்; வேறொரு ஊரில் மது காய்ச்சுவோர்களுக்கு போலீஸ்காரர்களே உடந்தையென்றும் கீழ்த்தரமான பத்திரிகைகள் நடத்துபவர்கள் சிலர் மற்றக் குடும்பங்களைப் பற்றியே மட்டமாக எழுதுவதும்; அவர்களை நீதிமன்றத்துக்கு அழைப்பதும் இப்படிப் பல துறைகளில் இச்சமுதாயம் எவ்வளவு கீழ்த்தரமான நிலையில் சென்று கொண்டிருக்க முடியுமோ, அவ்வளவு தூரம் போய்க் கொண்டிருக்கிறது. இவைகளைத் தடுத்து நிறுத்த நல்லவர்களையும் உண்மையான உழைப்பாளிகளையுமே இனித் தேர்ந்தெடுக்க மக்களுக்கு நாம் எச்சரிக்கை செய்துகொண்டிருக்க வேண்டும்.

வடக்கு தெற்கு என்று காரணங்கள் காட்டும் சிலர், தியாகிகளின் சிலை அமைக்க பல லட்சம் அங்கும் சில ஆயிரங்கள் இங்கும் செலவிடுவதைச் சுட்டிக் காட்ட முன் வரமாட்டார்கள்! காரணம், தியாகிகளைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்?—அவர்கள் தியாகிகள் பரம்பரையைச் சேராதவர்கள். இதோ நம்கழகம் பிறந்த பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே அவை என்ன சொல்லிற்றே,

அவைகள் யாவும் வெற்றிப் பாதையே நோக்கிச் செல்கின்றன. பல பிரச்னைகள் வெற்றி கண்டும், சில பிரச்னை வெற்றி காண வந்து கொண்டும் இருக்கின்றன. இவைகளையும் வெகு சீக்கிரத்திலே வெற்றி காணுவோம்.

ஆம்; தம்பி! இப்போது நீ நாலா திக்குகளையும் நன்கு நோக்கு. பாரெங்கும் சிதறிக் கிடக்கும் பற்பல சமூகங்களின் உயர் நிலையை எண்ணிப் பார்! தமிழன் தமிழனாக ஒற்றுமையோடு வாழாத காரணத்தினால் தான் நம் மாகாணத்தில் மட்டும் நம் சொந்த இனத்துக்கு உத்தியோகமோ, வியாபாரமோ கிடைக்காமல், வந்தோரும் போவோரும் அதிகாரத்துக்குத் தலைமை தாங்கும் நிலையோடு, முக்கியமான வியாபாரத்துக்கெல்லாம் அவர்களாகவே இருக்கிறார்கள். நமது ஆட்சியாளர்கள் கூட புத்திசாலித்தனமாகத்தான் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க மறுக்கிறார்கள் இங்கே வேறு வேறு நாட்டவர்கள் தானே அதிகமாகப் பணம் திரட்டுகிறார்கள். ஏன்? நீ பாதையிலே பார்த்திருப்பாயே? உன்னுடன் நடந்து போவோர் அத்தனை பேரும் உன் நாட்டார். வாகனத்தில் போவோர் வருவோர் அதிகம் பேர் வேறு நாட்டவர்களே! குடிசையிலும் கூரையிலும் வாழ்பவர் உன் இனம்; மாளிகையிலும் பங்களாவிலும் வாழ்பவரில் மாற்று இனமே அதிகமானவர்! ஆனால் உன் இனம் கடல் கடந்து பஞ்சையாக – பராரியாகப் பாடு பட்டு உழைப்பதைத் தான் நீ தினம் தினமும் பத்திரிகையிலே பார்த்துக் கொண்டிருக்கிறாயே!

இவைகளைச் சமுகமான முறையிலே மாற்றியமைக்க நீ இனிமேல் தான் சுறுசுறுப்பாகவே இருக்கவேண்டும்.

உன் அன்புள்ள தமையன்

# உங்களுடன் ஒரு கணம்...!

தமிழ்ப் பேராசிரியர் திரு ம. ரா. போ. குருசாமி அவர்கள் எழுதும் இலக்கியக் கட்டுரைத் தொடரைப் பற்றிய விளம்பரத்தைக் கடந்த இதழில் வெளியிட்டிருந்தோம். கட்டுரைகளைப் படிப்பதற்கு மிகுந்த ஆவலுடன் காத்திருப்பதாக எங்களுக்குப் பல கடிதங்கள் நிதமும் வந்து கொண்டிருக்கின்றன. 'இலக்கியச் சுவை' இவ்விதழில் ஆரம்பமாகிறது.

திரு பி. எஸ். ராமையாவின் 'போலீஸ்காரன் மகன்' தொடர் கதை இம் மாதம் சுவையான கட்டத்தில் நிறுத்தப் பட்டிருக்கிறது. இந்திரா நம்முடைய அன்புக்கும் அனுதாபத்துக்கும் இலக்கானவள்.

'வாடா விளக்கு' நெல்லையப்பனின் உள்ளப் போராட்டத்துடன் 'தொடரும்' முத்திரை பெற்றிருக்கிறது. மற்ற கதை, கட்டுரை, கவிதைகளும் உங்களைத் திருப்தி படுத்தும்.

கிராமியப் பின்னணியில் புத்தம் புதிய மனோதத்துவச் சூழலுடன் அமைந்திருக்கின்ற 'பூவை' யின் குறுநாவலுக்குப் பெயர்: 'ஆலமரப் பைங்கிளி'. இது அக்டோபர் இதழில் வெளி வரும்.

ஜூன் 'உமா' இதழ் அட்டைப் போட்டியின் முடிவு விவரத்தை அடுத்த இதழில் தான் வெளியிடப் போகிறோம்.

தோள் தொட்டு இதயம் தொட்டு, மனமும் மனமும் பேசிய நிலையில், புன்னகையும் புது நிலவுமாக நின்று கொண்டிருக்கும் இந்த இதழ் அரண்மனைப் புறாக்களின் கதை ஏதாவது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தவர்கள் இப்போதே எழுதத் தொடங்குங்கள். முடிவு நாள்: 31–8–'57.

வணக்கம். —ஆசிரியர்.

இலக்கியத்தைப் படித்து அனுபவிப்பதற்கான முறைகள், மாணவர் உலகம் பொதுவாக எழுப்பும் வினாக்களுக்குரிய விடைகள் முதலியன இத்தொடரின் சிறப்பான பகுதிகளாக அமையும். தமிழ்ப் பற்றுக் கொண்ட உள்ளங்களுக்குத் தமிழ்ப் பேராசிரியரை நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

# மண்டையரும் மதலையரும்

'இலக்கியம்' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றவை யாவை? கவிதையா, உரைநடையா? கதையா, நாடகமா?

இலக்கியம் என்பதுதான் என்ன?

இலக்கியம் என்றவுடனே இவை போன்ற கேள்விகள் எழுகின்றன; எழுவது இயற்கை. ஆனால் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விரிவான விடை சொல்லிக் கொண்டிருக்கும் நோக்கம் இப் எனக்கு இல்லை.

இலக்கியம் கவிதையாயிருக்கலாம்; உரைநடையாகவும் இருக்கலாம். கதை, நாடகம் எந்த உருவத்திலும் காணலாம். வசனத்திற்கு வசனமாய் — கவிதைக்குக் கவிதையாய் — மொழிச் செறிவும், கருத்தாழமும், கற்பனை ஊற்றும் பெற்ற வசன கவிதையாகக்கூட இலக்கியம் உருவாக முடியும்.

இலக்கியப் படைப்பாளனின் நெஞ்சப் பாங்கும், அப்பாங்கினை ஒட்டி உருவாகும் சிந்தனைப் போக்கும், அப்போக்கின் செலாவணிக்கேற்ற உருவும், உருவினை உலவச் செய்வதற்கு உற்பத்தியாகும் நடையும், நடையின் ஊடே இயல்பாக விரவி நிற்கும் மரபும், மரபின் அடிப்படையாக இலங்கும் பண்பாடும் இவையும் இவைபோல்வன பிறவும் தனக்கு இயல்புகளாகக் கொண்டது இலக்கியம். இத்தகைய இயல்புகளைக் கொண்ட இலக்கியம் இடம்,

தமிழ்ப் பேராசிரியர்

**ம.ரா.போ. குருசாமி**

பொருள், காலம் ஆகியவற்றுக் கேற்ற வடிவும் வண்ணமும் கொண்டு புறப்படும். அவ்வாறு வெளிப்படும்போது ஒருவகை 'வேகம்' – 'தீவிரம்' இயல்பாக அமையவும் வேண்டும். வேகம் என்பது வெறியாகி விடக்கூடாது; வெறிக்கு நேர்மாறான நெறியிலே செலுத்தும் வேகம்—ஆக்கச் சக்தியைத் தூண்டும் வேகமே தேவை.

இலக்கியத்துக்கு உரிய இலக்கணங்கள் இவை இவை என எடுத்தியம்பினோர் பலர்; எடுத்துக் காட்டிய இயல்புகளும் பல. ஆனல், இதுதான் இலக்கியம் என்று திட்டவட்டமான வரையறை வகுத்துக் காட்டினவர்கள் இல்லை. எல்லா நல்லிலக்கணங்களும் பெற்று, எல்லா மாசும் நீங்கி ஒளிருவதே இலக்கியம் என்று சுருங்கச் சொல்லலாம்; மேற் குறித்தவாறு ஒருவகையாக வகுத்தும் சொல்லலாம்; விரிவாகச் சொல்லப் புகுந்தால் நூல்கள் பலவாக விரிந்தாலும், இலக்கியத்தின் எல்லை நம்முள் அடங்காது. இலக்கியத்தின் சிறப்புக்களில் தலைசிறந்ததே அதுதான். மனித மனத்திற்கு எல்லை ஏற்படாதவரையில் இலக்கியத்திற்கும் எல்லை கோல எவராலும் இயலாது.

இங்குத் தொடங்கியிருக்கும் கட்டுரைத் தொடரிலே இலக்கியத்தின் எல்லைகளைத் தொட்டுக் காட்டும் முயற்சி அவ்வளவாக இராது. இலக்கியத்தைச் சுவைக்கும் முயற்சியே பெரும் பகுதி இடம் பெறும்.

* * *

இலக்கியத்தைச் சுவைக்கும் முயற்சியில் ஈடுபடுபவனுக்குச் சில இயல்புகள் வேண்டும்.

'என்னில் யாரும் சிறந்தவர் இல்லை; யானே உலகின் முதல் அறிஞன்' என்று மண்டை வீங்கிப் புகுவோனுக்கு இலக்கியச் சுவை என்றுமே சிக்கி விடாது.

கவிதையாயினும், பிற வடிவு பெற்ற இலக்கியமாயினும், அது, உருவாக்கியவனின் நெஞ்சத் தவத்தின் விளைவாக உருவாகின்றது. கவிஞனின் நெஞ்சம் கவிஞனுக்கும் புலப்படாத அடிமன நிலையில் தவம் கிடக்கிறது; கருவுறுகிறது. தவமிருந்து கருவுற்று ஒன்றிலே தோய்கின்ற கவிஞன் என்றே ஒன்றை வெளியிடுகின்றான். அவனுக்கேகூட அது எப்படி உருவாயிற்று என்பது தெரியாமல் போகலாம். ஆனல், வெளியான பின், அது அவன் நெஞ்சத்தின் தவத்தால் உருவான சேய் என்பதை உலகம் ஏற்கவேண்டும். ஏற்பது யென்றால், அச்சிலே ஏற்றுவது என்பது பொருளன்று; சுவைக்க முயலும் அகத்திலே ஏற்க வேண்டும்.

ஒருவன் மனத்தில் உருவானதை மற்றொருவன் அகத்தில் ஏற்பது என்றால், எளிதில் ஆகிற செயல் அன்று. ஏற்க நினைப்பவனும் உருவாக்கியவன் மேற்கொண்ட தவநெறியை ஓரளவேனும் மேற்கொள்ள முன்வர வேண்டும். நெஞ்சத்தால் ஒருமைப்பாடு ஏற்படாத வரையில் கவிஞனின் கவிதையைப் படிப்பவன் சுவைப்பது முடியாது. இலக்கியத்தைப் படைத்தவனின் கலைக் காதல் அதனைச் சுவைப்பவனுக்கும் ஏற்பட வேண்டும். இருபாலருக்கும் காதல் ஏற்படாவிடின்—'கைக்கிளைக் காமம்போல' சுவை தோன்ற வழி இல்லை.

கைக்கிளைக் காட்சிகளில்—அதாவது, ஒருபாற் காதலில் வெறுப்பும் புறக் கணிப்புமே விஞ்சுவதையும் எஞ்சுவதையும் காணலாம். கவிஞனின் நெஞ்சத்தோடு இரண்டறக் கலக்கும் முயற்சி இல்லாத சுவைஞனுக்கு ஏற்படும் அனுபவமும் அதுவேயாக இருக்கும்.

வீட்டிலே நாம் அன்றாடம் காணக் கூடிய ஒரு காட்சி: குழந்தைகள் பலர் வீட்டு முன்னே உள்ள

மணற் பரப்பிலே கூடுகிறார்கள்; வீடு கட்டி விளையாடுகிறார்கள். வீட்டுக்கு உரியவரோ பெரிய பட்டம் பெற்றவர்; கட்டிடக் கலையிலே ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர். அவருடைய குழந்தையின் தலைமையிலே வீடு கட்டி விளையாடும் வேடிக்கை நடக்கிறது. கட்டடக் கலைஞர் இந்த விளையாட்டைப் பார்க்கிறார். முகம் சுளிக்கிறார்; தம் குழந்தையின் அறிவீனத்தை நினைந்து புழுங்குகிறார். காரணம் என்ன? குழந்தைகளின் தெய்விகத் திருவிளையாடலிலே உருவான மாட மாளிகைகளின் பெருமிதக் காட்சியை அந்த மூளையால் காண முடியவில்லை. ம(ண்)டையரின் பகுத்தறிவுக்குக் குழந்தைகளின் பாவனைச் செல்வம் கிட்டவில்லை. ''கையால் வெறும் மணல் குவித்து மாளிகை எழுப்ப முடியுமா? தரையிலே கையால் கோடுகளைக் கீச்சினால் சுவர்கள் எழுமா? மாட மாளிகைகள் உருவாகிவிடுமா? இது வடிகட்டின மடமையாயிற்றே! கட்டிடக் கலை வல்லுநனாகிய என் குழந்தை இப்படி விளையாடலாமோ? அதுமட்டுமா? இந்தப் பயித்தியக்கார விளையாட்டிலே சமையலறைக்குப் பக்கத்திலல்லவா கக்கூசு கட்டியிருக்கிறார்கள்? இது என்ன அறியாமை! அடடா, குழந்தைகளின் மூளையே கெட்டு விட்டதே!'' என்ற சிந்தனைப் போக்கிலே விரைகிறது அந்தப் பட்டதாரியின் அறிவு.

ஆனால், இந்த மண்டையரின் கண்ணுக்கு வெறும் கோடுகளாகத் தெரிந்தவையே குழந்தைகளுக்குப் பெரிய பெரிய மாளிகைகளாகத் தெரியத்தான் செய்கின்றன. வாழ்க்கையின் 'கெடுபிடி' அவ்வளவும் அவர்களின் விளையாட்டு மாளிகையிலே இடம் பெறவே செய்கின்றன. அந்தக் 'கோட்டு' மாளிகையிலே சமையல் நடக்கிறது; கணவன் மனைவியர் இருக்கிறார்கள்; சமையலுக்குத் தாமதம் ஆகிறது; கணவனுக்குக் கோபம் வருகிறது; அடி தடியும் திட்டும்கூட அந்தக் 'கோட்டு' வீட்டிலே, காணலாம். அடேயப்பா,


HEWLETT'S
MIXTURE

ஹியூலெட்ஸ்
மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

அந்தக் கணவனுக்குத்தான் எவ்வளவு கோபம் வருகிறது. மனைவிக் குழந்தை தன் 'குழந்தை'யைத் தூங்க வைக்க என்ன பாடு பாடு படுகிறது, பாருங்கள். மனைவிக் குழந்தையின் பொம்மைக் குழந்தைக்குக் காய்ச்சல் வருகிறது. உடனே மருத்துவர் வருகிறார். யார் அந்த மருத்துவர்? இன்னொரு பொம்மைதான்! மருந்துக் கடை, மருந்து, அதனைப் புகட்டச் சங்கு, மருந்து குடிப்பதற்குக் குழந்தை செய்யும் சண்டித்தனம், மருந்து குடிக்கா விட்டால் எங்கிருந்தோ வரத் தயாராக இருக்கும் பூச்சாண்டி...எல்லாம் அந்த விட்டிலேஉண்டு. எதுதான் அங்கே இல்லை!

குழந்தைகளுக்கு வாய்த்து விடுகிற மனோ பாவம் வாய்த்துவிட வேண்டும். இல்லாவிடின், வெறும் கோடுகளாகத்தான் தெரியும். ஆனால், குழந்தைகளுக்கே கோடு தெரிவதே இல்லை. வாழ்க்கையே குழந்தைகளுக்குத் தெரிகிறது. அந்த விளையாட்டிலே பொய்யோ, புறக்கணிப்போ கிடையவே கிடையாது.

உள்ளத்து உணர்ச்சியால்–உணர்ச்சியின் வித்தாகிய பாவனையால் – பாவனையின் விளைவாகிய கற்பனையால்–கவிஞனும் குழந்தை போலத்தான். அவனுடைய உணர்ச்சியை, பாவனையை, கற்பனையை அதே நிலையிலிருந்து காணவேண்டும். கண்டால், நாமும் அற்புதங்களைக் காணலாம்.

உணர்ச்சியை ஒதுக்கி, பாவனையைப் புறக்கணித்து, கற்பனையை மதிக்காமல், நம்முடைய அறிவை மட்டும் கொண்டு பார்த்தால், மேலே காட்டிய பொறியியல் ம(ண்)டையருக்கும் நமக்கும் வேற்றுமையே இல்லை.

மண்டையருக்கு அற்புதமெல்லாம் அற்பமானதாகத் தெரியும். மதலையருக்கோ அற்பமானதுகூட அற்புதமானதாகத் தெரியும். எல்லாம் பாவனையின் செயற்பாடு.

இந்தக் கருத்துக்களைக் கம்பர் தம்முடைய அவையடக்கத்திலே சுட்டியுள்ளார்:

அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள்
தரையிற் கீறிடின் தச்சரும் காய்வரோ!

இதனை எடுத்துக் காட்டுவமையாகக் கொண்டு, மேலே பாடுகிறார் கம்பர். தம் அவையடக்கத்துக்கு அவர் கொடுத்த உவமை, கவிதைச் சுவை தேடுவோருக்கே எடுத்துக்காட்டாக இருக்கிறது.

வெறும் வறட்டு அறிவுகொண்டு பாவனை யுலகிலே புகவேண்டாம் என்பது கவிஞரின் எச்சரிக்கை. அறிவு முனைப்புடன் ஆராய வேண்டியது இலக்கணத் துறையிலே தான்; இலக்கியத் துறையில் அன்று. 'நூல்' என்னும் சொல் பண்டை வழக்கப்படி 'சாத்திரம்', 'இலக்கணம்' என்னும் பொருளுடையது. இலக்கணத் துறையிலே துடிப்பாக இருக்க வேண்டிய அறிவை – பாவனையை முன்னோடியாகவும் முதலதாகவும் இருக்க வேண்டிய கவிதையிலே தலைமை தாங்கவிடக் கூடாது.

கம்பர் பாடலின் பின் இரண்டு வரிகள்:

இறையும் ஞானம் இலாதஎன் புன்கவி
முறையில் நூலுணர்ந்தோரும் முனிவரோ!

'முற்றும் பாவனை நெறியிலேயே–கற்பனை மெருகிலேயே போகிற என் கவி – குழந்தைகள் கட்டும் மாளிகை போன்ற என் கவி–வறட்டு அறிவின் முரட்டுத்தனத்தைத் தாங்காது. ம(ண்)டையரே, சற்று ஒதுங்கி நில்லுங்கள்; இது மதலையர் உலகம்!' என்று சொல்வதுபோல இருக்கிறது இந்தப் பாடல்.

அப்படியானால், இலக்கிய உலகிலே ஆராய்ச்சிக்கே இடம் இல்லையோ என்று கேட்கலாம். ஆராய்ச்சி செய்யாமல் சுவை எப்படிக் காணமுடியும் என்றும் கேட்கலாம். நேர்மையான கேள்விகள். விடையை அடுத்த கட்டுரையில் காணலாம். ★

இருளும் ஒளியும் முயங்கி மயங்குகிற அந்தி மாலைப்போது. வஞ்சிமா நகரத்துக் கடற்கரை. மறைகின்ற கதிரவனின் செந்நிறக் கிரணங்கள் பட்டுக் கடல் மாணிக்கக் குழம்பென மின்னியது. அலைகளின் 'ஹோ' வென்ற பேரிரைச்சலுக்கு அப்பால் கடற்கரைப் புன்னை மரங்களில் பறவைகளின் பலவிதமான குரலொலிகளும் கடற் கரையை நிறைத்திருந்தன. தொலைவில் கடலுக்குள் சிறிதும் பெரிதுமாக வெள்ளை வெளேரெனத் தெரிந்த பாய்மரக் கப்பல்கள் கரையிலிருந்து பார்ப்பதற்கு அதியற்புத சோபையோடு தென்பட்டன. கடல் காற்று மனோரம்மியமாக வீசிக் கொண்டிருந்தது.

கடற்கரை யருகிலிருந்த சாலையில் 'கல கல' வென்ற மணியொலியோடு ஓர் அழகான தேர் நின்று கொண்டிருந்தது. குதிரைகள்கூடத் தேரிலிருந்து அவிழ்க்கப் படாமலேயே நிறுத்தப்பட்டிருந்தன. ரதசாரதி தேருக் கருகில் நின்றவாறே தொலைவில் தெரியும் கடற்காட்சியின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான்.

அறுபதுக்கு மேற்பட்ட கடற் போர்களில் வெற்றி வாகை சூடியவனும் சேரர் பேரரசனும் ஆகிய செங்குட்டுவனும், அவனுடைய கெழுதகை நண்பரும் புலவர் பெருந்தகையாருமாகிய பரணரும் தான் தேரில் வந்தவர்கள்.

''பரணரே! இம்முறை நான் கடற் போருக்குப் போய் விட்டு வந்த பின் என்னிடம் ஏதாவது மாறுதலைக் காண்கிறீரா? தயக்கமில்லாமல் பதில் சொல்லும்.''

''ஆம், அரசே! தங்கள் கழுத்தில் இலங்கும் நவமணி மாலையில் புதிதாக ஒரு கருநிற முத்து இடம் பெற்றிருக்கிறது. அடிக்கடி இந்த முத்தைத் தொட்டுப் பார்த்தவாறே ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இலயித்துப் போகிறீர்கள். இதன் காரணம் எனக்கு விளங்கவில்லை. இது போரிலிருந்து திரும்பிய தினத்திலிருந்து தங்களிடம் நான் காணும் மாறுதல். இந்த முத்தில் ஏதோ அரிய பெரிய இரகசியம் அடங்கியிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கிறேன்.''

''உம்முடைய அனுமானம் மிகவும் பொருத்தமானதே. இந்த முத்து உள்ளடக்கியிருக்கும் இரகசியத்தை உமக்குச் சொல்லவேண்டும் என்பதற்காகவே இந்தக் கேள்வியை எழுப்பினேன்.''

''அதை நான் தெரிந்து கொள்ள முடியுமானால், என் பாக்கியமே பாக்கியம்.''

''கேளும், சொல்லத்தான் போகிறேன். நீர் என்னைப்

புகழ்ந்து பாடியிருக்கும் பாடல்களில் என்னுடைய கடற் போர் அனுபவங்களை எப்படி யெப்படி எல்லாமோ பாராட்டி யிருக்கிறீர். ஆனால் அவ்வளவு அனுபவங்களும் இந்தக் கருமுத்து எனக்குக் கிடைத்த ஒரே ஒரு அனுபவத்துக்கு ஈடாக முடியாது.''

மன்னரின் மனத்தைக் கவர்ந்த அந்த அற்புத அனுபவத்தை அறியத் துடித்துக் கொண்டிருந்தார் புலவர் பரணர்.

''சொல்கிறேன், கவனமாகக் கேளும். கடம்பர்கள் என்ற ஒரு வகைக் கடற் கொள்ளைக்காரர்கள் அடிக்கடி சேரநாட்டுக்கடல் வாணிகர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெருந் தொல்லை கொடுத்து வந்தனர். அந்தக் கொள்ளைக் கூட்டத்தார்களின் கொட்டத்தை ஒடுக்குவதற்காகவே இம்முறை கடற்படை எடுப்பை மேற் கொண்டேன். இது உமக்கு முன்பே தெரியும். மேல் கடற்கரை ஓரமாகப் பல சிறு சிறு தீவுகள் உள்ளன. இந்தத் தீவுகளில் மறைந்து வசிக்கும் கடம்பர்கள் கடற் போரின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் நன்ருக அறிந்தவர்கள். இவர்களோடு போரிட்டு வென்றதுதான் என் வாழ்வில் முதன் முதலாக நான் அடைந்த மாபெரும் கடற் போர் வெற்றி.

''பரணரே! இந்தக் கடற் போரில் மன்னுதி மன்னன் செங்குட்டுவன் வெற்றி வாகை சூடி உயிரோடு திரும்பியது யாரால் தெரியுமா? சேர நாட்டுக் கடற்படை வீரர்களாலா? அல்லது, வசதிகள் நிறைந்த போர்க் கப்பல்களினுலா? எதனுல்? யாரால்? உண்மை யாருக்காவது தெரியுமா? கேவலம், ஒரு ஏழைப் பரதவப் பெண் (செம்படவப் பெண்)ணுல்தான் செங்குட்டுவன் இந்தக் கடற் போரில் உயிரோடு தப்பி வெற்றி பெற முடிந்தது என்ருல், உலகம் அந்த உண்மையை நம்பாது. நம்புகின்ற துணிவும் திராணியும் அதற்கு இல்லை. ஆனுல், பரணரே! உண்மையை இன்று ஒளிக்காமல் உம்மிடம் சொல்கிறேன். நீராவது தெரிந்து கொள்ளும். நம்பும். சேரர் மன்னனுக்கு ஓர் இளம் பெண் உதவினுள் என்பதை. இருபது போர்க் கப்பல்களும் எண்ணூறு கடற்படை வீரர்களுமாக நாங்கள் போருக்குப் புறப்பட்டோம். வஞ்சிமா நகரமே திரண்டு வந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறிக் கடற் கரையில் வழியனுப்பியது. என் உயிரினுமினிய கோப்பெருந்தேவி வேண்மாள் ஆரத்தி எடுத்துத் திலகமிட்டு அன்போடு விடை கொடுத்து அனுப்பினுள்.

''கடம்பர்கள் வசிக்கும் தீவுகளை முற்றுகையிட்டு வளைத்துக் கொள்வதற்காக மேல் கடற்கரை ஓரமாகவே கப்பல்களைச் செலுத்திக் கொண்டு சென்றேன். எங்கள் படையெடுப்புச் செய்தி தெரிந்து விட்டதாலோ என்னவோ, வழக்கமாக எப்போதும் கடலில் உலாவிக் கொண்டிருக்கும் கடம்பர்களின் கொள்ளைக் கப்பல்களில் ஒன்றுகூடக் கடலில் தென்படவில்லை. சேரநாட்டுப் போர்க் கப்பல் இருபதைத் தவிரக் கடலில் ஈ காக்கை இல்லை. கொள்ளைக்காரர்களின் பயத்தினுல் வாணிபக் கப்பல்களின் போக்கு வரத்துக் கூடச் சில காலமாகத் தடைப்பட்டிருந்தது. கடலில் தென்பட்ட பயங்கரமான இந்தச் சூனிய அமைதி வரப்போகும் பெரிய ஆபத்து ஒன்றின் முன்னறிவிப்பைப் போல எனக்குத் தோன்றியது.

'''கெடுமதி கண்ணுக்குத் தோற்ருது' என்ற பழமொழியில்தான் எவ்வளவு உண்மை இருக்கிறது? இல்லை யென்ருல் எனக்கு அந்த விபரீத ஆசையும் அசட்டுத் துணிச்சலும் தோன்றியிருக்க முடியுமா? பரணரே! எவ்வளவுதான் தைரியசாலியாக இருந்தாலும் பயப்பட வேண்டிய காரியத்துக்குப் பயப்பட வேண்டும்; பயப்படக் கூடாத காரியத்துக்குப் பயப்படக் கூடாது. இந்த உண்மைக்கு முறை மாறி நடந்தால் நிச்சயமாகத் துன்பம் நேரிடுகிறது.''

"தெரியாமலா அரசே, நம்முடைய திருவள்ளுவநாயனர் 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை, அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்று கூறியிருக்கிறார்?"

"ஆகா! அந்தப் புலவர் பெருமானின் வாக்கைப் 'பொய்யாமொழி' என்று சொல்கிறார்களே; அந்தப் பாராட்டுப் பெயர் நூற்றுக்கு நூறு உண்மை, பரணரே! இந்த அருமைக் குறளுக்கு மாருக நடந்துதான் என் உயிருக்கே ஆபத்தைச் சம்பாதித்துக்கொள்ள இருந்தேன். மேல் கடற்கரை ஓரமாகச் சென்று கொண்டிருக்கும் போதே, நானும் அமைச்சர் அழும்பில் வேளும் கப்பலின்மேல் தளத்தில் அமர்ந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியால் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே சென்றோம்.

"ஒன்றரை நாள் பயணம் வரை விசேஷ நிகழ்ச்சி ஒன்றும் ஏற்படவில்லை. இரண்டாம் நாள் மாலை; பொழுது மறைய நான்கைந்து நாழிகை இருக்கும் போது கடலில் எங்கள் கப்பல்கள் சென்றுகொண்டிருந்த இடத்திலிருந்து நேர் தென்மேற்குத் திசையில் கடம்பர்கள் வசிக்கும் பெரிய தீவு ஒன்று தெரிந்தது. நாங்கள் இருக்கும் இடத்திலிருந்து ஒன்றரை நாழிகை படகில் பிரயாணம் செய்தால் அந்தத் தீவின் கரையை அடைந்து விடலாம்.

"தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாக இன்னும் உற்றுப் பார்த்த போது தீவின் கரையோரமாகக் கொள்ளைக்காரர்களின் கப்பல் களும் படகுகளும் நிறுத்தப்பட்டிருப்பது தென்பட்டது. 'வாளும் கேடயமும்' ஆகிய அடையாளங்கள் பொறிக்கப்பட்ட கடம்பர்களின் கொடிகள் அக்கப்பல்களின் பாய் மரங்களுக்கு மேலே கட்டப்பட்டிருந்தன. தீவின் கரையோரத்தில் ஆரவாரத்துக்குரிய எந்த நிகழ்ச்சியும் இன்றி ஜன சந்தடியில்லாது மயான அமைதியாகத் தென்பட்டது.

"'அரசே, கடற்பிரயாணம் தொடங்கி இரண்டு நாட்கள் முழுமையாகக் கழிந்து விட்டன. நேரத்தையும் உணவுப் பொருள்களையும் தீர்த்துக் கொண்டு வருகிறோமே ஒழிய உருப்படியாக ஒரு காரியமும் செய்யவில்லை. கைவசம் கப்பல்களில் இருக்கும் உணவுப் பொருள்கள் தீர்ந்து விட்டால், திரும்பவும் கரைக்குச் சென்று உணவுப் பொருள்களைச் சேகரிப்பது இலேசில் முடியாது. இப்போதே இருட்டியவுடன் படைகளுடன் போய் இந்தத் தீவை முற்றுகையிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது' என்று அழும்பில் வேள் கூறினன்.

"'அழும்பில் வேள்! உன் யோசனை சரியென்றே எனக்குப் படுகிறது. ஆனால் திடுதிப்பென்று தீவின் கரையோரத்தில் போய் முற்றுகையிடுவது கூடாது. என்னென்ன ஆபத்துக்கள் மறைமுகமாக அங்கே காத்திருக்கின்றனவோ? ஆகையால் கப்பல்களையெல்லாம் இங்கேயே நிறுத்தி விட்டு, முதலில் இரண்டே இரண்டு ஒற்றர்கள் சாதாரணப் படகிலே சென்று அங்குள்ள நிலவரத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டு வர வேண்டும். பின்பு சாத்தியமானல் உடனே முற்றுகையை ஆரம்பிக்கலாம்.'

"'நல்லது அரசே! நம்முடைய வீரர்களில் தகுதி வாய்ந்த இருவரை இப்போதே அனுப்ப ஏற்பாடு செய்து விடுகிறேன். மாறு வேடத்திலேயே போகும்படி செய்கிறேன்.'

"'நீ ஒரு அமைச்சனுக்குரிய பொறுப்போடு இப்போது பேசவில்லை, அழும்பில் வேள். தீவின் கரைக்கு ஒற்றர்களை அனுப்பும் இந்த வேலை மிகவும் சர்வ சாதாரணமானது என்று நீ எண்ணுகிறாய். யாராவது இரண்டு வீரர்களை அனுப்பி விட்டால் கடம்பர்களிடமிருந்து தப்பி அவர்கள் உயிரோடு மீண்டு வருவதே துர்லபம். சாகஸத்தில் கைதேர்ந்தவர்கள்

செய்ய வேண்டிய காரியம் இந்த வேலை. இப்போது இந்தச் சமயத்தில் உன்னையும் என்னையும் தவிர வேறு எவரும் ஒற்றர்களாகப் போய் விஷயங்களைத் தெரிந்து கொண்டு உயிரோடு மீள முடியாது.''—அப்போது எனக்கிருந்த அசட்டுத் துணிவில் நானே போய் விட்டு வரமுடியும் என்று எண்ணி இறுமாந்திருந்தேன்.

''அரசே! உயிருக்கு அபாயங்கள் நிறைந்த இந்தக் காரியத்தில் தாங்களே தலையிடுவது எனக்கு அச்சத்தைத் தருகிறது! ஆணையிட்டால் நானும் வேறு சிலரும் போய் வருகிறோம்.''





''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, அழும்பில் வேள்? நீ என்ன பேச்சுப்பேசுகிறாய்? செங்குட்டுவனுக்குத் தன்னுயிரும் பிறர் உயிரும் ஒன்றுதான். சேரர் குடியிலே உயிருக்குப் பயந்தவர்கள் பிறந்ததில்லை. இனிப் பிறக்கப் போவதுமில்லை. புறப்படு இப்போதே. மறுமொழி பேசி நேரத்தைக் கடத்தாதே. படகு தயாராகட்டும். செம்படவர் போலத் தோற்றத்தை மாற்றிக் கொள். இன்னும் ஒன்றரை நாழிகையில் நாம் தீவின் கரையோரத்தில் இருக்க வேண்டும்!'' —எனக்கு ஆத்திரம் வந்து விட்டது. ஆவேசமாகப் பேசி விட்டேன். அழும்பில் வேள் மறு வார்த்தை பேசாமல் தோற்றத்தை மாற்றிக் கொண்டுவந்தான். நானும் தோற்றத்தை மாற்றிக் கொண்டு வந்தேன். இருவர் இடுப்புக் கச்சையிலும் கத்திகள் இரண்டு மறைந்திருந்தன.

''கப்பலுக்கு அருகில் இரண்டுபேர் மட்டும் செல்

ளும்படியான சிறு படகு ஒன்றை அவிழ்த்து நிறுத்தினர்கள் வீரர்கள். எல்லாக் கப்பல்களின் மாலுமிகளையும் படைத் தளபதிகளையும் அழைத்து, நாங்கள் இருவரும் தீவுக்குச் சென்று உளவு பார்த்துக் கொண்டு திரும்புகின்ற வரை கப்பல்களையும் படைகளையும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு' என்று எச்சரித்த பின் நானும் அழும்பில் வேளும் படகில் புறப்பட்டோம்.

''ஆத்திரப்பட்டுச் செய்கின்ற எந்தக் காரியத்தின் விளைவும் துயரம் நிறைந்ததாகவே இருக்கிறது. துரதிர்ஷ்டம் எங்கே, எப்போது, எதற்காக வருகிறது என்று கூற முடிவதில்லை. படகில் புறப்பட்ட நானும் அழும்பில் வேளும் அன்று அப்படிப்பட்ட துன்பத்தை எதிர்பார்க்கவே இல்லை.

''கப்பல்கள் நின்ற இடத்திலிருந்து தென்மேற்காகக் கால் நாழிகை தூரம்தான் சென்றிருப்போம். வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த மேகங்கள் திடீரென்று ஒன்று திரண்டன. வானம் கறுத்தது. சாதாரணமாக வீசிக்கொண்டிருந்த கடல் அலைகளுக்குக் குரூரமான வெறி பிடித்து விட்டது. திசைகள் இருண்டன. காட்டில் கண்ணைக் கட்டி விட்டது போலத் துடுப்பின் இயக்கத்திற்கு அடங்காமல் அலைகளாலும் காற்றாலும் மோதுண்டு, படகு தத்தளித்துத் தறி கெட்டுத் தன் போக்கில் ஏதோ ஒரு திசையில் போய்க் கொண்டிருந்தது. எனக்கும் அழும்பில் வேளுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? எப்படி உயிர் பிழைப்போம்? ஒன்றும் தெரியவில்லை. பெரிய அலை ஒன்று பனை உயரத்திற்கு எழும்பித் தணிந்தது. சுழித்துச் சுழித்து அடித்த கடற் சூறவளியின் பயங்கர ஓசை பிரளய காலத்து ஓசை போலச் செவிகளை அதிரச்செய்து கொண்டிருந்தது. திக்குத் திகந்தங்களெல்லாம் கருமேகங்களால் மைக்குழம்பென இருண்டுவிட்டன.

''பயப் பிராந்தியும், பீதியும் திகைப்பும் குடிகொண்ட முக பாவத்தோடு அழும்பில் வேள் என்னைப் பார்த்தான். 'அரசே! ஆத்திரப்பட்டு வீண் வம்பில் மாட்டிக் கொண்டு விட்டீர்களே?' என்று என்னைப் பார்த்து இரங்குவது போலிருந்தது அந்தப் பார்வை. நான் ஒன்றும் புரியாமல் பதிலுக்கு அவனைப் பார்த்தேன். கண்ணுக்குத் தெரியாத விதி எங்கள் இருவரையும் பார்த்து இரக்கமின்றிச் சிரித்தது!

''அலை கையிலிருந்த துடுப்புக்களைப் பறித்துக் கொண்டது. அலை உயரும் போது படகு உயர்ந்தது. அலை தாழும்போது படகும் தாழ்ந்தது. எதுவும் எங்கள் வசமில்லை. துடுப்புக்களையும் இழந்து விட்டோம். துடுப்புக்கள் இருந்தாலும், அப்போதிருந்த காற்றிலும் அலையிலும் அவைகளைக் கொண்டு எதுவும் செய்வதற்கில்லை. இயற்கையின் அந்தக் கோர விளையாட்டு மிருத்யுவின் வாசலை நோக்கி முடிவற்றுச் செய்யும் இறுதி யாத்திரையாக ஆகிவிடுமோ யென்று என்னுடைய மனம் புழுங்கியது.

''படகு சுழன்று சுழன்று தட்டாமாலை சுற்றுவது போல ஆட்டியதால் அழும்பில் வேள் குமட்டலும் ஓங்கரிப்புமாக வாந்தி எடுக்கத் தொடங்கி யிருந்தான். சற்று நேரத்தில் அவன் தன் நினைவே இல்லாமல் மயங்கிச் சுருண்டு விழுந்து விட்டான். படகில் வாந்தி எடுத்த இடத்திலேயே அவன் உடல் பிரக்ஞையற்று விழுந்து கிடந்தது. 'திரிபுரமெரித்த விரிசடைப் பரமனே! என்னை ஏன் இம்முறை கடலுக்கு நடுவில் இப்படிச் சோதிக்கிறாய்?' என்று 'அவனை' நோக்கிக் கைகூப்பி வணங்குவதைத் தவிர வேறெதுவும் செய்யத் தோன்றவில்லை எனக்கு. உள்ளூர என் மனத்திலேயே பீதி தோன்றி விட்டது.

''மனத்தில் நம்பிக்கையின்மையும் உடல் பலவீனமும் தோன்றி உணர்வுகள் படிப்படியாக ஒடுங்

கிக்கொண்டிருந்த அந்த நேரத்தில், புரண்டுவரும் மலைபோன்ற அலைகளுக்கு அப்பால் ஓர் ஒளி மிக அருகில் தென்பட்டது.

"ஆம்; மிக அருகில் வந்து கொண்டிருந்த ஒரு பாய் மரக் கப்பலின்மேல் தளத்திலிருந்து வந்த விளக்கொளி தான் அது. என் உள்ளத்தில் விநாடிக்கு விநாடி மலினப்பட்டு உருவே இல்லாமல் அழிந்து போய்க் கொண்டிருந்த நம்பிக்கையில் ஒரு புதிய வேகம் உண்டாயிற்று. உடலில் எங்கிருந்து தான் அவ்வளவு தைரியம் வந்து புகுந்ததோ? அலைகளில் மோதுண்டு சென்று கொண்டிருந்த எங்கள் படகுக்கும் அந்தக் கப்பலுக்கும் பத்துக் கோலளவு தூரம்கூட இல்லை. 'ஓ'வென்ற கடல் இரைச்சலையும் மீறிக் கேட்கும்படியாக வாயில் கைவிரல்களைக் குவித்துக் கொண்டு என் சக்தியையெல்லாம் செலவழித்து ஒரு பெரிய கூக்குரலிட்டேன்.

## வாழ்க!

'கல்கி' துணை ஆசிரியர் திரு ரா. வீழிநாதன் அவர்களின் புதல்வி திருமதி **லக்ஷ்மி**க்கும் செம்மங்குடி திரு முத்துஸ்வாமி அய்யர் புதல்வர் திரு **சாம்பசிவ**னுக்கும் விஷ்ணுபுரத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் முடிந்தது. அன்று ரா. வீ—யின் புதல்வர் சிரஞ்சீவி ராமமூர்த்திக்கு உபநயனமும் நடந்தது.

"இப்படி நான்கைந்து முறைகள் கூக்குரலிட்ட பின்பே என் முயற்சி பலனளித்தது. கப்பலின் மேல் தளத்தில் விளக்கு வெளிச்சத்தில் யாரோ வந்து நின்று கொண்டு 'எங்கிருந்து கூக்குரல் வருகிறது' என்று பார்க்கிறாற் போலச் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். பின்பு கொஞ்ச நேரத்தில் கப்பல் எங்கள் படகு இருந்த பக்கத்தில் திருப்பப் படுவதையும் கண்டேன். துரதிர்ஷ்டத்தின் எல்லையில் அதிர்ஷ்டம் நம்மைக் கைவிடவில்லை, என்றெண்ணிக் கொண்டேன் நான். அந்தக் கப்பலில் வருகின்றவர்கள் யார்? அதில் நாம் ஏறிக் கொள்ளலாமா என்ற சிந்தனையே அப்போதைய மனநிலையில் எனக்கு ஏற்படவில்லை. ஒரு துன்பத்தைப் போக்கிக் கொள்ள முயன்று மற்றோர் பெரிய துன்பத்தை விலைக்கு வாங்கிக்கொண்ட கதையாக முடியப் போகிறது என்று அப்போது எனக்குத் தெரியுமா, என்ன?

"கப்பல் படகை அணுகியது. கப்பலின் தளத்திற்கு ஏறிச் செல்லும் படிக்கட்டு வசதியாகப் படகிலிருந்தே தாவி ஏறும்படியாக மிக அருகில் இடித்துக் கொண்டு நின்றது. இரண்டாவது முறையாக இங்கேயும் ஆத்திரப்பட்டு ஒரு பெரிய தவற்றைச் செய்து விட்டேன் நான். 'முதலில் நாம் கப்பலில் ஏறிக் கொள்வோம். பின்பு உள்ளே இருப்பவர்களை உதவிக்கு அழைத்துக் கொண்டு வந்து மயக்க முற்றிருக்கும் அழும்பில் வேலைக் கப்பலுக்குத் தூக்கிக் கொண்டு போகலாம்' என்று எண்ணினேன் நான். படகுக்கு அருகில் கப்பலைக் கொண்டு வந்து நிறுத்தியவர்களில் ஒருவராவது படிக்கட்டில் இறங்கி வந்து படகில் உள்ளவர்களின் நிலையைக் காண வராமலிருந்தது சந்தேகத்துக்குரியதாயினும் எனக்கு அப்போது அந்தச் சந்தேகமே தோன்றவில்லை. அறிகுறியில்லாமல் திடீரென்று வரக்கூடிய ஆபத்து பயங்கரமானது என்பது எவ்வளவு பொருத்தமான கருத்து!

"இரண்டே இரண்டு விநாடிகளில் ஆடித் தத்தளித்துக் கொண்டிருந்த படகிலிருந்து படிக்கட்டில் தாவிக் கப்பலில் ஏறிவிட்டேன். நான்

தளத்தின்மேல் ஏறுகின்ற வரை படகு கப்பலுக்கு அருகிலேயே நின்றது.

''மறுகணம் கோரமாகப் புரண்டு வந்த பெரிய அலை ஒன்று என் தீர்மானத்தையே சிதற அடித்து விட்டது. கப்பலுக்கு அருகிலிருந்து அலையினால் தூக்கித் தள்ளப்பட்ட அந்தச் சின்னஞ் சிறு படகு முப்பது நாற்பது கோலளவு ஒதுங்கி விட்டது. பிரக்ஞையற்றுக் கிடந்த அழும்பில் வேளின் உடல் படகோடு போய் விட்டது. என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்துப்போன நான் தளத்தில் வேகமாக ஓடிக்கொண்டே உள்ளே இருந்தவர்களைக் கூச்சலிட்டு அழைத்தேன்.

''தடதட வென்று பலர் ஓடிவரும் சத்தம் கேட்டது. அப்போது தற் செயலாகத் தளத்திலிருந்த கொடி மரத்தின் மேல் சென்ற என் பார்வை அப்படியே நிலைத்து விட்டது. சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. வாளும் கேடயமும் பொறித்த கடம்பர்களின் கொடி, கொடி மரத்தின் உச்சியில் காற்றிலே படபடத்துக் கொண்டிருந்தது. அந்த ஒரே ஒரு கணத்தில் என்னை நானே கொன்று கொண்டு விட்டது போன்ற ஒருணர்வை அடைந்தேன். ஆத்திரம் என்னை வெகு விரைவில் முட்டாளாக மாற்றிக் கொண்டு வருவதை உணர்ந்தேன். உயிரினுமினிய அமைச்சன் அழும்பில் வேளைக் கடலோடு போகும்படி அனாதரவாக விட்டு விட்டதை எண்ணிய போது அந்த நினைவு இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

''தளத்தில் ஓடி வந்தவர்கள் என்னை வரவேற்ற விதம் எனக்கு இன்னும் பெரிய திகைப்பை உண்டாக்கியது. ஓடிவந்த கடம்பர்கள் அத்தனை பேரும் தளத்தில் என்னைச் சுற்றி வளைத்துச் சக்கரவியூகமாக நின்று கொண்டார்கள். கூரிய முனையுடனே கூடிய நீண்ட வேல்கள் ஒவ்வொருவர் கையிலும் இருந்தன. ஏக காலத்தில் அத்தனை வேல்களும் என் மார்பைக் குறிவைத்து நின்றன. நான் ஒன்றும் புரியாதவனாய் அப்படியே நடுவில் நின்றேன்.

''அணிந்திருந்த உடைகளின் சிறப்பாலும் கம்பீரமான உருவத்தாலும் கப்பலின் தளபதிபோலத் தோன்றிய ஒருவன் என்னை நோக்கிக் கூறிய சொற்கள் எனக்குப் பேராச்சரியத்தை உண்டாக்கின.

''வரவேண்டும், வரவேண்டும். சேர நாட்டு மன்னர் பெருமான் வீராதி வீரர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதனால்தான் இப்படி அவரை வேல் முனையில் வரவேற்கிறோம். தாங்கள் எண்ணற்ற கடற் போர்களில் வாகை சூடியவர்! 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவர்' எனப் பட்டம் பெற்றவர். ஆனால் எங்கள்மேல் எடுத்திருக்கும் தங்களது இந்தப் படையெடுப்பு மட்டும் கடற்போரில் தங்களுக்கு ஒரு தோல்வியாக முடியப் போவதற்காகக் கடம்பர்களின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!'' என்றான். மாறு வேடத்திலிருந்த என்னை அவன் எவ்வாறு கண்டு கொண்டானோ? அவனுக்கு நான் மறுமொழி கூறவில்லை. எனக்குள் 'நான் எப்படிப்பட்ட இடத்தில் எவ்வளவு வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன்?' என்பதைப் பற்றிச் சிந்தித்தேன். இனி இவர்களிடம் கூறிக் கடலில் படகோடு போய்விட்ட அழும்பில் வேளைக் காப்பாற்ற உதவி கோருவதென்பது சாத்திய மில்லாத காரியம். இவர்கள் அந்த உதவியை நிச்சயமாகச் செய்யவும் மாட்டார்கள். தங்களிடம் தனியாக மாட்டிக் கொண்டுவிட்ட எதிரிக்கு ஒரு துணைவனையும் தேடிக் கொடுத்துத் தங்களுக்கே வினைதேடிக் கொள்ள எந்தப் பகைவர்கள்தாம் இணங்குவார்கள்?

''சேரவேந்தர் சிந்திக்கிறார், அப்பா!''

''சிந்திக் கட்டும்! சிந்திக் கட்டும்! இப்போது அவரால் சிந்திப்பதைத் தவிர வேறென்னதான்

செய்ய முடியும்? ஐயோ பாவம்!''

''சே...சே! அதென்ன அப்படிப் பரிதாபகரமாகப் பேசி விட்டாய்? அவர் பெரிய சூரப்புலியாக்கும்! மனசு வைத்தால் இத்தனை பேருக்கு நடுவிலிருந்தும் அவரால் தப்ப முடியாது என்று நினைக்கிறாய்? அவருக்கு எவ்வளவோ தந்திரங்கள், சாமர்த்தியங்கள் எல்லாம், அப்பா!''

''அடேடே! அப்படியா? எனக்கு இதுவரை தெரியாதே இதெல்லாம்....!''

''நான் திகைத்து நின்றுகொண்டிருந்த போது தளபதியும் கப்பலின் மாலுமியும் என்னைப் பற்றி இன்னும் என்னென்னவோ 'வஞ்சப் புகழ்ச்சியாக' இகழ்ந்து பேசினார்கள். அவர்களுடைய உரையாடல் எனக்குக் கோபத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக என் பெருமித உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்தது. 'மனசு வைத்தால் இத்தனை பேருக்கும் நடுவிலிருந்து அவரால் தப்ப முடியாது என்று நினைக்கிறாய்?'–தளபதி என்னை இகழுகின்ற தொனியில்தான் இந்தச் சொற்களைக் கூறினான். ஆனால் என் உள்ளம் என்னைக் கேட்டது: 'மனசு வைத்தால் இத்தனை பேரையும் கடந்து உன்னால் தப்ப முடியாது என்று எண்ணுகிறாய்? அறுபது கடற்போர்களில் ஆயிரமாயிரம் சாகசச் செயல்களைப் புரிந்த செங்குட்டுவன் நீ தானே? இமயம் முதல் குமரி வரை தமிழாட்சி நடத்தி 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்ற மாபெரும் புகழ் நாமம் பூண்ட மன்னர் மன்னனின் மூத்த புதல்வன் நீ தானே? கேவலம், இந்தக் கடம்பர்களுக்குத் தோற்றாய் என்ற பழி உன்னை அடையவிடலாமா?'–மனச்சாட்சி என்னோடு விவாதித்தது. என் ஆண்மைக்கு உரம் கொடுத்தது. நான் சிரித்தேன்.

''மார்பைக் குறிவைத்து நின்ற வேல்களுக்கு அப்பால் தளத்திலிருந்து கண்ணுக் கெட்டிய தூரம் வரை தெரிகின்ற நீலத்திரை கடலைப் பார்த்தேன். மேகங்கள் கலைந்து வானம் வெளி வாங்கியிருந்ததாலும், சுழிக்காற்றின் வேகம் குறைந்து அலைகள் சாதாரண நிலை அடைந்திருந்ததாலும், கப்பலின் தளத்திலிருந்து விளக்கொளி நாற்புறமும் கடலில் பார்வைக்குப் புலனாயிற்று. உற்று நோக்கியதில் கப்பலுக்கு அண்மையில் ஒரு இளஞ் செம்படவப் பெண் கட்டு மரத்தில் வந்து கொண்டிருப்பது என் பார்வைக்குப் புலப்பட்டது. கடல் அப்போதிருந்த நிலைமையில் ஒரு சாதாரணக் கட்டு மரத்தை நம்பிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் துணிவு அசாத்தியமானதாகத் தென்பட்டது எனக்கு. அவள் சாதாரணப் பெண்ணாக மட்டும் தோன்றவில்லை எனக்கு. அவளிடம் ஏதோ விசேஷ சக்தி இருப்பதாக என் உள்ளுணர்வு எனக்குச் சொல்லியது. கட்டு மரத்தில் சிறிதும் பயச்சாயையின்றி அவள் உட்கார்ந்திருந்த எளிமை மனத்தில் சித்திர காவியமாகப் படிந்துவிடக் கூடியது. வானுலகத்து மேனகை கடலைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் இப்படி எளிமையான தோற்றத்தோடு வந்து கட்டு மரத்தில் பிரயாணம் செய்கிறாளோ என்ற பிரமை அவளை அந்த நிலையில் பார்த்தவர்களுக்கு ஏற்படாமல் போகாது. எனக்கென்னவோ என்னையறியாமலே ஒருவித நம்பிக்கை என் இதயத்தில் வளர்ந்து கொண்டிருந்தது. கடம்பர்களின் கப்பலிலிருந்து தப்பித்துக்கடலில் குதித்து விட்டால், அந்தக் கட்டு மரத்திற்கு நீந்திச் சென்று விடலாம். கட்டு மரத்தை அடைந்து விட்டால் எப்படியும் அந்தப் பெண்ணின் உதவி நமக்குக் கிடைக்கும். அது என்ன மாயமோ? இந்த மாதிரி ஒரு நம்பிக்கை என் மனத்தில் தானாகவே உறுதிப் பட்டுக் கொண்டிருந்தது. நல்ல நம்பிக்கை என்பது வெற்றியை அடையும் ஏணியோ, என்னவோ? இல்லையா

னால், அந்தநம்பிக்கையைச் செயற்படுத்தும் துணிவு எனக்கு இவ்வளவு சீக்கிரத்தில் ஏற்பட்டிருக்க முடியுமா?

''என்னைச் சுற்றி வேலும் கையுமாக வளைத்துக் கொண்டு நின்ற அத்தனை கடம்பர்களையும் ஒரு முறை ஓரக் கண்களால் ஏற இறங்கப் பார்த்தேன். கடலில் வளமான பொருள்களை யெல்லாம் கொள்ளையடித்துக் கொள்ளையடித்து, வஞ்சமில்லாமல் உண்டு கொழுத்திருந்தார்கள் அத்தனை பேரும். ஒரு ஆளின் உடல் நான்கு பேரை ஒரே சமயத்தில் எதிர்த்துச் சமாளித்துப் போரிட முடியும். அவ்வளவு கொழுத்த சரீரக்கட்டு!

'' அப்போது அவர்கள் என்னை வளைத்துக் கொண்டு நின்ற நிலையும், என்மேல் செலுத்திக்கொண்டிருந்த இடைவிடாத கவனமும் எனக்குத் தப்புவதற்குச் சிறிதும் வசதியே இல்லாமற் செய்து கொண்டிருந்தன. ஒரே ஒரு கணம் அவர்களுடைய கவனம் என் பக்கமிருந்து விலகினால் போதும்; அந்த ஒரே ஒரு கணத்தைப் பயன்படுத்தி என்னால் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டுவிட முடியும்!

'''ஆனால் அந்த ஒரு கண நேரம் அவர்களுடைய கவனத்தை என்னிடமிருந்து நான் எப்படிப் பிரிக்க முடியும்? பிறரை ஏமாற்றிக் கொள்ளையடித்துப் பிழைப்பதையே தொழிலாகக்கொண்டிருக்கும் கடம்பர்களையே ஏமாற்றுவது என்றால், அது அவ்வளவு சுலபத்தில் நடக்கக்கூடிய காரியமில்லையே? என்ன தந்திரம் செய்யலாம்?' இப்படியாக நான் மலைத்து நின்று சிந்தித்துக்கொண்டிருக்கும் போது கடம்பர்களின் கவனத்தைக் கவரும் பிரச்னையை அந்தப் பெண்ணே தீர்த்து வைத்தாள். நான் மலைத்துப் போய் நின்றேன்!'' என்று நிறுத்திப் பெருமூச் செறிந்தான் வேந்தன்.

## அடுத்த இதழில்:

தொடர்கதைகள்:

**போலீஸ்காரன் மகன்**
பி. எஸ். ராமையா

**வாடா விளக்கு**
'மாயாவி'

*

கட்டுரைத்தொடர்

**இலக்கியச் சுவை**
ம. ரா. போ. குருசாமி

*

**சந்தித்தோம்—சிந்தித்தோம்**
டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

*

கடிதம்

**தம்பிக்கு**
ஜி. உமாபதி

*

பாப்பா உமா

**கதை கதையாம்...**
'கார்த்திகை பாலன்'

*

புதிய பகுதிகள்:

**புதுமைப் பெண்**
'அமிர்தம்'

*

**உலகக் கண்ணோட்டம்**
'பாதசாரி'

*

கவிஞர்கள்—கதாசிரியர்கள்:

**லால்குடி கிருஷ்ணமூர்த்தி, ஐ. சாமிநாதன், பரதன், மு. சண்முகம், கிருஷ்ணா, தணிகை உலகநாதன இரா. இளந்திரையன், நா. பார்த்தசாரதி, சரஸ்வதி ராமனுஜன், பூவை எஸ். ஆறுமுகம்**




## விஜய விகடன்

**ஆசிரியர்:** பா. து. வடிவேலு; **முகவரி:** மலையப் பெருமாள் தெரு, சென்னை-1; **விலை:** தனிப் பிரதி 25 நயா பைசா.

காதலர்களின் உருவங்களை முகப்பில் தாங்கிய வண்ணம் புறப்பட்டிருக்கின்ற சகோதரப் பத்திரிகையை வரவேற்கின்றோம். தமிழ் நாட்டில் பத்திரிகைகள் தோன்றுவது ஒரு புதுமைச் செயல் அல்ல; ஆனால் தோன்றிய இதழ்கள் நிலையான கருத்தோடு நேர்மைத் திறம் குறையாமல் நாட்பட நீடிப்பது தான் மிகவும் புதுமையான செயலாகும். ஆரம்ப இதழில் பிழைகள் பல காணப்படுகின்றன; இனி வரும் இதழ்களிலே இக்குறை நிவர்த்திக்கப் படுமென்று நம்புகிறோம்.

## இலங்கையில் இன்பத் தமிழ்

**ஆசிரியர்:** கா. பொ. இரத்தினம்; **வெளியீடு:** கலைவாணி புத்தக நிலையம், கண்டி; **விலை** ரூ. 1-50.

இலங்கைக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு ஒன்றல்ல, இரண்டல்ல. அதேபோல இலங்கையில் தமிழுக்கு இழைக்கப்பட்டு வரும் தொல்லைகளும் பல உண்டு. சிங்களத்தோடு தமிழும் அரசாட்சி செலுத்தும் விடிவு நாள் ஏற்பட இதுவும் பயன்படும்.

## கள்ளும் கவிதையும்

**ஆசிரியர்:** அ. சுருளியாண்டிப் பாவலர்; **வெளியீடு:** முருக நிலையம், கோம்பை; **விலை** ரூ. 1.

அவ்வப்போது எழுதப்பட்ட கவிதைகள் ஒருசேரத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. போற்றுகிறோம். புத்தகத்தின் பெயர் திருப்தி தருவதாக இல்லை.

"கடலே நீ பொங்குவதும் ஏனோ?—உன்
காதலன் வரவேண்டுதல் தானோ?—அலை
கடலே நீ பொங்குவதும் ஏனோ?...."

"கட்டு மரத்தோடு கப்பலுக்கு அருகில் வந்திருந்த அந்தப் பெண் உல்லாசமாகப் பாடத் தொடங்கியிருந்தாள். மானிட நங்கை ஒருத்தியின் சாதாரணக் குரல் தானா அது? படைத்தவனுடைய கை இவள் தொண்டையைப் படைக்கும்போது அமுதக் குழம்பால் பிடித்துப் பிடித்துப் படைத்ததா? என்ன அருமையான தொனிலாவணியம்? கேட்பவர்களை மெய்ம் மறக்கச் செய்யும்படியான குரலின் சக்தி. இழைந்து கனிகின்ற குழைவு. அது பாட்டா? இல்லை! இல்லை! தெய்வம் நாத வடிவத்தில் அந்தச் செம்படவப் பெண்ணின் நாவிலிருந்து பேசுகிறது.

"இப்படி அந்தக் குரலைக் கேட்டு ரஸித்துக் கொண்டே இருக்கும் போது என்னை மறந்த நிலையிலிருந்த எனக்கு மின்னல் வேகத்தில் ஓர் அரிய சந்தர்ப்பம் வாய்த்தது. என்னைச் சுற்றி வட்டமாக வளைத்துக் கொண்டு நின்ற கடம்பர்கள் யாவரும் பாட்டுக் குரல் வந்த திசையில் திரும்பினர். அவர்கள் கவனம் என்மேலிருந்து சிறிது சிறிதாக முற்றிலும் விலகும்படி செய்து விட்டது அந்தப் பெண்ணின் கீதம். பாட்டு லாஹிரியில் மூழ்கி அவர்களைப் போலவே என் கவனத்தையும் அந்தப் பெண்ணிடம் பறிகொடுத்திருந்த நான் இந்தக் கிடைப்பதற்கரிய சந்தர்ப்பத்தைக்கண்டு விழித்துக்கொண்டு விட்டேன். நான் எதிர்பார்த்த அந்த ஒரு கணநேரம் என் கண் காணவே எனக்குக் கிடைத்து விட்டது.

"என்னுடைய நரம்புகளில் குருதி வெகு வேகமாக ஓடியது. உடல் முழுவதும் புதிய ஊக்கம் கிளர்ந்து பரவியது. நான் துணிந்து விட்டேன்! ஆம்; நான் துணிந்து விட்டேன்!...."

**(அடுத்த இதழ் வரை நீடிக்கும்)**

# உங்கள் இதயங்கள் பேசுகின்றன

திரு 'பதி'யின் ' பண்பு வெட்கப் படுகிறது ' நல்ல அறிவூட்டும் கட்டுரை. அடுத்த இதழை எப்போது பார்ப்போம் என்ற ஆவல்; ஆம், பேராசிரியர், ம. ரா. போ. குருசாமியின் ' இலக்கியச் சுவை' யைச் சுவைக்கத் தான். ' வல்லிக் கண்ணன் அவர்களின் ' திருட்டுப் பையன் ' நல்ல மனோ தத்துவக் கதை. பெற்றோர் படித்துப் பயன் பெற வேண்டிய கதை. இம்மாதிரி எங்கள் உறவினர் பையன் ஒருவனைக் கவனியாமல் விட்டதால், இன்று அவன் ஒரு பைத்தியக்காரனாக நடமாடுகிறான்; அவன் வாழ்வு பாழாகி விட்டது. இம் மாதிரி அறிவூட்டும் கதைகளை 'உமா'வில் தொடர்ந்து எதிர் நோக்குகிறேன்.

**'செல்வன்'**, சேலம்-2.

....இங்கு வாழ்கின்ற மாணவர்களுக்குத் தமிழ்ப் பற்றையும், இன உணர்ச்சியையும் ஊட்டி யிருக்கிறீர்கள் என்பதோடு, 'உமா' பக்தர்களாக்கி, தமிழரசுக் கழகக் கொள்கையர்களாகவும் ஆக்கி விட்டீர்கள் என்பதையும், நீங்கள் வேண்டிய மாணவர் தொண்டு பயனை அளிக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 'உமா' வின் அழகுத் தமிழ் நடை எங்களுக்குச் சுவையைத் தருவதாகவும் இருக்கிறது. மாணவர்களாகிய எங்களுக்கு மிகவும் பிடித்த பகுதி தாங்கள் எழுதி வரும் 'தம்பிக்கு' கடிதத் தொடர்.

**ராஜா.**
பொதுச் செயலாளர்,
பம்பாய்த் தமிழ் மாணவர் மன்றம்.

....'தமிழினத்தின் பொறுமையை அதிகமாகச் சோதிக்காதீர்கள்!' என்ற சென்ற திங்கள் 'உமா'வின் தலையங்கம் சிறந்த முறையில் அமைந்துள்ளது. தமிழகத்தின் உரிமைக் குரல் எழுப்ப அறிவுரை வழங்கி யிருப்பது ஒவ்வொரு தமிழ் மகனையும் உவகையில் ஆழ்த்தும் என்று நம்புகிறோம்.

தீந்தமிழ்ப்படிப்பகம், அய்யம்பேட்டை.

....'சந்தித்தோம்-சிந்தித்தோம்' திரு. பூவையின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

**எம். ஆர். சங்கர்**, இலங்கை.

...இம்மாத 'உமா'வில் 'சந்தித்தோம் சுந்தித்தோம்' வெகு அருமையாக அமைந்துள்ளது. வேறு எப் பத்திரிகையிலும் இல்லாத பாராட்டத்தக்க அம்சம்.

**அ. வேதாசலம்**, அறந்தாங்கி.

....தங்கள் புதிய அம்சங்கள் மிகவும் போற்றப்படும் வகையில் அமைந்துள்ளன. தலையங்கம் நன்முறையில் எழுதப்பட்டுள்ளது. பத்திரிகையை மேலும் படித்து முடித்தவுடன், இலக்கியத்தில் மனம் அதிக நாட்டம் கொண்டு விட்டது.

**சோ. ர. தியாகராசன்**, சோபனபுரம்.

...'எழுத்தாளர்கள் தமிழை வளர்க்கிறார்களா? அல்லது எழுத்தாளர்களை தமிழ் வளர்க்கிறதா?'- இந்தக் கேள்விக்குத் திருப்திகரமான விடையைக் காணும் முயற்சியில் முழு மூச்சுடன் 'உமா' ஈடுபட்டிருக்கும் இலட்சியத்தை 'குகப்ரியை-வசுமதி ராமசாமி' பேட்டியும் ஊர்ஜிதமாக்கியது.

**ஏ. ஆர். ராஜாமணி**, புது தில்லி-5.

## உங்களுக்கு எங்கள் நன்றி

*"அம்மா....!" என்று புரண்டு படுத்தாள் சின்னப் பெண் அல்லி. "ஐயோ, கூடாது!" என்று தீர்மானமாக அலறினுள் பெரியவள் மங்களம். தாய்– மகள் – தந்தை; முக்கோட்டு உருவத்தின் பகைப்புலனில் ஆபத்துக்கு உதவுகிறது சங்கிலி ஒன்று. முடிவு —*

---

# சுபம்!

"அடி, மூதேவி!" என்று அலறிவிட்டாள் மங்களம். அவளுடைய உடலில் ஏற்பட்ட நடுக்கம் இன்னுங்கூட நிற்கவில்லை.

"அம்மா, பயப்படாதேம்மா! மருந்து தரையிலே கொட்டலே, யம்மா," என்று செருமினுள் சிறுமி அல்லி.

கையிலிருந்த அந்த மருந்துச் சீசா முழு உருவுடன் கண்களில் தெரிந்தபோதுதான், அவளுக்குப் போன உயிர் திரும்பியது.

தன் மகளின் கண்ணீரைத் துடைத்து விட்டவாறே," "அழாதேம்மா, கண்ணு!" என்று கெஞ்சினுள் மங்களம்.

"நான் அழலே, அம்மா. என்னை அழவேணுமின்னிட்டு நீ அழறியே அம்மா?" என்று கேட்டுச் சிரித்தாள் குழந்தை.

அவள் சிரிக்கத்தான் எத்தனித்தாள்; முடியவில்லை. 'அடிமூதேவி!' என்று அவள் சற்று முன் திட்டின சொற்கள் அவளைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தன.

"நீயா மூதேவி?... ஊஹூம், நான்தான்!....பெற்ற மகளுக்குப் பிடி சோறு போட வகையில்லாமல் தவிக்கிற நானேதான் மூதேவி ....பாவி!" என்று வாய்விட்டுக் கதறினுள் மங்களம்.

"மங்களம்!" என்ற குரல் தேய்ந்து வந்தது.

அவள் திரும்பினுள்.

"மங்களம், நீ பாவியல்ல .... நான்தான் பாவி.... கொண்ட மனைவியையும் பெற்ற மகளையும் பரிதவிக்க விட்டிருக்கிற இந்தப் பாவிதான் தண்டனைக்குரியவன்; நான்தான் பாவி!" என்று சொல்லிக் கண்ணீர் வடித்தான் சேகரன். அடுத்த விநாடி, அவன் ஓயாமல் ஒழியாமல் இருமத் தொடங்கினுன். உடம்பெல்லாம் நடுங்கிற்று; கீழ் மூச்சு, மேல் மூச்சு வாங்கியது. தட்டுத் தடுமாறிவிட்டான்.

"நீங்கள் ஏன் இப்போது வந்தீர்கள் அத்தான்?....வாருங்கள்; டாக்டரிடம் மருந்து வாங்கி வந்திருக்கிறேன்....பத்தியம் வைத்துத் தருகிறேன்," என்ருள் மங்களம்; பேச்சிற்குச் சிரிப்பு துணை சேர்ந்தது. துன்பத்துக்கு மாற்று மருந்து சிரிப்புதான்!

அவன் ஒப்பனைக்குச் சிரித்தான்.

அவனது கைத்தலம் பற்றி இட்டுச் சென்று கட்டிலில் அமர்த்தினுள் அவள். அவனுடைய காரியம் யாவிலும் கை கொடுப்பவளாயிற்றே!

வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. ஓடோடி வந்தாள் மங்களம். அவள் நிழலில் அல்லியின் நிழல் அண்டியது. காலை வெயில் கண்ணைக் குத்தியது. விழித்துப் பார்த்தாள். தபாற்காரன் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தான். பக்கத்து வீட்டுப் பங்கஜம் கையில் கடிதத்துடன் உள்ளே நுழைந்ததை மங்களம் பார்க்கத் தவறவில்லை.

மங்களத்திற்கு வாய் திறந்து, கண் திறந்து அழுது தீர்க்க வேண்டும் போலிருந்தது. மகள் அவளது அழுகைக்குத் தடையாக நின்ருள்.

"வாம்மா, அல்லி! தோசை சுட்டுத் தாரேன்; பள்ளிக்கூடத்துக்குப் போகணுமில்லே! நேரமாச்சு.... வா....வா!"

''முதலிலே அப்பாவுக்கு மருந்து கொடு அம்மா; அப்புறம் பத்தியத்துக்கு ஏற்பாடு பண்ணு. அதுக்கப்புறந்தான் நான் சாப்பிடுவேன் .... பள்ளிக்கூடம் இருக்கட்டும்.... எங்கேம்மா ஓடிடப் போகுது?....''

ஏழு வயசுப் பெண் குழந்தை பேசுகிற பேச்சா இது?

*

பட்டணம் கண் வளர்ந்து கொண்டிருந்தது.

மங்களத்திற்கு உறக்கம் பிடிக்கவில்லை. தன் அத்தானையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சேகரன் அப்பொழுதுதான் தூங்க ஆரம்பித்திருந்தான். புகைந்து கொண்டிருந்த இருமல்கூட உறங்கத் தொடங்கி யிருக்க வேண்டும்.

அலாரம் கடிகாரம் அவளது கண்ணோட்டத்தில் நிலைத்தது. இன்னும் அரை மணி கழித்து அவள் அவனுக்கு மருந்து கொடுக்க வேண்டும். எதிரே சுவரில் பொருத்தப்பட்டிருந்த அலமாரியிலிருந்த 'குட்டி ஆஸ்பத்திரி' அவளுடைய நர்ஸ் அலுவல்களைப் பற்றிய குறிப்புக்களை வழங்கியது. அல்லும் பகலும் அவள் பட்ட பாடு கொஞ்சமா, நஞ்சமா? ஒரு நாளா, இரண்டு நாளா? இருபது நாட்களென்றால், அல்ப சொல்பம் அல்லவே!

மங்களம் பெருமூச் செறிந்தாள்; அனுபவித்த அல்லல்களின் ஆற்றாமை இருந்தது. கண்கள் கலங்கின; அடைந்த வேதனைச் சுமை இறங்கி, விடிவு ஏற்படும் நாளைத் தேடிக் கொண்டிருந்தது முதல் கண்ணீர்த்துளி. ''கற்பகாம்பிகே!'' என்று முண முணத்தாள்.

கடைசியில், அவளது நினைவுத் தேர் 'நிலை'க்கு வந்து நின்ற சமயம், மேஜைமீதிருந்த மருந்துச் சீசா தென்பட்டது. இன்னும் சில நிமிஷங்களில் அதுவும் காலியாகி விடும். அப்பால்...? கேள்விக் குறிக்கு விடை சொல்ல அவளால் இயலாது. ஏனென்றால், காலையில் அந்த டாக்டர் சுந்தர மூர்த்தி அவளிடம் அவ்வளவு நிர்த்தாட்சண்யமாகப் பதில் சொல்லி விட்டார். ''அம்மா, நான் இப்படிச் சொல்கிறேனே யென்று வருத்தப்படக் கூடாது. உங்கள் கணவருக்கு நான் இத்தனை நாட்களாகப் போட்ட இஞ்செக்ஷன்-கொடுத்த மருந்து எல்லாவற்றிற்கும் கணக்குப் பார்க்கையில், அறுபது ரூபாய்க்கு வருகிறது. இனியும் என்னால் தாள முடியாது. ஆகவே, நாளைக்கு மருந்துக்கும் ஊசிக்கும் குறைந்த பட்சம் பத்து ரூபாயாவது தயார் செய்து கொண்டு வந்தால், நான் உங்கள் புருஷனைக் கவனித்து வைத்தியம் செய்கிறேன். இல்லையென்றால்...?''

டாக்டரின் அரை குறைப் பேச்சு அவளுக்கு முழுப் பேச்சாக எதிரொலிக்கத் தவறவில்லை. இல்லையென்றால்....டாக்டர் வரமாட்டார்; ஆம்; வைத்தியம் செய்ய வரவே மாட்டார். அப்புறம் சேகரனின் கதி என்னவது ....?

அவளுக்கு மேனி சிலிர்த்தது. டாக்டர் அவளது மனக் கண்ணில் தோன்றினார். கை எடுத்துக் தொழுதாள் அவள். கண்கண்ட தெய்வம்தான் அவர். இதுவரைச் செய்த உதவியை அவள் எவ்வாறு மறப்பாள்? ஆனால் பொழுது விடிந்ததும், பணத்திற்கு வகை செய்ய வழி தேடினாள். மூளை வலித்ததுதான் மிச்சம். பலன் எதுவும் இல்லை. யாரிடம், எந்த முகத்துடன் அவள் இனி கடன் கேட்க முடியும்? அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் இதயமுள்ளவர்கள். சில்லறைக் கடனுக்கு அவளை நச்சரிக்காமல் விட்டு வைத்திருந்தார்கள். அவள் பிழைத்தாள்!

மணி பன்னிரண்டரை!

சுய நினைவு சிலிர்த்தெழுந்தது. எஞ்சியிருந்த மருந்தைக் குலுக்கி அவுன்ஸ் கிளாஸில் ஊற்றினாள் மங்களம். அவளுடைய பதியைப் பற்றிக் கொண்ட 'டைபாய்ட்

ஜுரத்'த்திற்கு 'விடிவு' ஏற்படுத்தியது அதே சீசாதான். விடிவுக்கு முற்றுப்புள்ளியிடும் தருணம் பார்த்து, அந்த வியாதி மறுபடியும் திரும்பி விட்டது; அதுமட்டுமல்ல; பாவம், இருமலை வேறு கிளப்பி விட்டது.

"பாவம், சோதனையாட்டம் எல்லாம் நடக்குது நம்ம மங்களத்துக்கு!" என்று அனுதாபப் பட்டார்கள் ஒரு சிலர்; 'நம்ம' என்ற உரிமைக்கு உறவு கொள்ளும் அளவுக்கு 'ஈரம்' கொண்டிருந்தவர்கள் அந்தப் பெண்கள்.

சோதனை!

நினைவு பன்னிரண்டு மைல் கற்களைத் தாண்டி ஓடியது.

தானும் சேகரனும் புருஷன் – மனைவியாக சமுதாயத்தின் அரங்கிலே அறிமுகப் படுத்தப்பட்ட பொன்நாள் தோன்றியது; புத்துயிர் பெற்றது. உறவு முறையற்றவர்கள் உறவு பூண்டொழுகும் புனிதத் திருப்பத்திற்கு– ஆனந்தச் சூழ்நிலைக்கு ஆளான சம்பவம் கதை

யல்ல. உண்மை நடப்பு அது. இருவர் மூவர் ஆயினர். காலம் ஓடியது. 'செக்ரடேரியட்' உத்தியோகத்தில் மண்ணைத் தூவியது, சேகரனிடம் புதிதாக முளைத்தெழுந்த இலக்கிய ஆர்வம். சிந்தனையும் தானுமாக, பேப்பரும் பேனுவுமாகப் பொழுதை விரயப்படுத்தினன் அவன். அவன் எழுதிய கதைகள் அச்சேறின. பலர் அவற்றை ரசித்தார்கள். எழுத்தாளர் புகழ் ஏணியில் ஏறிக் கொண்டிருந்தார். மாதப் பத்திரிகையான 'சுபம்' அவரையும் தன் ஆசிரியர் குழாத்துள் அடக்கிக் கொண்டது. சேகரன் நல்ல மூச்சு விடுவதற்குள், அந்தப் பத்திரிகை 'சுபம்' சுபமடைந்து விட்டது. கடவுள் பேரில் பாரத்தைப் போட்டிருந்த சமயத்தில், சேகரனுக்கு ஓர் அச்சகம் கதவு திறந்தது. தயாராகும் புத்தகங்களுக்கு 'ப்ரூப்' பார்க்கும் பொறுப்பு பதினெட்டு மாதங்கள் வரை நீடித்தது. அச்சகம் அதற்கு மேல் நீடிக்கவில்லை.

"அத்தான், கடவுள் நம்மை ரொம்பவும் பரிசோதனை பண்ணுகிருர். இல்லையென்றால், ஏழெட்டு வருஷம் ஒண்ணுந் தேதி சம்பளம் கிடைச்சதற்கு தலை முழுக்குப் போடவேண்டி வந்திருக்குமா?.... இல்லை, மாசத்திலே ஏதோ ஒரு தேதியிலே சம்பளம்னு ஒரு தொகையைக்கொடுத்து வந்தபத்திரிகைதான் நின்னு போயிருக்குமா? இல்லை, தினச் சம்பளம் தந்த அச்சாபீஸ்தான் திடுதிப்பென்று மூடப்பட்டிருக்குமா?... என்னமோ, எல்லாம் ஆண்டவன் கிருபை!" என்று கண் கலங்கக் கூறி வருந்தினள் மங்களம்.

"மங்களம், கவலைப் படாதே. எதெது, எப்படியெப்படி நடக்கணும்னு லவிதமோ அப்படித்தான் நடக்கும்...நாம் ஆண்டவனை நம்புகிறவங்க; நம்ப வேண்டியவங்க. 'அவன்' நம்மைக் கைவிடமாட்டான். எல்லாப் பத்திரிகைக்கும் கதைகள் எழுதப் போகிறேன். அந்த வருமானத்தைக் கொண்டு ஒரு மாதிரியாக நம்ப குடும்பச் சக்கரம் ஓடி விடும்னுதான் நினைக்கிறேன்," என்று தேறுதல் சொன்னன் சேகரன். அன்று அவன் சொன்ன 'தேறுதல்' மெய்ப்பிக்கப்பட்டு வந்தது—சென்ற மாதம் வரை. ஆனல் போன மாசம்தான் அவன் படுக்கையில் கிடத்தப்பட்டு விட்டான்!

மங்களத்தின் தலையில் இப்போது குடும்பப் பொறுப்பு விழுந்தது. அந்தக் கடமை யுணர்ச்சியின் பலி பீடத்தில் அவளுடைய தங்க வளையல்களும் கழுத்துச் சங்கிலியும் தாரை வார்க்கப்பட்டன. அதன் பலன் — அவளுடைய புருஷனின் வியாதி விடை பெற வேளை பார்த்தது; சிறுமி அல்லி கண்களைக் கசக்காமல் இருந்தாள்; மங்களத்தின் உடலிலே உயிர் தரித்திருந்தது.

இந்தத் திரிசங்கு சொர்க்க நிலை ஒரு வாரம் நீடித்ததே பெரும் பாடாகி விட்டது. இருபது, இருபத்தைந்து நாட்கள் வரை காலணக்கூட வருமானம் இல்லையென்றால், ஏழைக் குடும்பத்தின் கதி எப்படி இருந்திருக்கும்?

தன் குடும்ப நிலவரம்—அந்த நிலவரத்தின் பொருளடக்கமாக அமைந்த வறுமை, பணக்கஷ்டம் எல்லாம்—மூன்றும் பேருக்குத் தெரியலாகாது என்று பயந்த அவளுக்கு அதற்கு மேலும் குடும்பத்தை நிர்வகிக்க இயலவில்லை. சுய நினைவற்றுக் கிடந்த கணவனின் கண்ணுக்கு எதிரிலேயே பாத்திரம் பண்டங்கள் ஒரு சில வெள்ளி நாணயங்களாக உருமாறி அவள் கைக்குள் தஞ்சம் புகுந்தன. பஞ்சை உள்ளத்தில் நஞ்சாக அமைந்தது அந்நிகழ்ச்சி.

"அம்மா, ஸ்கூலிலே இன்னிக்கு சினிமா காட்டறாங்க அம்மா. புதுக் கவுன் போடம்மா!" என்று ஒரு நாள் நச்சரித்தாள் அல்லி.

மங்களத்தின் பெயர்தான் மங்களம். அபலை புதுச் சட்டைக்கு எங்கே போவாள்? மகளை 'தாஜா'

பண்ணி அனுப்பி விட்டாள், பழைய கிழிசல் துணியுடனேயே.

வீட்டு வாடகை கொடுக்க வேண்டும்; டாக்டருக்குக் கொடுக்க வேண்டும்: மளிகைக் கடைக்காரருக்குப் பாக்கி — அவள் விம்மினாள்.

ஒரு நாள் யோசனை ஒன்று தோன்றியது. உள்ளே பூஜை அறையிலிருந்த 'கள்ளிப் பெட்டி'யைத் திறந்தாள். தன் கணவரின் 'பைல்' இருந்தது. அதை எடுத்தாள். அரை குறையாக எழுதப்பட்டிருந்த கணவரின் கையெழுத்துப் பிரதிகள் — கதைகள் ஏதாவது இருக்குமா என்று தேடினாள். ஒரே ஒரு தாள் மட்டுமே இருந்தது. வேகமாகப் படித்தாள். என். ஜி. ஓ. குமாஸ்தா ஒருவன். அவன் திடுதிப்பென்று உடல் நலம் கெட்டுப் படுக்கையில் சாய்ந்து விடுகிறான். மனைவி துடிக்கிறாள்—இந்த மட்டுக்குத்தான் முன் கதை எழுதப்பட்டிருந்தது. ஒன்றிரண்டு நிமிஷங்கள் யோசித்தாள். மேற்படி கதையைப் பூர்த்தி செய்து அனுப்பி விடுவது என்று திட்டமிட்டாள். அன்று இரவு பூராவும் தூங்கவில்லை; மூளையைக் குழப்பிக் கொண்டாள். காலையில் நல்ல கதை ஒன்றைச் சிருஷ்டித்து விட்டாள். சேகரன் படித்துக் காட்டும் கதைகள் இவளிடம் 'ஓ. கே' பெற்ற பின்னர் தானே தபாலில் சேர்க்கப்பட்டு வந்தன! ஆகவே, அவளுடைய முயற்சிக்கு அதுவே பிள்ளையார் சுழி என்றாலும், கதை என்னவோ நன்றாக — ஜீவனுள்ளதாக அமைந்து விட்டது. கதையில், தான் படைத்த அச் சிறுமி ஏழைத் தம்பதிகளின் வாரிசு — நல்லதொரு குணச் சித்திரமாக அமைந்து விட்டாள்....!

கதையை ஒரு முறை படித்துக் கொண்டிருக்கையில், அல்லி வந்தாள். "அம்மா, நானும் கேட்கிறேனே, படித்துக் காட்டு; இல்லாப்போனா நானே எப்படியோ

படிச்சுப் புரிஞ்சுக்கிறேன்," என்றாள் சிறுமி. சிரித்துக் கொண்டே அவளுக்குக் கதையைப் படித்துக் காட்டினாள்.

அல்லி, "சபாஷ்... ரொம்ப நல்லாயிருக்கு. எனக்குக்கூட கண்ணீர் வந்திடுச்சு!" என்றாள்.

பிறகு, கதைத் தலைப்புக்குக் கீழே தன் கணவன் சேகரனின் முகவரியையும் குறித்தாள் மங்களம். அல்லி மூலம் அக்கதையைத் தபாலில் சேர்ப்பித்தாள்— 'தமிழமுதம்' என்ற மாத இதழுக்கு. இப்பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் கதை தேர்வு பெற்றுப் பிரசுரமாகி விட்டால், இதழுடனேயே அன்பளிப்பும் வந்துவிடும் செய்தியை அவள் அறிந்திருந்தாள்.

ஆகவே, கடந்த சில நாட்களாகத் தபால்காரனின் வரவுக்காகத் தவம் கிடந்தாள் மங்களம். அந்தப் பத்திரிகை அன்று வரை ஒரு தக

பிறர்க்கு போதிப்பவர்கள் இருக்கிறார்களே. அவர்கள் உங்களைக் குறைத்து சாப்பிடும்படி சொல்வார்கள். ஆனால் அவர்களோ இருபத்திநான்கு மணி நேரத்தில் பத்து தடவை சாப்பிடுவார்கள்.

— கார்க்கி

வலையும் தெரிவிக்கவில்லை. ஒரே ஏமாற்றம்!

அன்று மாலையில் நடந்த சம்பவம் நினைவில் எழுந்தது.

“அம்மா, நீ அனுப்பின கதை என்னாச்சு?” என்று சிறுமி அல்லி கேட்டாள்.

“இன்னும் திரும்பிக்கூட வரவில்லை. கடவுள் புண்ணியத்திலே அதுமட்டும் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், கட்டாயம் இருபது ரூபாயாவது வரும். சமயத்துக்கு ரொம்ப உதவியாயிருக்கும். பொழுது விடிஞ்சதும் டாக்டருக்குப் பணம் பத்து ரூபாயாச்சும் கொடுத்தால்தான், உன் அப்பாவுக்கு வைத்தியம் செய்வார். கையோடு பார்த்தால்தான், திரும்புகிற மாதிரி இருக்கிற காய்ச்சல் அத்தோடே குணப்படும். அம்மா அல்லி, நான் கதை எழுதி அனுப்பினதை உன் அப்பாவிடம் சொல்லிடாதே.... ஞாபகம் வைத்துக் கொள்!” என்றாள் மங்களம்.

“அது சரி; பணத்துக்கு இப்போ என்னம்மா பண்றது?” என்று அழுது கொண்டே வினவினாள் சிறுமி.

“ஆண்டவன்தான் வழிகாட்ட வேணும்; கற்பகாம்பிகையும் கபாலீஸ்வரரும்தான் கண் திறக்க வேணும்,” என்று மங்களம் அழுதாள்.

நினைவு தடம் புரண்டது. மங்களம் பூலோகத்திற்கு வந்தாள். ஆந்தையின் அலறல் அடையாளம்.

“ஐயையோ, அத்தானுக்கு மருந்து கொடுக்கணுமே!” என்று பதறியவாறு திரும்பினாள் அவள்.

பாவம், சேகரன் பைத்தியங் கொண்டவன் போல, காகிதத்தில் ‘விறு விறு’வென்று என்னவோ எழுதிக் கொண்டிருந்தான். முகத்தின் அழகுக்குத் திரையிட்டிருந்தது தாடியும் மீசையும். அவன் கண்களிலே கண்ணீர்.

“அத்தான்,” என்று அலறிக் கொண்டே ஓடினாள் மங்களம். ஒரு வேளை, தன் கடைசிக் கடிதத்தைத் தான் அப்படி வெறியோடு எழுதுகிறாரோ அத்தான் என்ற பதட்டம் அவளுக்கு.

சேகரன் தலை நிமிர்ந்தான்.

“ஏன் மங்களம், அழுகிறாய்?”

“அழவில்லை.... நீங்கள் என்ன எழுதுகிறீர்கள்?”

“கதை!....”

“ஐயையோ, இந்த உடம்போடு மூளைக்கு வேறு வேலை கொடுத்தால், அப்புறம் என்னாவது? முதலில் மருந்தைச் சாப்பிடுங்கள். பிறகு நிம்மதியாகத் தூங்குங்கள், அத்தான்!....”

“நீ இன்னும் தூங்காமல் இருக்கிறாயே?”

“பரவாயில்லை,” என்று பதில் சொல்லிவிட்டு, மேஜைமீதிருந்த பேனா, காகிதம் எல்லாவற்றையும் எடுத்துப் பெட்டியில் திணித்தாள் அவள்.

மருந்து குடித்தான்; சற்றுநேரம் சும்மா இருந்தான்; படுத்துக் கொண்டான் சேகரன்.

நல்ல மூச்சு விட்ட்படி, கூடத்துக்கு வந்தாள் அவள். அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் அல்லி. பால் வழியும் முகத்தில் சிரிப்பின் ரேகைகள். கழுத்தில் இழைநதிருந்த தங்கச் தங்கிலியைக் குனிந்து பார்த்தாள். மூன்று வருஷங்களுக்கு முன்னால், அவளுக்குச் செய்து போட்ட தங்கச் சங்கிலி அது. சங்கிலி அல்லிக்கு

நிரம்பவும் எடுப்பாக அமைந்து விட்டது. நாற்பது ரூபாய் பெறுமானம் உள்ளதாயிற்றே!

இப்பொழுது மங்களத்தின் பேதை மனத்தில், அவள் படைத்த அந்தச் சிறுமி தோன்றினாள்; கதைக்கு உயிர்நாடியான அந்தக் குழந்தை தோன்றினான். பெற்றோர்களுக்காகத் தியாகம் செய்யத் துணிந்த அந்தக் குழந்தை மனம் அவளது மனத்தில் நிழலாடியது.

ஒரு கணம் சிலையானாள் மங்களம். விடிய விருக்கும் பொழுது அவளுக்குப் பயம் விளைவித்தது. கணவரின் நோயும், அல்லியின் கழுத்துச் சங்கிலியும் எதிரும் புதிருமாகச் சுழன்றன.

'குழந்தையின் கழுத்துச் சங்கிலியை விற்று...' — மேற்கொண்டு அவளால் நினைக்கக்கூடத் தெம்பில்லை.

''அ....ம்...மா!'' என்று புரண்டு படுத்தாள் அல்லி.

'ஐயோ, கூடாது!....' என்று அலறினாள் தாய்க்காரி.

*

அன்று வெள்ளிக் கிழமை.

''தாயே, எனக்குத் தாலி பாக்யம் அருள்!'' என்று பிரார்த்தித்துக் கொண்டே எழுந்தாள் மங்களம்.

மனை விளக்கு அவள்; மனை மங்களகரமாகத் திகழ்ந்தது. பூவும் மஞ்சளும் குங்குமமும் திகழ அவள் நின்றாள்.

உலகைத் தங்கமாக்கிக் கொண்டிருந்தான் இளங்கதிர்ச் செல்வன்.

டாக்டருக்குப் பணம் கொடுப்பதற்கு வழி என்னவென்று யோசித்தாள் மங்களம். இன்னமும் எந்த ஒரு வகையும் மட்டுப்படவில்லை.

'ஊசிக்கும் மருந்துக்கும் குறைந்த பட்சம் பத்து ரூபாயாவது தயார் செய்து கொண்டு வந்தால், நான் உங்கள் புருஷனைக் கவனித்து வைத்தியம் செய்கி

நாவடக்கம் என்றால் என்ன? 'வாயடக்கமாயிரு' எனில் 'பேசாமல் ஊமையாயிரு' என்றோ பொருள் கூறுவது? பேசத் தகாததைப் பேசாதே என்பதன்றோ உண்மைப் பொருள்.

— திரு. வி. க.

றேன்....!' என்னு டாக்டர் கூறிய சொற்கள் அவள் செவிகளில் எதிரொலித்தன.

வீட்டைச் சுற்று முற்றும் பார்த்தாள் அவள். சிந்தனை காட்டாத வழியை அந்த வீடு எவ்வாறு காட்ட முடியும்? — தலை கனத்தது தான் மிச்சம்.

சேகரன் படுத்திருந்த கட்டிலை நெருங்கினாள் மங்களம். அவன் என்னவோ முனகிக் கொண்டிருந்தான். உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். அது அனலாகச் சுட்டது.

நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதிக்கொண்டிருந்த அல்லியைப் பார்த்தபடி, வேளியே வாசலுக்கு வந்தாள் அவள். கைகால்கள் உதறின; நெஞ்சில் நெருப்பு பற்றிக் கொண்டு எரிந்தது. வெளியே நின்றவாறு ஜன்னல் வழியே கூடத்தை நோக்கியபோது, கொடியில் கிடந்த அந்தப் பட்டுப்புடவை அவளுடைய கண்ணில் பட்டது. விரைந்து சென்றாள். அதை எங்காவது அடகு வைத்து, அல்லது விற்று பத்து ரூபாய் புரட்டலாமே என்ற ஆசை அவளுக்கு. புடவையை எடுத்தாள். நாலு இடங்களில் எலியின் பற்கள் ஒட்டை செய்திருந்ததைக் கண்டாள்; நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. அழுதாள்; அழுதாள். வேறு வழி ஏது!

மங்களம் இறுதியாக ஒரு முடிவிற்கு வரவேண்டியவளானாள். அந்த முடிவு இதுதான்: முதலில் தபாலாபீசுக்குப் போய், 'தமிழ

முதம்' அலுவலகத்திலிருந்து ஏதாவது அன்பளிப்பு அல்லது தகவல் வந்திருக்கிறதா என்று அறிந்து கொள்வது; முதல் திட்டம் தோல்வி கண்டால், டாக்டரிடம் போய் அவருடைய காலில் விழுந்து கெஞ்சிக் கதறி, தன் கணவனுக்கு வைத்தியம் செய்யும்படி வேண்டி, தாலிப் பிச்சை தரும்படி பிரார்த்திப்பது.

தபால்காரன் தங்கசாமியும் டாக்டர் சுந்தர மூர்த்தியும் அவளுடைய கண்களிலே இரு கடவுள்களாகச் சுழன்றார்கள்.

அல்லிக்கு 'நாஸ்தா'வுக்கு வழி பண்ணினாள் மங்களம்; கணவனை எழுப்பி, காலைக் கடன்களை முடிக்கச் செய்தாள். மீதமிருந்த சாத்துக்குடிப் பழத்தை உரித்துச் சுளைகளைத் தட்டில் வைத்துக் கணவனிடம் நீட்டினாள்.

''ஸ்கூலுக்குப் போயிட்டு வாரேம்மா!'' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள் அல்லி.

ஒரு மைல் தொலைவில் இருந்த போஸ்டாபீஸ் அவள் மனக்கண் முன் தெரிந்தது; புறப்பட்டு விட்டாள் மங்களம். விதி யாரை விட்டது? அவள் வசிக்கும் தெருவிற்கு வரும் தபால்காரன் சற்று முன் தான் 'லெட்டர் பட்டுவாடா'வுக்குப் புறப்பட்டு விட்டதாகச் செய்தி கிடைத்தது. ஏக்கம் மண்டிய உள்ளத்தை ஏந்திப் பிடித்தவளாக, நடைப் பிணம் போல அசைந்து நடந்து திரும்பிக்கொண்டிருந்தாள்.

வீடு வந்தது.

மஞ்சள் கயிற்றிலே ஊசலாடிய மங்கல நாணைக் கையிலெடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் மங்களம். பூஜை அறைக்குள் நுழைந்தாள்.

அங்கே—

என்ன ஆச்சரியம்! மேஜைமீது பார்வைக்குத் தெரியும்படியாக இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. காண்பது கனவல்ல என்ற நம்பிக்கை அவளுள் எழுந்த தருணம், அவளுக்கு அந்நிகழ்ச்சி பேராச்சரியமாகவே இருந்தது.

தனக்கு நிழல் தந்த மணாளனை நோக்கினாள் மங்களம். அவனோ ஒண்டி ஒடுங்கிப் போய்த் தினசரித் தாளின் மறைவிலே தன் தலையை முடக்கிக் கொண்டிருந்தான்.

அந்த இருபது ரூபாய் ஒளித்து வைத்து வேடிக்கை காட்டும் 'உண்மைக் கதை'யின் ஆரம்பம், அல்லது முடிவு பற்றிச் சிந்திக்கும் 'துப்பறியும் சிந்தை' அப்போது அவளுள் உருப்பெற மறுத்தது. ஆபத்திற்குப் பாவமில்லை என்ற நினைப்புடன், பணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு டாக்டரை அழைத்துவர நடந்தாள்.

அப்போது—

''அம்மா...'' என்ற விம்மல் ஓசை எதிரொலித்து வந்தது. அல்லி ஏன் இப்படி அழவேண்டும்?

''என்னடா, கண்ணு?''

''அம்மா, ஸ்கூலுக்குப் போற வழியிலே என்னோட கழுத்துச் சங்கிலி எப்படியோ கீழே தவறி விழுந்து காணாமல் போயிடுச்சு, அம்மா...'' என்று சொல்லி, மீண்டும் செருமத் தொடங்கினாள் சிறுமி.

''அட கடவுளே!'' என்று தன்னை மறந்து ஓலமிட்டாள். 'மூதேவி' என்ற சொல் கடவுளாக உருவெடுத்தது ஒலி வடிவில். அன்றொரு நாள் மகளை 'மூதேவி' என்று சொல்லி விட்டு அடைந்த வேதனை அவளுக்கன்றோ தெரியும்! ஆனால், இப்போது மேலும் அவளது துயரச் சுமைக்குப் பாரம் ஏற்றி விட்டாளே அல்லி?

தன் மகளின் தங்கச் சங்கிலியைக் கொண்டு தன் கணவனின் நோய்க்கு விடிவு காண எண்ணமிட்ட அந்த விபரீத ஆசை தோன்றியதையும், பிறகு அதை

மாற்றிக்கொண்டதையும் நினைக்கலானாள் அவள்.

அவளுக்குக் கட்டு மீறிய ஆத்திரம் பொங்கியது. தாமரை இலைத் தண்ணீராகத் தவித்தாள் மங்களம்.

"இந்தக் கஷ்டத்திலே சங்கிலியை வேறே கெட்டுப் போக்கிட்டியே....!" என்று ஆத்திரத்துடன் கேட்டுக் கொண்டே, அல்லியை அடிக்கக் கைகளை உயர்த்தினாள் மங்களம்.

"நில்லுங்கள், அம்மா!" என்ற உத்தரவு வந்தது. எங்கிருந்து? விண்ணிடைப் பரவி நின்ற காற்று அவ்வாறு ஆணை இட்டதா?

பெற்றவளுக்கு இல்லாத இதயம் இயற்கைக்கு உண்டுதானா?

மங்களம் திரும்பினாள்.

டாக்டர் சுந்தரமூர்த்தி மருந்துப் பெட்டியும் கையுமாக வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"டாக்டர் ஸார்! மனமிரங்கி, என் கணவருக்கு உயிர்ப் பிச்சை கொடுக்க வந்து விட்டீர்களா?" என்று கேட்டபடி, அவரை வரவேற்று உள்ளே அழைத்துச்சென்றாள் மங்களம். சிறுமி அல்லியும் பின் தொடர்ந்தாள்.

டாக்டரின் வரவு கண்டு சேகரன் மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

"அம்மா, என் மனமாற்றத்துக்குக் காரணம் உங்கள் புதல்வியே தான். உங்களுக்கு ஏற்பட்ட பணமுடையில் நீங்கள் பட்ட அல்லல்களைச் சொன்னாள். அது மட்டுமல்ல. தன் கழுத்துச் சங்கிலியை வழிப்போக்கன் ஒருவனிடம் விலை பேசிக் கொண்டிருந்தாள். தற்செயலாக வாசலுக்கு வந்த நான் இக்காட்சியைப் பார்த்தேன். வந்த வழிப் போக்கன் பெரிய ஜேப்படித் திருடன். ஆகவே, நான் குறுக்கிட்டு, அல்லியினுடைய சங்கி

# இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கறுத்து, எப்பொழுதுமே கறுமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1-94. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

**AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.**

லியை இருபது ரூபாய்க்கு விலை பேசி என் வீட்டுக்குள்ளே இட்டுச் சென்றேன். குழந்தைக்கு என்னைத் தெரிந்திருந்தது. சங்கிலியை விற்கும் நோக்கத்தை விசாரித்தேன். தன் தந்தையின் வியாதியைத் தீர்க்கப் பணத்திற்கு வேறு வழி இல்லாததால் இந்த வழியென்றும், இப் பணத்தை டாக்டரிடம் கொடுக்க வேண்டுமென்றும், விஷயம் தன் தாய்க்கோ தகப்பனுக்கோ தெரியக் கூடாது என்றும் சொன்னாள். எனக்கு ஆச்சரியமாகி விட்டது. இந்த யுக்தி எவ்வாறு தோன்றியதோ?—எனக்குப் புரியவில்லை. அதற்கும் விளக்கம் தந்தாள் உங்கள் புதல்வி. நீங்கள் எழுதிய கதையில் ஏறக்குறைய உங்கள் நிதர்சனமான வாழ்க்கையை விளக்கியிருந்தீர்களாம்; கடைசியில் கதையில் வரும் பெற்றோரின் சிறு பெண் செய்யும் தியாகச் செயலையும் விவரித்திருந்தீர்களாம். அப்பாவின் வியாதியைக் குணப்படுத்த அச்சிறுமி தன் சங்கிலியை ரகசியமாக விற்றுப் பணத்தை வீட்டில் வைத்துவிட்டு, தன் சங்கிலி கீழே தவறிவிட்டது என்று சொன்னதாக நீங்கள் ஒரு சம்பவத்தைச் சித்தரித்திருந்தீர்களாம். கடைசியில், சங்கிலியை என்னிடம் கொடுத்துப் பணம் கேட்டாள். நானே வருவதாகச் சொல்ல நினைத்தேன். அதற்குள் பணத்திற்குத் துடித்தாள். சரியென்று பத்து ரூபாய் நோட்டு இரண்டை எடுத்து அவளிடம் கொடுத்தேன். சங்கிலியை என்னிடம் வீசிவிட்டு, என் பேச்சையும் கேட்காமல் ஓடிவிட்டாள். இந்தாருங்கள் உங்கள் மகளுடைய தங்கச் சங்கிலி! அம்மா, குழந்தை உள்ளம் ரொம்பவும் விசித்திரமாகத்தான் இருக்கிறது. குடும்பப் பொறுப்பிற்கு இப்போதே பழகத் தொடங்கி விட்டாள் உங்கள் மகள். பெற்றோர்களின் கஷ்டங்களை உணரும் சக்தி ஏற்பட்டு விட்டது. நான் நேற்று உங்களிடம் கண்டிப்பாகப் பேசியதற்கு மன்னியுங்கள். என்ன செய்யட்டும், எனக்கும் பணக்கஷ்டம் தான். உங்கள் மகளிடம் கொடுத்த இருபது ரூபாயை அடுத்த மாசம் கொடுங்கள், போதும். எனக்குத் தரவேண்டிய வைத்தியப் பணத்தையும் பின்னால் தாருங்கள். உங்கள் கணவருக்கு இன்னும் சில நாட்களில் பூரண குணம் ஏற்படச் செய்கிறேன். பயப்படாதீர்கள், அம்மா!'' என்றார் டாக்டர். பிறகு சங்கிலியை மங்களத்திடம் கொடுத்தார்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு சேகரன் அப்படியே திகைப்புடன் நின்றான்.

*

'தமிழமுதம்' இதழ் சேகரனின் கையில் இருந்தது.

''மங்களம், நிஜமாகவே நீ இல்லற தெய்வம்தான். கதைகளிலே மட்டுமே காணக்கூடிய அற்புதக் குடும்ப விளக்கு நீ. என்னை வாழ்விக்க வந்த ஜோதி நீ. உன் தியாகப் பண்பை உன் மகள்—நம்

மகள் கூடக் கற்றுக் கொள்ளச் செய்து விட்டாயே! காலையில் நீ வெளியே சென்ற போது, என் பேருக்கு ஒரு தபால் வந்தது. உடைத்துப் பார்த்தால், நாற்பது ரூபாய்க்கு 'செக்' இருக்கிறது. நீ அற்புதமாக ஒரு கதை எழுதி, அதை என் பெயரால் அனுப்பிய விவரத்தை இப்போது தான் புரிந்து கொண்டேன்...! என்னைக் கைப்பிடித்த உனக்கு என்னால் எத்தனை கஷ்டங்கள்?... என்னை மன்னித்து விடு, மங்களம், மன்னித்து விடு!'' என்று சொல்லிச் சிறு குழந்தை போல அழ ஆரம்பித்தான் சேகரன்.

'' அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். சிதைக்கு இராமர் இருக்கும் இடம் தான் அயோத்தி. நான் கதை எழுதின விஷயம் தெரிந்தால், ஒரு வேளை கோபிப்பீர்களோ என்று பயந்து தான் பேசாமல் இருந்தேன்...... ஆண்டவன் நம்மை மறக்கவில்லை....'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள் மங்களம்.

பத்திரிகாலயத்திலிருந்து வந்த அன்பளிப்பு 'செக்'கில் கையொப்பமிட்டு, அதை மங்களத்திடம் நீட்டினான் சேகரன். அவள் அதை டாக்டரிடம் சமர்ப்பித்து நன்றி சொல்லிக் கைகூப்பி வணங்கினாள்.

'' நல்ல வேளை, நீங்கள் 'செக்' இல் 'எண்டார்ஸ்' பண்ணவில்லை. இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு வேலை பார்த்து வைத்திருக்கிறேன். முதற் சம்பளம் வந்ததும் கொடுங்கள், சந்தோஷமாகப் பெற்றுக் கொள்கிறேன். என் நண்பர் ஒருவர் புதிதாக ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறார். உங்கள் பெயரை ஆசிரியப் பதவிக்குச் சிபாரிசு செய்தேன். சம்மதம் சொன்னார்.... இலக்கியத் துறையில் இனி உங்கள் மனைவியும் உங்களுக்கு உதவுவார்கள்!....'' என்றார் டாக்டர்.

இரண்டு உள்ளங்கள் ஆனந்தத்தில் மிதந்து கொண்டிருந்தன.

'' டாக்டர் ஸார், அப்பாவுக்கு வைத்தியம் பண்ண வேண்டியதில்லே இனிமேலே....! ஏன் தெரியுமா? அப்பாவுக்கு வேலை கிடைச்சிடும் என்கிற நல்லசேதி காதிலே விழுந்ததுமே, பாதிக் காய்ச்சல் பறந்து போச்சு!....'' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் சிறுமி அல்லி.

அன்பு முத்தங்களிடையே திக்குமுக்காடிக் கொண்டிருந்தது அந்தப் பிஞ்சு உள்ளம். ★

மூன்று அவதாரம்....!

'சனிவார் வாடா',

'சனிவார் வாடா' என்று பெரிய கட்டடம். இந்தப் பூனா நகரில் தான். சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்தக் கட்டடம், சுற்றுச் சுவர்களும் ஒரு சில பகுதிகளும் தவிர, மற்றப் பாகங்களில் எல்லாம் இன்று சிதிலம் அடைந்திருக்கிறது. இங்கேதான் அந்தக் காலத்திலே மகாராஷ்டிரத்தின் பீஷ்வாக்கள் பொது நலத்தை மறந்து, சொந்த சுக போகங்களில் சிறுமைக் காரியங்களில் முங்கி மூழ்கி நீந்திக் களித்தார்களாம்!

பெரிய கட்டடம் என்றால் மிகப் பெரிய கட்டடம். கும்பகோணத்தில் இருக்கும் கும்பேஸ்வரன் கோவிலைப் போல் அளவில் கிட்டத்தட்ட இருக்கும். இதைச் சுற்றி நாலு புறத்திலும் வீதிகள். கோயில் போலத்தான்.

சனிவார் வாடாவின் கிழக்குப் பக்கம் உள்ள வீதியில் ஒரு சனீஸ்வரன் கோயில். மிக மிகச் சிறிய கோயில். அதன் வாசலிலே, தெரு ஓரமாக எத்தனையோ பிச்சைக்காரர்கள் தெய்வத்தின் பேரை உச்சரித்துக்கொண்டு மனிதர்களை நம்பி உட்கார்ந்திருப்பார்கள். யாத்ரீகர்களின் பாவங்களைப் போக்கிப் புண்ணிய ஆத்மாக்களாக்கும் புனித கைங்கரியம்தான் அவர்கள் வாழ்க்கைத் தொழில்.

இந்தத் திருக் கூட்டத்தில் அவனும் ஒருவன். அவன்தான் எனக்கு இன்றைக்கும் ஓர் அபூர்வக் காட்சியாகக் கண்ணில் படுகிறான்.

* * *

அவன் நொண்டி. வலது கால் முழங்காலுக்குக் கீழே நாலைந்து அங்குலம்தான் உண்டு. பாக்கியை எங்கே இழந்தான், ஏன் இழந்தான், எப்படி இழந்தான் என்று தெரியாது. அறிந்துகொள்ள ஆவலும் எழுந்தது கிடையாது.

தினம் தினம் க்ஷவரம் செய்துகொள்ளும் பிச்சைக்காரர்களை வேறு எங்கேயும் நான் பார்த்தது இடையாது. அது மட்டுமா! தலையை எண்ணெய் தடவி, வகிடு எடுத்து, நன்றாக நறுவிசாக வாரி விட்டிருப்பான். சில சமயங்களில் முகத்தில் கிரீமும் பவுடரும் மின்னும். ராஜபார்ட்காரன் மாதிரி வாட்டசாட்டமாக இருந்தான்.

மற்றப் பிச்சைக்காரர்களைப் போல, அவனுடைய மனம் கட்டுக் குலைந்து சீரழிந்து போகாமல் இருக்கிறது என்பதற்கு எத்தனையோ அடையாளங்கள் உண்டு. புண்ணியவான்களின் புண்ணியத்தை ஏந்துவதற்காக ஓர் அலுமினியத் தட்டு அவனிடம் இருக்கும். அத்தோடு ஒரு சின்னப் பெட்டி, தோல் 'சூட் கேஸு'ம் அவன் பக்கத்திலேயே வைக்கப்பட்டிருக்கும். அதில், இரண்டு மூன்று வேளைக்குக் காணும்படியாக சப்பாத்தியோ, பாக்ரியோ, அல்லது வேறு ஏதாவது உணவுப் பண்டமோ இருக்கும். சில புத்தகங்கள், ஒரு மண் மசிக்கூடு, பேனா, துண்டுக் காகிதங்கள், பென்சில் ஏட்டுச் சுவடி, எழுத்தாணி முதலியனவும் அதில் காணப்படும்.

நொண்டிக் காலின் விகாரம் வெளியில் மற்றவர்களுக்குத் தெரியாமல் அவன் உட்கார்ந்திருப்பான். அன்றன்றைக்கு வெளியாகும் செய்தித்தாள் அவனிடம் இருக்கும். அவன் காசு கொடுத்தே செய்தித்தாள் வாங்கி வாசிக்கிறான் என்று விசாரித்த அளவில் தெரிய வந்தது.



கோயிலுக்கு முன்னால் கூட்டம் அதிகமாகிவிட்டால், மற்றப் பிச்சைக்காரர்கள் மாதிரி அவனும் தட்டைக் கையில் ஏந்திக் கொண்டு

வாய் திறந்து கேட்க அவர்களைப் போல் அவன் சோம்பேறிப் பிண்டம் அல்ல. ஒரு நிமிஷம் வீண் போகாது. கூட்டம் குறைந்து போனால், ஏதாவது புத்தகத்தை எடுத்து வைத்து வாசித்துக் கொண்டிருப்பான்; அல்லது பேப்பர் வாசிப்பான்; வாசிப்போடு விமர்சனமும் நடக்கும்; எழுத்து வேலையில் இறங்கிவிடுவதும் உண்டு. எதிர்காலத்தைக் கணிக்கும் தன் பிழைப்பு ஓர் அரிய கலை என்பான்; அந்தக் கலையே தான் தன் வாழ்க்கை என்பான்!

இப்பேர்ப்பட்ட 'ராஜபார்ட் பிச்சைக்காரன்' ஒரு விசித்திரக் காட்சி அல்லவா? கொஞ்ச நாட்களுக்கு முன், பம்பாயிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரி ஒன்றில் அற்புதச் செய்தி ஒன்றைப் போட்டிருந்தார்கள். அதை வாசித்து விட்டுப் பலர் என்னிடம் வந்து சொன்னார்கள். ஆனால் நான் ஆச்சரியப்படவில்லை. செய்தி இது தான்; பம்பாய்ப் பிச்சைக்காரர்கள் கூட்டத்தில் ஒருவன் இருக்கிறானாம்; அவனுக்கு சம்ஸ்கிருதம் நன்றாக வருகிறதாம். சோதிடத்தில் வல்லவனாம். இன்னும் என்னென்னவோ கூறினார். பூனாவில் சனிஸ்வரன் கோயிலின் முன் வாசலில் பிரத்யட்சமாகத் தினம் நான் காணும் அற்புதத்துக்கு முன்னால், இந்தப் பம்பாய் அதிசயம் ஒரு விசித்திரமாகவே எனக்குப் படவில்லை!

மேற்படி அபிப்பிராயத்தை நான் அவனுக்குச் சொன்னது கிடையாது. அவனுக்கும் அது தேவை இல்லை. அந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள சனீஸ்வரனுக்கும் தனக்கும் ஏதோ முறிக்க முடியாத ஒப்பந்தம் உள்ளது போல், கோயிலின் வாசலில் நிதமும் உட்கார்ந்து பிச்சைத் தொழிலை நடத்திக் கொண்டு வருகிறான். மழை பெய்யட்டுமே; இடி இடிக்கட்டுமே; புயல்தான் வீசட்டுமே — அவனை எந்தக் காலத்திலும் அங்கே காணலாம்.

* * *

சனீஸ்வரனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, அந்தத் தெய்வத்தின் சன்னிதியில் பிச்சை வாங்கிப் பிழைத்த அவன் ஒரு நாள் திடீரென்று அந்தர்த்தியானம் ஆகி விட்டான். எங்கே போனான், என்ன ஆனான்? — ஒன்றும் தெரியவில்லை. ஒரு வாரம் கவனித்துப் பார்த்தேன். அவனைக் காணாமல் எனக்கு என்னவோ போல் இருந்தது.

'மயிலன்'

## உமா

சந்தா விவரம்

**இந்தியா, சிலோன்**

**ஓர் ஆண்டிற்கு ரூ. 3–00**
**ஆறு மாதத்திற்கு ரூ. 1–50**

வெளிநாடுகளுக்கு

**ஓர் ஆண்டிற்கு ரூ. 4–00**
**ஆறு மாதத்திற்கு ரூ. 2–00**

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

தனிப்பிரதி 25 நயாபைசா

'உமா' :: சென்னை-1.

பத்து நாட்கள் கழித்து அவனைக் கண்டேன். சனீஸ்வரன் கோயிலை விட்டு விட்டான். அந்த அலுமினியத் தட்டையும் தூர எறிந்து விட்டான். இப்பொழுது பாலத்தின் நடை பாதையில் பாயை விரித்துப் போட்டுத் தொழில் நடத்துகிறான். மானமான தொழில்தான்—ஜோஸ்யம்!

அவனைக் கண்டவுடன் என்னையும் அறியாமல் எனக்கு ஒரு சந்தோஷம். 'கடைசியில் தெய்வம் கண் திறந்து பார்த்ததே! இவனுக்கு ஏற்பது இகழ்ச்சி என்பது இத்தனை நாட்கள் கழித்தாவது தோன்றியிருப்பது விசேஷம்தான்' என்று நினைத்துக் கொண்டேன்.

அவன் இப்பொழுது பிச்சைக்காரன் அல்ல. இருண்டு கிடக்கும் வருங்காலத்தில் பார்வையைச் செலுத்தி, மனக் குறையை அகற்றிச் சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்கும் சோதிடன்; ஒடிந்த நெஞ்சு படுத்து விடாமல், தூக்கி நிறுத்தி ஊன்று கோலைக் கொடுக்கும் ஒரு சமூகத் தொண்டன்!

எனக்கு ஜோசியம், கைரேகை, ஆருடம் இத்யாதி வியவகாரங்களில் அதிக நம்பிக்கை கிடையாது. இருந்தாலும், அவன் சோதிடத் தொழில் நடத்துவதைக் கண்டு ஆனந்தப்பட்டேன். வெட்கத்தையும் விட்டு, ஜனங்கள் நடமாடும் அந்தப் பாதையில் அவனுக்கு முன்னால் உட்கார்ந்து என் கையைக் காட்டினேன். என் பையிலிருந்து அவன் கைக்கு எட்டணா இடம் பெயர்ந்தது.

தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு மனிதன் திருமுன்னர் இரு கரத்தையும் நீட்டிப் பிச்சை வாங்கிப் பிழைக்கும் சோம்பல் வாழ்க்கைக்கு—மானம் படியாத ஈனப் பிழைப்புக்கு-ஏங்கி வாடி என் செய்வோம் என்று செயல் மறிந்து, தெம்பு இழந்து கிடக்கும் மனசில் நம்பிக்கையை ஊட்டும் மனித சேவை எவ்வளவோ தேவலாம் என்றே நான் நினைத்தேன். 'இவனுடைய இந்தத் தொழில் செழுத்து வளரட்டும்!' என்று என் மனம் பிரார்த்தித்தது.

பிச்சைக்காரன் ஜோசியனாக உருமாறி, அந்தப் பாலத்தண்டை அமர்ந்து ஒரு மாதத்துக்குக்குறையாமல் தொழில் நடத்தினான்.

அதற்குப் பிறகு ஆசாமியைக் காணவில்லை. எங்கே போய்விட்டான்? ஒரு சமயம் தொழிலில் முன்னேற்றத்தைக் கருதி, அதிகமான வருமானத்தை நாடிக் கொண்டு, பம்பாய் போன்ற இன்னும் பெரிய நகரை நோக்கிப் புறப்பட்டுப் போய்விட்டானோ?

இப்படி யெல்லாம் நான் நினைத்தேன். ஆனால் அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை. முன்மாதிரியே நன்றாக இருந்தான். பூனாவை விட்டு, பம்பாய்க்கோ டில்லிக்கோ, இல்லை கல்கத்தாவுக்கோ அவன் செல்லவில்லை. அவனை இருபது நாள் கருத்துப் பழைய இடத்தில்

கண்டேன். பழைய இடம் என்றால், பாலத்தில் அல்ல; சனீஸ்வரன் கோயிலுக்கு முன்னால்! தூர வீசி எறியப்பட்ட அலுமினியத் தட்டு, திரும்பி வந்து அவன் முன்னால் அழகாக உட்கார்ந்திருப்பதையும் பார்த்தேன்.

''ஏம்பா! ஜோசியம் சொல்லிக்கொண்டு வந்தாயே, அந்தத் தொழிலை விட்டு விட்டாயே, ஏன்?'' என்று கேட்டேன் நான்.

''ஜோசியத்தில் சம்பாத்தியம் போதவில்லை. ஏற்கனவே கையில் சேர்த்து வைத்திருந்த காசை ஒன்றரை மாசம் சொச்சம் நடத்திய தொழில் விழுங்கி விட்டது. போதும் இந்த ஜோசியம்....! பழைய தொழில்தான் நமக்கு லாயக்கு என்று திரும்ப இந்த இடத்துக்கே வந்து விட்டேன்,'' என்று தெரிவித்தான் அவன்.

'முதல் இல்லாத தொழில் இந்த சோதிடத் தொழில்' என்று இத்தனை நாளும் நான் நினைத்திருந்தேன். அது அவனுடைய மூலதனத்தையே விழுங்கி ஏப்பம் விட்டிருக்கிறதே!

''அதிசயமான பிச்சைக்காரன் தான் இவன்; 'கலை, வாழ்க்கைக்கே' என்கிறார்கள். இவன் மேற்கொண்ட கலைதான் இவனை வாழவைக்கிறதா? சோதிடம் கலைதான்; இருந்து விட்டுப் போகட்டும். ஆனால், இந்தப் பிச்சைக்காரப் பிழைப்பு! சீ! பழைய குருடி கதவைத் திறடி என்கிறது போல இங்கேயே வந்து விட்டானா? சே! எனக்குத்தான் போக்கிடம் இல்லை....இவனுக்கு என்னவாம் கேடு?....'' என்று சொல்லியவாறு அந்தப் பிச்சைக்காரக் கிழவன் நடந்து கொண்டிருந்தான்.

'ராஜபார்ட்'காரன் வேஷத்தைக் கலைத்து விட்டு எங்கோ தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருந்தான்! ★

## வாழ்த்துகிறோம்

'தமிழ் சினிமா' ஆசிரியர் **ஏ. கரீம்** அவர்களுக்கும் ஜனுப் கே எம். எஸ். பீர்முஹமது ராவுத்தர் அவர்களின் புதல்வி **பேபி** என்கிற **ஆமினம்மாளுக்கும்** 28–6–57-ம் தேதி காலை அறந்தாங்கியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. அன்று இரவு திருவெண்காடு ஸ்ரீ டி. பி. சுப்பிரமணியம் குழுவினரால் நாதஸ்வரக் கச்சேரியும், மறுநாள் மாலை ஸ்ரீ கஜகர்ணம், ஸ்ரீமதி காமதேனு ஆகியோரால் விகடமும், இரவு திரைநடிகர் ஸ்ரீ டி. ஆர். மஹாலிங்கம் குழுவினரால் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி சென்னை மாகாண முதலமைச்சர் கே. காமராஜ், சபாநாயகர் யூ. கிருஷ்ணராவ், பிரதம நீதிபதி ராஜமன்னார், மத்திய மந்திரி கே. ஸி. ரெட்டி போன்ற பல தலைவர்களிடமிருந்தும், படத்தயாரிப்பாளர்கள், நடிக நடிகைகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், டைரக்டர்கள் ஆகியோரிடமிருந்தும் மற்றும் பம்பாய், சென்னை, கொழும்பு, பினங் ஆகிய இடங்களிலுள்ள நண்பர்களிடமிருந்தும், ஏஜண்டுகளிடமிருந்தும் ஆயிரக்கணக்கான வாழ்த்துச் செய்திகள் வந்தன. திரு. ம. பொ. சிவஞானம், கா. மு. ஷரீப், கு. சா. கிருஷ்ணமூர்த்தி, நடிகர் முஸ்தபா, வேலூர் குப்புசாமி ஆகியோரும் மற்றும் பலரும் நேரில் விஜயம் செய்து வாழ்த்துரை தெரிவித்தார்கள்.

தீந்தமிழ் இலக்கியப் பூஞ்சோலையிலே அங்கங்கே சிந்திச் சிதறிக் கிடக்கின்ற உதிரிப் பூக்களை—மணம் மண்டிய மதுமலர்களைச் சேகரித்து வடிவம் கொடுத்து அனுப்புங்கள்; உயிர் கொடுத்து வெளியிட நாங்கள் இருக்கின்றோம். கல்லூரி மாணவர்—மாணவிகளுக்கு இப்பகுதியில் முதற் சலுகை உண்டு. வழிகாட்டி இக்கட்டுரையாளர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர் இவர்.

— *ஆசிரியர்.*

*உதிரிப்பூ:*

***வே. தில்லைநாயகம்***

# கனவிலே வந்தவன்!

*அவளும் அவனும் மனம் ஒன்றினர். மாறுபட்ட கருத்துக்கள் எழ வாய்ப்பேயில்லை.*

வாழ்வாங்கு வாழ—திருமண முயற்சிக்காகப் பொருள் தேடிப் பிரிந்தான் தலைவன்.

*நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.*

காதலனைக் காணாத காரிகை பொலிவு இழந்தாள். பொருமினாள். காலங் கருதிக் காத்துக் கிடந்தாள். இல்லறக் கனவே நனவாய் கிடந்தாள்.

அன்று வெகு நேரம் தூக்கம் பிடிக்கவில்லை. ஆசைக்கு உகந்தவன் அருகில் இல்லாதபோது எப்படித் துயில் வரும்?

*அவளது நனவு கனவாயிற்று.*

கனவிலே காதலனைக் கண்டாள். களிப்பெய்தினாள். உள்ளம் பூரித்தாள். உடலும் பூரிப்புப் பெற்றது. பொலிவொடு விளங்கினாள்.

அதிகாலையில் தலைவியைக் கண்ட தோழி ஆச்சரியங் கொண்டாள். ஐயம் பிறந்தது.

தலைவியிடம் பொலிவின் காரணம் வேண்டினாள் அத்தோழி.

தலைவி பேசத் தொடங்கினாள்:

"நேற்றைய வாடையோ தொல்லை மிகுந்தது. அவரது நினைவாய்க் கிடந்தேன். அதோ, தூரத்தே தெரியும் தாழை மரங்கள் காற்றிலே ஆட்டமுற, அதில் அமர்ந்திருந்த நாரை கூவத் தொடங்கி விட்டது. என் துயரை அது அறியுமா? அதுவும் ஒரு வேளை காதல் நோயால் கூவியதோ....? இல்லை. இருக்காது. பிரிந்து சென்ற பிரியனின் செயலை ஒத்து நாரையும் நள்ளிரவில் கூவிக் கிடந்தது. அப்படியே அயர்ந்து விட்டேன். நனவிலே காணாதவனைக் கனவிலே கண்டேன; களி கொண்டேன்; கவின் கொண்டேன், தோழி!"

அதற்கு மேலும் விளக்கம் தேவையா?

'தோள்துறந் தருளாதவர் போல் நின்று
வாடை தூக்க வணங்கிய தாழை
ஆடுகோட் டிருந்த அசைநடை நாரை
நளியிருங் கங்குல் நந்துயர் அறியாது
அளியின்று பிணியின்று விளியாது நரலும்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை என்றி யாயின்
நனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டு யான் செய்தது:'

—*கலித்தொகை, 128*

*(தூக்க – அசைக்க, கோட்டு – கொம்பு, அளி-இரக்கம், விளியாது-விடாது, நரலும் –கூவும், கவினினை–அழகினை, செய்தது–இன்புற்றது.)* ★

## அத்தியாயம் – 19

## "பைத்தியம்!"

ஜோஸியம் பலித்துவிட்டது! வார்த்தைக்கு வார்த்தை சரியாக, நூற்றுக்கு நூறு உண்மையாகக் கடைசிவரைப் பலித்தே விட்டது! 'இது மட்டும் நடக்காம இருந்திடக் கூடாதா? என்னெத் தான் கட்டிக்கிடக் கொடுத்து வைக்காது போயிடிச்சு; இன்னொருத்தனையாவது கட்டிக்கிட்டு, எங்க காந்தி கொஞ்ச நாளாவது தாலியும் கழுத்துமா இரியாதா?' என்று நெல்லையப்பன் உள்ளூரக் கொண்டிருந்த அற்ப ஆசையின் மீது மண்ணை அள்ளிப் போட்டு விட்டு, இதுவும் பலித்தே விட்டது!

பாளையத்துக்குப் போகும் வழியில், மாரியம்மன் கோயில் பக்கம் வசிக்கும் 'சவளைக்காரர்' என்ற மீன் வலைஞர்களில் பத்துப் பனிரெண்டு பேர்கள், கல்யாணத்துக்கென வந்திருந்த 'காஸ்லைட்'டுகள் நாலைந்துடன் இடைமலைக் குளத்துக்கு வந்து, தண்ணீரில் மூழ்கி, பரமசிவனின் சடலத்தைத் தேடிக் கொண்டிருந்தனர். கரையில் ஒரே ஜனத்திரள். போலீஸ் இன்ஸ்பெக்டர் தீத்தாரப்ப முதலியார்கூட சில ஜவான்களுடன் வந்து குளக்கரையில் காத்திருந்தார். ஆமாம்; துர்மரணம் என்

ருல் அதுபோலீஸ்கேஸ் அல்லவா? பாவூர் மூக்கையாப் பிள்ளை வயிற்றிலும் வாயிலும் அடித்த வாறு அங்கு ஒரு பக்கம் கதறிக் கொண்டிருந்தார். அவரைச்சுற்றி, கல்யாணத்துக்காக வந்திருந்த பாவூர்க்காரர்கள் கூடியிருந்தனர். மற்றொரு பக்கத்தில் நெல்லையப்பன், திருமலை, மேலத்தெருச் செல்லம் பிள்ளை, இளவட்டம் குமாரசாமி போன்ற பலர் குழுமியிருந்தனர். இவர்கள் எல்லோரும் கல்யாண வீட்டில் ஆளுக்கு ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தபோது, திருமலை ஓடி வந்து அதிர வைக்கும் செய்தியை அறிவித்தான். உடனே அனைவரும் தங்கள் வேலைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு இடைமலைக் குளத்தை நோக்கி ஓடி வந்திருந்தனர்.

மூன்று-நாலு மணி நேரம் குளத்தைச் சலித்த பிறகு சேற்றில் புதைந்து கிடந்த பரமசிவனின் சடலத்தை இரண்டு மூன்று சவளைக்காரர்கள் சேர்ந்து வெளியே எடுத்துக் கொண்டு வந்து கரையில் போட்டனர். அதற்குள் அந்த உடல் ஓரளவு ஊதி விரைத்துப் போய்விட்டது. பிளந்திருந்த வாயிலும், மூக்குத் துவாரங்களிலும் நுரையடைப்பு ஏற்பட்டிருந்தது. கைகளை நீந்தும் பாவனையில் முன்னே நீட்டியவாறு சவமாகக் கிடந்தான் கல்யாண மாப்பிள்ளை பரமசிவன்.

''என் ஐயா! என் தங்கம்! என் ராசா! என் வாயிலே மண்ணை அள்ளிப் போட்டுட்டியேடா என் கண்ணு!'' என்று பரிதாபமாகக் கதறியவாறு மகனின் உடல்மீது புரண்டு கதறினர் மூக்கையாப் பிள்ளை.

இன்ஸ்பெக்டர் தித்தாரப்ப முதலியார் விசாரணை நடத்திக் கேஸ் எழுதிக் கொண்டிருந்தார். திருமலை, அவனுடன் வந்த மற்ற இரண்டு பாவூர் இளவட்டங்கள், மைனர் சேது, அவன் நண்பர்கள், இப்படி ஒவ்வொருவரையும் விசாரித்து அவர்கள் வாக்குமூலங்களைப் பதிவு செய்து கொண்டார். வாக்குமூலங்களிலிருந்து இது தற்கொலை அல்ல என்பதும், முக்களித்துச் சென்ற வேகத்தில் தலை சேற்றுக்குள்ளே புதைந்து விட்டதால் மேலே வரமுடியாமல் மூச்சுத் திணறி ஏற்பட்ட மரணம் என்பதும் தான் தெளிவாயின. ஆனல், பரமசிவனின் சாவு அப்படியா நிகழ்ந்தது? இல்லை. அது தற்கொலையுமல்ல; விபத்து மரணமும் அல்ல; அது கொலை! வஞ்சகக் கொலை! பட்டப் பகலில் சுற்றிலும் ஆள் இருக்கையில், அவர்கள் கண்களுக்குத் தெரியாமல் நீருக்கு அடியில் நிகழ்த்தப் பட்ட கொலை! அந்தக் கொலையைச் செய்த சேது அங்கேதான் நின்று கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் கலக்கம் கொஞ்சங் கூட இல்லை; அவன் முகத்தில் சலனம் சிறுதுகூட இல்லை. தண்ணீருக்கடியிலே பரமசிவனேடு நீந்திச் சென்று, குபீரென்று அவன் தலை மீது பாய்ந்து, இரு கால்களாலும் முகத்தைச் சேற்றில் புதைத்து விட்ட தனது செய்கையை வெளியே கரையில் நின்றவர்கள் அறிய மாட்டார்கள்; ஊகிக்கவும் முடியாது என்ற தைரியந்தானே அவனை இப்படிக் கவலையின்றி இருக்கச் செய்திருக்க வேணடும்? சேது சலனமின்றி, கலக்கமின்றி, கவலையின்றி இருந்தது மட்டுமல்ல; அந்த உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணுடி மாத்திரம் ஒன்று அகப்படுமானல், அதன் மூலம், அங்கே பழி வாங்கிவிட்ட நிம்மதி-அந்த ஆனந்தம் எவ்வளவு நிறைந்திருந்தது என்பதையும் கண்டிருக்க முடியும்.

எப்படியோ, விதியானது சேதுவைக் கருவியாக்கிக் கொண்டு தன் காரியத்தைச் செய்து முடித்துக் கொண்டு விட்டது. பரமசிவனின் உடலை ஒருவண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு, அறுத்துச் சோதனை செய்வதற்காக மேலப் புலியூர் சர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனர்கள். மூக்கையாப் பிள்ளையும் அவரைச் சார்ந்தவர்களும் வண்டியுடன் போய் விட்டனர். அவர்களோடு செல்லம்

பிள்ளையையும், குமாரசாமியை யும் அனுப்பி விட்டு, நெல்லையப்பன் திருமலை போன்ருேர், ஆற்றில் குளித்துவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

தெருவை அடைத்துப் போடப்பட்டிருந்த திருமணப் பந்தலில்—மாலையில் களிப்பும் சந்தோஷமும் பொங்கி நின்ற அந்தப் பந்தலில்—மாலையில் 'கொலு' நாயனம் முழங்கிய அந்த இடத்தில் — இப்பொழுது முனகலும், அழுகுரலுந்தான் எதிரொலித்தன. அங்கே நின்ற ஒருவர் முகத்திலாவது ஈயாடவில்லை. தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு குனிந்த தலை நிமிராமல், துக்கம் நெஞ்சை அடைக்க வந்துகொண்டிருந்த நெல்லையப்பனின் முகம் பார்த்துப் பேச ஒருவருக்கும் துணிவு வரவில்லை. இதே வீட்டில் சில வருஷங்களுக்கு முன், ஒரு சாவும், ஒரு கல்யாணமும் சேர்ந்து வந்தன. அழகம்மை கண்களை மூடிய உடனே காந்திமதி 'பெரிய மனுசி' ஆகவில்லையா? அதே போல் இப்பொழுது மீண்டும் ஒரு கல்யாணமும் சாவும் சேர்ந்து விட்டன. இதை அங்கு கூடியிருந்தவர்கள் எண்ணி வியந்து கொண்டிருந்தார்கள். இருந்தாலும் அவர்களுக்கு ஒரு நிம்மதி; ஒரு சந்தோஷம். இன்று மாலையில் தலையைப் போட்ட பரமசிவன் நாளை மாலையில் தலையைப் போட்டிருந்தால் காந்திமதி கைம்பெண்ணுகி விட்டிருப்பாளே! அந்த மட்டும் தாலி கட்டப்பட்ட அன்றே அதை அறுத்தெறிய வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படாமல் அவள் தப்பினுளே என்ற ஆறுதல் எல்லோருக்கும் இருந்தது. இது அவளுடைய வாழ்வுக்கு ஒரு கறைதான். கல்யாணத்துக்குக் காப்புக் கட்ட இருக்கையில் கணவனுக வேண்டியவன் கட்டையில் ஏறிவிட்டதால், இனிமேல் அவளை மருமகளாக்கிக் கொள்ள எந்தப் பெற்ருேரும் சிறிது தயங்கத்தான் தயங்குவார்கள். ஏனெனில், இந்தச் சம்பவம் காரணமாக, பெண்ணுக்கு ஜாதக ரீதியாக ஏதோ குற்றம் இருக்கிறது என்றுதான் எல்லோரும் கருதுவார்கள். ஆயினும் பணக்கார வீட்டுப் பெண்; நிறைய நகை—நட்டுடன் வருவாள் என்ற எண்ணத்தில் இந்தச் சம்பவத்தை பொருட் படுத்தாது யாராவது அவளைக் கட்டிக்கொள்ள முன் வந்தாலும் வரலாம் என்றும் அவர்கள் சமாதானமடைந்திருந்தார்கள். ஆனுல் இம்மாதிரி ஏதாவது நிகழக்கூடும் என்று சந்தேகித்திருந்த நெல்லையப்பனும், கோமதியாச்சியும்....?

அவர்களுக்கு ஏது நிம்மதி? ஏது சமாதானம்?

பாவம் நெல்லையப்பன்! காந்திமதியின் அழகே அவளுக்குச் சத்துருவாகத் தொடங்கியதைக் கண்டு, அதிலிருந்து அப்பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்க, இரண்டில் ஒன்று பார்த்துவிடத் துணிந்தான். 'யாரையாவது பிடித்து அவள் கழுத்தில் தாலி போடச் செய்து விடுவோம். விதியில் ஏதேனும் மாறுதல் இருந்து, அல்லது ஜோசியத்தில் ஏதேனும் தவறு ஏற்பட்டிருந்து, அவள் நல்லதனமாகக் கணவனுடன் வாழ்ந்தால் வாழட்டும்; இல்லாவிட்டால் அறுத்துவிட்டு வீடு வந்து சேரட்டும். கணவனுடன் வாழ்ந்தால், அங்கே அவனல் அவள் அழகு அநுபவிக்கப்பட்டுப் பாதுகாப்பும் பெற்றுவிடும்; இல்லை, அறுத்துவிட்டாள் என்ருல், விதவைக் கோலம் இந்தக் கிறங்க வைக்கும் அழகைச் சிதைத்து, அதனுல் ஏற்பட இருக்கும் ஆபத்தை நீக்கிவிடும்' என்றெல்லாம் திட்டமிட்டு, அத்தை கோமதியாச்சிக்கும் இதையெல்லாம் எடுத்துச் சொல்லிச் சம்மதிக்க வைத்துக் கல்யாண ஏற்பாடுகளைச் செய்தான். ஆனல் இப்பொழுது திரிசங்கு சொர்க்க நிலையல்லவா வந்து சேர்ந்திருக்கிறது? அவள் அழகு அழிய வகையுமில்லை; அது ஆளப்படவும் வழியில்லை என்ற நிலையல்லவா ஏற்பட்டு விட்டது?

தனது முயற்சி இவ்வாறு தோல்வியடையும்; மேலகரம்

இந்தியாவில் இரண்டு பெரும் குறைபாடுகள் உண்டு. அவற்றில் ஒன்று நமது பலவீனம். அடுத்தது நமது பகைமை; அதாவது, ஈரமற்ற இதயம்.

—விவேகானந்தர்.

ஜோசியரின் வாக்கு இப்படி வார்த்தைக்கு வார்த்தை பலிக்கும் என்று நெல்லையப்பன் எதிர்பார்க்காததால், அவனுக்கு இப்பொழுது முன்னிலும் அதிகமான கவலையும் பீதியும் ஏற்பட்டன. கவலை, காந்திமதியை இனி எப்படிக் கட்டிக் காப்பது என்பதால் ஏற்பட்டது; ஆனால் பீதியோ?

அவள் வண்ணக்கிளி. அழகின் கவர்ச்சி யாரைத்தான் கட்டி இழுக்காது? இன்று நடந்த துர்நிகழ்ச்சியை ஒதுக்கிவிட்டு, அவளைக் கட்டிக்கொள்ள இன்னும் யாராவது முன் வந்து அவர்களுக்கும் பரமசிவத்தின் கதி ஏற்பட்டு விட்டால்? அது தனது குடும்பத்துக்கே ஒரு இழுக்கல்லவா! எங்கேயோ எப்படியோ, வாழ்ந்துவிட்டுப் போகட்டும் என்ற நிலைகூட இன்றி, காந்திமதிக்குத் துக்கிரி என்ற நிலையான பட்டமும், கண்டவர் அஞ்சி வெறுத்து ஒதுக்கும் நிலையும் அல்லவா ஏற்பட்டுவிடும்? ஒரு தடவை ஆயிற்று; இரண்டாம் தடவையும் ஆயிற்று என்றால், தொற்று நோய்க்காரர்களை ஒதுக்குவது போல் அல்லவா, உலகம் அவளையும், அவளைச் சார்ந்த தங்களையும் ஒதுக்க ஆரம்பித்துவிடும்? இதுதான் அவனைச் சூழ்ந்த பீதி.

இது அவன் நிலை. கோமதியாச்சியின் நிலை? அவள் நெல்லையப்பனை விட உறுதியான உள்ளம் படைத்தவள். வரும் விதி வழியில் தங்காது என்ற நிச்சயம் உடையவள். இருந்தாலும் ஏனோ தெரியாது, தன் மகள் சிறுகக் கட்டிப் பெருக வாழ்வாள் என்ற நம்பிக்கை சிறிதும் அற்றிருந்த அவளுக்கு, இப்பொழுது அந்த நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வந்தது. மனிதர், பசிக்கு உணவு கிட்டாவிட்டால், எப்படியாவது அதைப் பொறுத்துக் கொண்டு விடுவார்கள்; பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் பசியோடிருக்கும் ஒருவனை இலையின் முன் உட்கார்த்தி, பலவகை உணவுகளைப் படைத்து, அவற்றை அவன் ஆவலுடன் உண்ணத் தயாராகும்போது, கையைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளினால், அவனுக்கு எத்தகைய அதிர்ச்சி, எப்படிப்பட்ட ஏமாற்றம் ஏற்படுமோ, அப்படிப்பட்ட ஏமாற்றமும் அதிர்ச்சியுந்தான் கோமதியாச்சிக்கு ஏற்பட்டன.

மகளின் தலைவிதியை நிர்ணயித்து அறிவிக்கப்பட்டிருந்த ஜோஸ்யத்தின்படி, அவளுக்கென்று ஒருவனைக் கணவனாக நிச்சயித்த உடனேயோ, அல்லது சில தினங்களிலோ அவன் இறந்துவிடுவான் என்று அவள் எண்ணிக்கொண்டிருந்தாள். அவ்வாறே கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட நாளிலிருந்து பரமசிவனின் சாவுச் செய்தியை அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அது வரவில்லை. பிறகு பந்தல் கால் நாட்டினால்தானே கல்யாணத்துக்கு அறிகுறி? ஒருகால் அன்றுதான் அவனுக்கு யமன் வரப் போகிறான் போலிருக்கிறது என்று எண்ணினாள். அதுவும் நடக்கவில்லை. சரி, மாப்பிள்ளை இவளைக் கட்டிக்கொள்ளவென்று வீட்டைவிட்டுக் கிளம்பும்போதுதான் அவனுக்குப் பாசக் கயிறு வீசப்படும் போலி

ஒரு நல்ல பெண்ணின் முழு அன்பையும் ஒருவன் பெற்றுவிட்டால், அவன் சாக்கடையோரங்களில் பிச்சைக்கார வாழ்வு நடத்தி இறந்து விட்டாலும் அவன் வாழ்க்கையில் வெற்றி அடைந்தவன்.

—இங்கர்சால்

ருக்கிறது என்று மூன்றாவதாக நினைத்தாள். அப்பொழுதும் அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. ஆகவே ஜோசியத்தில் தான் ஏதோ தவறு இருக்க வேண்டும்; இனி என் மகள் நன்றாக வாழ்வாள் என்ற நம்பிக்கை அவளிடம் கொஞ்சம் கொஞ்சமாக மீள ஆரம்பித்தது. கல்யாணத்துக்கு முன் தினமான அன்றையப் பிற்பகல் வரையில் அசம்பாவிதம் எதுவும் நடக்காததால், அவள் முழுவதும் உறுதியடைந்து விட்டாள்; முழுவதும் களிப்படைந்து விட்டாள். இதுவரைத் தொட்டும் தொடாமலும் கல்யாணக் காரியங்களைச் சுவையின்றி செய்து வந்த அவள், அன்று முழு மனசோடு, முழு ஊக்கத்தோடு ஏற்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். அப்படி மீண்ட அந்த நம்பிக்கையானது, இப்பொழுது ஒரு நொடியில் சிதைந்ததும்—

வீட்டுக்குள்ளே நுழைந்த நெல்லையப்பனை சவுந்திரத்தாச்சி எதிர்கொண்டாள். "அடே ஐயா! சட்டுன ஒன் அத்தெயெப் போயிச் செத்தெப் பாருடா ஐயா! அவ பேசுத பேச்சும் முளிக்குத முளியும் ஒண்ணும் சதியாக் காங்கலையே!" என்றாள் அவள்.

நெல்லையப்பன் ஈர உடைகளைக் கூடக் களையாமல் அப்படியே வீட்டுப் பட்டக சாலைக்கு விரைந்தான். அங்கே பெண்களின் கும்பலின் நடுவில் கோமதியாச்சி விகாரமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்! தலையை அலங்கோலமாக விரித்துப் போட்டுக் கொண்டு, ஆடைகள் சீர்



குலேய, அவள் ஆட்டமும் பாட்டு மாக இருந்ததைக் கண்டதுமே நெல்லையப்பனுக்கு விஷயம் உடனேயே விளங்கி விட்டது.

ஆம், கோமதியாச்சிக்குச் சித்தப் பிரமை ஏற்பட்டு விட்டது!

பாவம், கோமதியாச்சிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!

## அத்தியாயம் – 20

## "வைத்தியம்!"

பாவம்! நெல்லையப்பனுக்குச் சோதனைக்கு மேல் சோதனையாக ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. இவ்வளவு இளம் பிராயத்தில் அவனுக்குத்தான் எத்தனை பொறுப்புக்கள்? கஷ்டங்கள்? தந்தையை இழந்தான்; தாயை இழந்தான்; குடும்பப் பொறுப்பு அவன் தோள் மீது சாய்ந்தது. பரவாயில்லை; தந்தையும் தாயும் எக்காலத்திலும் சிரஞ்சிவிகளாக வாழ்ந்து கொண்டிருக்கப் போகிறவர்கள் இல்லை. அதேபோல் குடும்பப் பொறுப்பையும் என்றாவது ஒரு நாள் அவன் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஆகையால் அவன் அவற்றைப் பெரிதாக எண்ணவில்லை. தவிர, தாய்க்குத் தாயாக, வீட்டுக்குப் பெரியவளாக அத்தை இருக்கும்போது அவனுக்கு மலைப்பு ஏற்படவேயில்லை. அழகின் அவதாரமாக விளங்கிய காந்திமதியைக் கட்டிக்கொண்டு இன்ப வாழ்வு வாழப் போகிற நாளை அவன் கணக்கிட்டுக்கொண்டிருந்தான். ஆனல் அதன் மீது அத்தை ஒரு நாள் ஒரு பெரிய பாராங்கல்லைத் தூக்கிப் போட்டுத் தவிடு பொடியாக்கி விட்டாள். அதையும் சகித்துக் கொண்டான். காந்திமதியின் விதியை மாற்றி எழுத முடியாது; இனி அவள் என் சகோதரியாக, நித்திய கன்னியாக இருந்து விட்டுப் போகட்டும் என்று அப்பொழுதும் தன் ஏமாற்றத்தைப் பொறுத்துக் கொண்டான். உடனே அதற்கும் ஒரு சோதனை வந்து சேர்ந்தது. கன்னியாக இருப்பது அவளுடைய கற்புக்கு ஆபத்தை விளைவித்து விடும் என்பதை விளக்கிவிட்டுப்போனன் மைனர் சேது. அவளுக்கு அத்தகைய ஆபத்தான நிலையை ஏற்படுத்தக் கூடாது! அறுத்தாலும், வாழ்ந்தாலும், அவளைப் பயமுறுத்தும் இந்த அழகின் ஆபத்து நீங்கிவிட வேண்டும் என்று தன் வருங்கால வாழ்க்கைக்காக ஓர் இருள் திரையை விட்டுக் கொண்டான். பிறகு அவளுடைய கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தான். அதுவுந்தான் அவளை அந்தரத்தில் தொங்கவிட்டுச் சென்றதென்றல், அதே சமயம் அத்தைக்கும் பைத்தியமா பிடிக்க வேண்டும்?

அதிலும் பைத்தியமென்றல் சாதாரணப் பைத்தியமாகவா பிடித்திருந்தது கோமதியாச்சிக்கு? மகளின் வாழ்வு இப்படி நிலை குலைந்ததைக் கண்டு மனம் நொறுங்கிப் பிடித்திருந்த பைத்தியமல்லவா அது? ஆகவே அப்பொழுது கோமதியாச்சிக்கு நன்கு வாழ்கிறவர்கள் யாரைக் கண்டாலும் பொறாமையே ஏற்பட்டது போலும். வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள்ளுவாள். வாய் பாட்டுக்கு அர்த்தமின்றி ஏதோ புலம்பிக் கொண்டிருக்கும். உதடுகள் தாமாகவே சிரித்துக் கொள்ளும். அடிக்கடி கை விரல்களை மடித்துச் சொடுக்கி, சாபம் கொடுப்பது போல் உதறுவாள். யாருக்கு? தெருவோடு போகிற, வருகிற, தாலி கட்டிக் கொண்டிருக்கும் பெண்களுக்குத்தான். அவள் மனசில்ஏற்பட்ட பொறாமை இப்படிச் செய்வதோடு நின்றுவிட்டால்கூடப் பரவாயில்லையே? சில சமயம் அவர்களைக் கண்டபடி திட்டவும் ஆரம்பித்து விடுவாள். "என் மக கல்யாணமில்லாம நிக்குதா; இவ தாலியெக் கட்டிக்கிட்டிருக்காளே? ஏட்டி, இந்தாப் பாருட்டி; நான் சொல்லுதேன். ஒன்புருசன் இன்னம்நாலுநாளிலே நாசமாப் போயிடப் போருன் பாரு; அவனைக்காலராக் கொண்டு போயிடப்போகுது பாரு," என்று

இப்படிப் பலவாறு திட்டுவாள். பைத்தியம் பிடித்தவளின் பிதற்றல்தான் என்ருலும், இம்மாதிரி வார்த்தைகளை எல்லோருமே பொறுத்துக் கொண்டு விடுவார்களா? சிலர் பொறுத்துக்கொண்டார்கள்; சிலர் நெல்லையப்பனிடம் புகார் செய்தார்கள். "பைத்தியம் புடிச்சிருந்திச்சின்னு வீட்டுக்குள்ளே அடைச்சு வையி. அதுக்காகத் தெருத் திண்ணையிலே ஒக்காத்தி வச்சு, போகுதவுகளை, வருகுதவுகளை வாயிலே வந்தபடி பேச வச்சியின்னு....?" என்று சிலர் கோபித்துக் கொண்டனர். கடைசியில் நெல்லையப்பன் கோமதியாச்சியை வீட்டில் ஓர் அறையில் பூட்டும்படியான நிலை ஏற்பட்டது.

அவளுடைய பைத்தியத்தைப் போக்க, சென்ற ஒரு மாதமாக அவனும் என்ன என்னவெல்லாமோ வைத்தியங்கள் செய்து கொண்டுதான் வந்தான். ஆனால் நாளுக்கு நாள் அது முற்றிற்றே தவிரக் குறையவில்லை. மருந்துகளில் தெளியாமற் போகவே, அவன் மந்திரவாதிகளின் உதவியை நாடினன். குருக்கள் ஐயா வந்தார். திருநீறு மந்திரித்துப் பூசினர். சோழி உருட்டிப் பார்த்தார். மை போட்டுப் பார்த்தார். துர்மரணம் அடைந்த பாலூர்ப் பரமசிவன்தான் பிசாசாக வந்து கோமதியாச்சியைப் பிடித்திருக்கிருன் என்று பூசைகள் போட்டுப் பிரம்படி கொடுத்தார். 'ஹூம். பேயாவது, பிசாசாவது? மனப் பைத்தியத்துக்கு மருந்து ஏது? மாயம் ஏது? இங்கேயும் பணந்தான் கரைந்ததேயன்றிக் குணம் காணவில்லை. அப்பொழுது குற்ருலத்தில் 'சீஸன்' தொடங்கியிருந்தது. ராயர் பங்களாவில் யாரோ ஒரு மலையாளத்துக்காரர் இயற்கைச் சிகிச்சை மூலம் பைத்தியத்தைக் குணப்படுத்துகிருர் என்று அவரிடம் கூட்டிப் போகும்படி சிலர் சிபாரிசு செய்தனர். உடனே அத்தையை அங்கே கூட்டிச் சென்ருன். ஒரு மாத காலம் அவளை அந்த வைத்தியனிடமே விட்டு வைத்திருந்தான். மலையாளத்து வைத்தியரின் சிகிச்சை கசையடிச் சிகிச்சைதான்; வேருென்றுமில்லை. மூச்சு விட்டால் அடி; வாய் திறந்தால் அடி. இம்மாதிரி பைத்தியங்களை அடிப்பதற்கென்றே அவர் குடியிருப்பு என்ற அருகிலிருந்த கிராமத்திலிருந்து முரடர்களான இரண்டு – மூன்று மறவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தார். சில பேர்களுக்கு இந்தக் கசையடிச் சிகிச்சையினல் பைத்தியம் தெளியத்தான் தெளிந்தது. ஆனல் கோமதியாச்சிக்குத் தெளியவில்லை. ஒரு மாதச் சிகிச்சையில் உடலெல்லாம் கசையடித் தழும்புகளுடன் எலும்பும் தோலுமாக மாறியதுதான் மிச்சம். நெல்லையப்பனுக்கு இந்தக் கண்ணராவியைக் காணச் சகிக்கவில்லை. 'போதும் உங்கள் சிகிச்சை' என்று அத்தையை வீட்டுக்கு அழைத்து வந்து மீண்டும் அறையில் அடைத்துப் போட்டுவிட்டான். "வீட்டில் அரைப் பைத்திய நிலையில், இரண்டுங்கெட்டான் வாழ்வு வாழ்ந்து கொண்டு ஒருத்தி இருக்கிருள்; அவளுக்குத் துணையாக இவளும் இருந்துவிட்டுப் போகட்டும்; நான்தான் என்ன செய்ய முடியும்?" என்று அவன் கவலையின்றி இருந்துவிட முயன்ருன்.

ஆனல் திடீரென்று கோமதியாச்சியின் பைத்தியத்தில் ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டது. இப்பொழுது அவள் பிறரை ஏசுவதில்லை; பேசுவதில்லை. அவளிடம் ஏச்சும் பேச்சும், கேட்க யாரும் எதிர்ப்படா வண்ணம் வீட்டுப் பட்டகசாலைக்குப் பின்னல் இருந்த குச்சிலில் அத்தையை அவன் அடைத்து வைத்திருந்தான். ஆனல் அவள் கண்எதிரில் தினந்தோறும் பல தடவை அவனும் காந்திமதியும் வரவேண்டியிருந்தது. அவளுக்கு வேளைக்கு உணவளிக்க, உடைமாற்ற, நாலில் ஒன்றில் இருவருமாகச் சேர்ந்து அவள் தலையில் நாலு செம்புத் தண்ணீரை விட்டுக் குளிப்பாட்ட வரத்தான் வேண்டியிருந்தது. ஆகவே, கோமதியாச்சியின் பைத்

தியம் அவர்களை நோக்கிப் பாய ஆரம்பித்தது. மற்றவர்களை வைது, திட்டி, சபித்து வந்தது போல், தங்களையும் செய்திருந்தால் நெல்லையப்பன் கவலைப்பட்டிருக்க மாட்டான். ஆனால் அவள், மகளையும் மருமகனையும் சேர்ந்து காணும்போதெல்லாம் ஒரு புதுப் பல்லவியைப் பாட ஆரம்பித்திருந்தாள். பைத்தியம் பிடித்தவர்கள் சில சமயம் ஞானதிருஷ்டி உடையவர்களைப்போல் பேசுவார்கள் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். அதுதானோ, என்னவோ, கோமதியாச்சி அப்பொழுதெல்லாம் அவனிடம் சொல்லுவாள்: ''ஏலே ஐயா! ஏன் மகளைக் கட்டிக்கிட்டா பாவூர் மருமகப்புள்ளையைப் போல வாயெப் பொளந்திடுவோமின்னு நெனெச்சுத்தானேலே காக்கா வலிப்பு வந்தவன் கணக்கா வேசம்போட்டே? எனக்குத் தெரியுமிலே, உசிரின்னு ஒனக்கு கருப்பட்டின்னு. இந்தாப் பாதிலே, அதுதான் அவளுக்குத் தாலி போடன்னு ஒருத்தன் வந்து உசிரே விட்டுட்டுப் போயிட்டானே; அவனோட போயிடிச்சிலே அவளைப் புடிச்சிருந்த ஏளரை நாட்டான். இனிமே நீ பயமில்லாம ஏன் மகளை — ஏன் ராசாத்தியெக் கட்டிக்கிட்டு ராசா கணக்கா இரிலே....!''

இதேபோல் மகளைக் காணும் போது அவள், ''விடியா மூஞ்சியா எனக்கு வந்து வாச்சிட்டியே மூதி. வீட்டிலே இருக்குத புள்ளையை வளைச்சிப் புடிச்சுப்போட்டுக்கிடத் தெரியாம!'' என்று புலம்புவாள்.

தன் 'குட்டை' இவள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாளே என்று நெல்லையப்பன் அஞ்சவில்லை. ஆனால் காந்திமதி இதை நம்பி ஒரு நாள் ''ஏன் அத்தான்,

இவ ஏன் ஒங்களைப் பார்க்கும்போ தெல்லால் இப்படிப் பேசுதா?'' என்று சந்தேகத்துடன் கேட்ட போது அவனுக்குச் சிறிது கலக்கம் ஏற்பட்டது. ஏனென்றால், இப்பொழுது அவன் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் இருந்தான். இந்தப் பாவூர் மாப்பிள்ளை மட்டும் இப்படிச் செத்திரா விட்டால் நெல்லையப்பன் மேலகரம் ஜோஸ்யரின் கூற்றை வெறும் பிதற்றலென்றே நினைத்திருப்பான். இப்பொழுது அவனுக்கே அதில் அசையா நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. பரமசிவன் மாத்திரமல்ல; இன்னும் யார் யார் காந்திமதியைக் கைப்பிடிக்க வந்தாலும், அவர்கள் எல்லோரும் இவன் அடைந்த கதியைத்தான் அடைவார்கள் என்ற நிச்சயம் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. அதே சமயம், இனிமேல் தான் காந்திமதிக்கு அந்த ஜோஸ்ய விவரம் சற்றும் தெரிந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவன் எச்சரிக்கை அடைந்திருந்தான்.

பாவூர் மாப்பிள்ளை இறந்தது சந்தர்ப்ப வசத்தால் என்றும், அதனால் தன் வாழ்வு எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டு விடவில்லை என்று தான் அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். ஆகவே, விரைவில் தன்னை வேறு யாருக்காவது கட்டிக் கொடுக்க அத்தான் ஏற்பாடு செய்வார் என்றும் அவள் கருதியிருக்கக் கூடும். சில மாதங்கள் காத்திருந்த பிறகு, தான் முயற்சி எதுவும் செய்யாதிருப்பதைக் கண்டால், ஒருவேளை அவள் துணிவுடன், ''என்ன அத்தான், எனக்கு என்ன வழி காட்டப் போறீங்க?'' என்று கேட்கக் கூடும். அப்படிக் கேட்டால், ''நான் என்ன செய்யுது காந்தி; அந்தப் பாவிப்பய மகன் ஒன்னைக் கட்டிக்கிடுதேன்னு வந்து, இப்பிடி வாயெப் பொளந்திட்டதில்லா, மத்தவங்களைப் பொண்ணு கேட்க வரத் தவங்க வச்சுக்கிட்டிருக்குது போலிருக்கு. விசயம் அப்பிடி இருக்குதபோது நான்தான் யாருகிட்டெப் போயி, 'ஏன் அத்தெ மகளை ஒங்க மகனுக்குக் கட்டிக்கிடுங்க ஐயர்'ன்னு கேக்க முடியும்? பொறு, பொறு; இன்னும் இரண்டு—மூணு வருசம் போச்சின்னா, தன்னாலே யாராவது வராமலா போயுடப் போறாங்க?'' என்று 'தலா'க் காட்டிக் கொண்டிருக்கலாம் என்றும் அவன் எண்ணியிருந்தான். அப்படி ஒரு நம்பிக்கையில் அவள் காலங் கடத்திக் கொண்டிருக்கும்போது, தன் வருங்காலம் நிரந்தரச் சூன்யமுடையது என்பதை அறிய நேர்ந்தால், ''அப்படியானால் நாம் எதற்காக வாழ வேண்டும்?'' என்று மனமுடைந்து தற்கொலையை நாடி விடுவாளோ என்ற ஐயத்தினால் தான், ஜோஸ்ய விவரம் காந்திமதிக்குத் தெரிந்துவிடவே கூடாது என்று முன்னைவிட எச்சரிக்கையோடு இருந்து வந்தான்.

ஆகையால், இப்பொழுது கோமதியாச்சி பைத்தியம் பிடித்த நிலையில் ஏதேதோ புலம்புவது போல், அந்த ஜோஸ்ய ரகசியத்தையும் ஒரு நாள் காந்திமதியின் முன் வெளியிட்டு விட்டால் ஆபத்தல்லவா என்ற கவலை அவனை வாட்ட ஆரம்பித்தது. ''பைத்தியம் புடிச்சவுக; என்னமோ வாய்க்கு வந்ததைச் சொல்லிக்கிட்டு இரிக்காக; அதெ நாம ஒரு சொல்லா எடுத்துக் கிடலாமா, காந்தி?'' என்று அவன் அவளுக்குச் சமாதானம் சொல்லிவிட முடியும். ஆனால், இந்த ஜோஸ்ய விவரம் மாத்திரம் காந்திமதியின் காதில் விழுந்ததோ, அவளுக்குப் பொல—பொலவென்று பல உண்மைகள் வெளியாகி விடும்; இது பைத்தியத்தின் உளறல் மாத்திரமல்ல; உண்மையும் இதுவாகத் தான் இருக்க வேண்டும் என்ற நிச்சயமும் அவளுக்கு ஏற்பட்டு விடும். 'ஆம்; அவள்மீது உயிரையே வைத்திருந்த நான் திடீரென்று மனம் மாறியது; பிறகு காக்கா வலிப்பு உள்ளவனைக் காட்டிக்கொண்டது; அது காரணமாகத் தனக்கு வேறிடத்தில் கல்யாணம் நடத்த நிச்சயித்து; இவற்றை அவள் அந்த ஜோஸ்யச்

செய்தியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்; அதனால்தான் நான் திடீரென்று அவளை நிராகரித்தேன். ஜோஸ்யம் உண்மையா, பொய்யா என்பதைப் பரீட்சிக்க என்னையே பணயம் வைத்துக் கொள்ள அஞ்சி, வேறொரு மாப்பிள்ளையைப் பிடிக்க நினைத்தேன். முறை மாப்பிள்ளையாகிய நான் இருக்கையில் அவளை வேறொருவனுக்கு மணம் செய்து கொடுக்க முடியாதே என்பதற்காகத்தான் காக்காய் வலிப்புடையவன்போல் நடித்திருக்கிறேன் என்ற உண்மைகள் அவளுக்கு விளங்கி விடாதா? அவை விளங்கி விட்டால், பிறகு அந்த அதிர்ஷ்டம் கெட்ட பெண் வாழ விரும்புவாளா? மாட்டாள்; நிச்சயமாக மாட்டாள். இந்தச் செய்தியை அறியும்போது ஏற்படும் அதிர்ச்சியே அவளைக் கொல்லப் போதுமானது!

ஆகையால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட இடமளிக்கவே கூடாது என்று நினைத்த நெல்லையப்பன் அதைத் தவிர்க்கும் பொருட்டு, தன் அத்தையைச் சென்னையில் உள்ள பைத்திய ஆஸ்பத்திரியில் கொண்டு சென்று விட்டுவிடத் தீர்மானித்தான்.

'நெல்லையப்பா, உன் தீர்மானம் சரியானதுதான் அப்பா! ஆனல் மற்றொரு விஷயத்தை நீ மறந்து விட்டாயே? அத்தை போய்விட்ட பிறகு, சகல வசதிகளும் நிறைந்த வீட்டில், வாழ்வின் சுவையை நுகர்ந்திராத நீயும் காந்திமதியும் தனித்து வாழப் போகிறீர்களே? ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக வாழப் போகிறீர்களே? அந்த ஆதரவு என்ற பூம்பொழிலில், தனிமை என்ற தென்றலும் வீசும் போது, பருவக் கொந்தளிப்பு பலமாக ஏற்படுமே, அப்பா? அந்தக் கொந்தளிப்பை அடக்கிக் கொள்ளும் திறன் உனக்கு இருக்குமா, அல்லது அவளுக்குத்தான் இருக்குமா, என்பதைச் சிந்திக்காமல் போய் விட்டாயே, அப்பனே?'

(தொடரும்)

# நீயும் நானும்!

நீ, நான் எனவே அன்றிருவர்;—இன்றே
நீயும் நானும் நேர் ஒருவர்!

நீயும் நானு முன்னுளில்—பாசி
நீரின் உறவாய்த் தனித்திருந்தோம்!
நீயும் நானு மிந்நாளோ—இரண்டு
நெஞ்சுக்கு மொரே பொருளானோம்!

நீ, நான் எனவே அன்றிருவர்;—இன்றே
நீயும் நானும் நேர் ஒருவர்!

மூலைக் கடலை வான்வளையம்—தொட்டு
முத்த மிடுவ தெப்படியோ?
காலக் கடலில் நீ கவிந்தால்—ஒரு நாள்
கைத் தலம் பற்றும் நம்பிக்கை நான்!

நீ, நான் எனவே அன்றிருவர்;—இன்றே
நீயும் நானும் நேர் ஒருவர்!

'காதல் பொய்' என்று கதைத்தவன் —
இன்றுன்
காதல் பிழையால் தவிக்கின்றேன்!
ஆதலின் உன்னை எனக்குத் தா!—எனையும்
அளிப்பேன் உனக்கே; சம்மதம்தான்!

நீ, நான் எனவே அன்றிருவர்;—இன்றே
நீயும் நானும் நேர் ஒருவர்!

இளமை ஒரு நாள் இருண்டு விடும்;
—வாழ்வின்
இரகசியமும்தான் உடைந்துவிடும்!—ஆனல்
முழுமையும் இன்றே நம் கையில்தான்!
—கிடக்குது
முட்டாள் உலகம்;—கிட்டே வா!

நீ, நான் எனவே அன்றிருவர்;—இனியோ
நிகர் நாம் என்றென்றுமே ஒருவர்!

— 'தமிழழகன்'



# இனிய பாதி

'இளம்பாரதி'

## ஒரு முனை

என் கணவர் கடிதம் எழுதியிருந்தார்—ஊரிலிருந்து.

எவருடைய கைத்தலம் ஒன்றே எனக்கு உறுதுணை என்று நம்பி என் வாழ்வு ஒப்படைக்கப்பட்டதோ, அதே கைத்தலம் எழுதிய கடிதம் என் நெஞ்சில் வழக்கம் போல ஈட்டிகளைப் பாய்ச்சியது.

ஆசை வெட்கம் அறியாது என்ற மயக்க மொழி என்னில் உணர்வையூட்டி என் கணவருக்கு என்னைக் கடிதங்கள் எழுதச் சொல்லித் தூண்டியது. திருமண வாழ்வான அந்த ஒருமாத காலத்தை என்னால் எப்படி மறக்க முடியும்? கள்ளங் கபடமற்ற அவர் உள்ளம் என் இன்பக் கனவுகள் அனைத்தையும் நனவாக்கிக் காட்டியதே! காதலன் ஒருவனைக் கைப்பிடித்து மாதர் அறங்கள் புரியக் கனவு காணுதல் தவறல்லவே! ஆண்டாள் பாடியிருக்கும் பாசுரங்கள் அனைத்தும் எனக்காகவே பாடப்பட்டதாக என் கன்னிப் பருவத்தில் நான் எண்ணிச் சிலிர்த்ததுண்டு.

என் இன்பத்திற்கோர் எல்லை காணுவதாக என் மாமனாரின் பணப் பைத்தியம் தலைவிரித்தாடியது. கள்ளங் கபடற்ற என் கணவரின் உள்ளம்—ஒருமாத காலமாக என்னைச் சுற்றி வந்த உள்ளம்—திசை மாறியது. அவர் அப்பாவிற்கு அடங்கின பிள்ளை. காதலை விட அவருக்குப் பாசம் பெரிதாயிருந்தது.



நான் கன்னிப் பருவத்தைப் போலஎன் தந்தையுடன் எங்கள் வீட்டிலேயே வசிக்க நேர்ந்தது. மண நினைவுகளையும் கணவரின் போக்கையும் கற்பனை செய்து பெருமூச்சு விடுவதைத் தவிர என்னால் வேறேதும் செய்ய முடிய வில்லை. என் தந்தை தன் சம்பந்திக்கு வாரத்திற்கு ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். நான் வெட்கத்தை விட்டு என் கணவருக்கு மாதத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன்-நைந்து வாடும் ஓர் உயிரையும் உள்ளத்தையும் காப்பாற்றும் உதவி கோரி. என் கணவரிடமிருந்து சில வார்த்தைகள் தாம் கடிதம் என்ற உருவில் வரும். அவையும் வேறெவராலோ சொல்லப்பட்டு இவர் கை எழுதித்தீர்த்த வகையில்தான் இருக்கும்.

என் இன்பப் பாதையை நானே வகுத்துக் கொள்ள நான் கடிதம் கடிதமாக அவருக்கு எழுதினாலும், அவரிடமிருந்து வந்த பதில்கள் என்னவோ என் நெஞ்சில் நெருப்பைத்தான் அள்ளிக் கொட்டின; பழுக்கக் காய்ச்சிய ஈட்டிகளைத் தான் செருகின.

★ பிப்ரவரி இதழ் 'உமா' அட்டைப்படப் போட்டியில் தேர்வு பெற்ற கதைகளில் முதற் கதை இது.

தபால்காரன் கொடுத்துச் சென்ற கடிதத்தை வாசித்து முடித்த பின், என் தந்தைக்குக் கூடத் தெரிவிக்காமல் அவருக்கு முதல் முறையாகக் காரசாரமாக ஒரு கடிதம் எழுத உட்கார்ந்தேன்.

மறு முனை

என் மனைவி கடிதம் எழுதியிருந்தாள்.

நான்கு பேர் அறிய எவள் கையைப் பற்றிக் கொண்டு எந்த நாளும் கைவிடேன் என்று மந்திர உச்சாடனம் செய்து மனைவியாக ஏற்றுக் கொண்டேனோ அவளே துன்பம் இழையோட தன்னை மீண்டும் என் வீட்டிற்கு அழைத்துக்கொள்ளுமாறு உரிமை கோரிக் கடிதம் எழுதும் சூழ்நிலையை உருவாக்கி விட்டேன்.

சபலம் தட்டிய மனத்தோடு அதை என் தந்தையிடம் காட்டினேன், எப்பொழுதேனும் ஒரு கணமேனும் மனிதத் தனம் அவரிடம் வந்து சேராதா என்ற ஆர்வத்தோடு.

சித்திரம்: ராஜன்

“கோமு, உன் பக்கத்திலே இருந்தா மாத்திரம் உன் அப்பா பரிசளித்த இந்தக் கடிகாரம் வேகமாக ஓடுது; நீ மறைஞ்சுதும் இதுவும் எப்படியோ நின்னுடுதே?....”

“சீ, பேடிப் பயலே! கடிதாசு எழுதி மனசை மாத்திப் பிடலாமுன்னு நினைச்சுட்டாப் போல இருக்கு. இவ அப்பன் என் கிட்ட மோதி சாதிக்காததை தான் சாதிக்கலாம்னு எண்ணம் போலிருக்கு. கிழிச்சுப் போட்டுட்டு வேலையைப் பாருடா....!”

“மூன்று வருஷங்களில் ஒருவன் இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியாதா?” என்ற அகங்காரக் கேள்வி மின்னிட்டது. “வரதட்சணை என்ற பெயரில் தன் மகளோடு சம்பந்திவீட்டிற்கு அனுப்பி வைக்க முடியாதவன் மனிதன் தானா?” என்ற கேள்வியோடு சங்கிலியிட்டுத்தொடரும் “பணம் ஒரு புறம் இருக்கட்டும். சொன்ன சொற்படி நடக்கத் தவறிய ஒருவன் மானஸ்தனா?” என்ற கேள்வியும் என் தந்தையிடமிருந்து நான் எதிர்பார்ப்பதே வழக்கமாகி விட்டது. என்றைக்கு அவளிடமிருந்து கடிதம் வந்தாலும் நான் அவளுடைய கணவன்தான். ஆனால் ஒருவருடைய ஆசை மகனும்கூட.

தன் மகனது திருமணத்தில் ரூபாய் இரண்டாயிரத்திற்குக் குறையாமல் வரதட்சணை வாங்கி விடுவதாகப் பலருக்கு நடுவில் சபதத்தை எடுத்துக் கொண்ட என் தந்தையின் மானத்தைக் காப்பாற்ற நான்தான் பயன்படுத்தப் பட்டேன். என் மாமனாராவது தன் பேச்சைக் கட்டுப் படுத்திக் கொண்டிருக்கக் கூடாதா? வரதட்சணை ரூபாய் இரண்டாயிரம் நிச்சயம் தருவதாகச் சொன்னார். பின்னாளில் பங்காளிப் பகையினால் தொழிலில் நஷ்டமடைந்து ஏழையாகிவிட்ட அவரால் தன் பேச்சை நிறைவேற்ற முடியவில்லை. இத்தகைய மாற்றத்தின் விளைவு இளந் தம்பதிகளைப் பார்த்துச் சிரித்தது. நான் தாலியைக் கட்டியவன். அவள் தாலி ஏற்றுக்கொண்டவள். திருமணமான ஒரு மாத காலத்தில் நாங்கள் இருவரும், முந்நூறு மைல் இடைவெளியில் பிரிக்கப் பட்டோம்.

நான் தந்தையுடன் வாதாடினேன். பாசத்தைத் தளமாகக் கொண்ட தந்தையின் வீம்பு வென்றது; நான் கைவிட்டால் தனக்கு வாழ்வே இல்லையென்று என் மனைவி வெளியிட்ட அவலக் குரல் தோற்றது. இளமையை மையமாக வைத்து வீரம் பேசும் முன்னேற்றவாதிகளின் கணக்குப்படி நான் கோழைதான். ஆனால் அப்படி வாழ்வதைத் தவிர என்னால் வேறேதும் இயலவில்லை.

வாழ்வில் ஏற்பட்ட கசப்பை மூடி வைத்து மறைக்க நான் கடும் உழைப்பில் மனத்தைச் செலுத்தினேன். பழகிய ஊரும், தெரிந்தவர் உறவும் என் மனத்தை அலைக்கழித்துச் சாகடிக்கும் நிலையிலிருந்து தப்பிக் கொள்ள ஆக்ரா சர்வகலாசாலையில் பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். சத்தியம் செய்வதுபோல் மந்திர உச்சாடனம் செய்து பின்னர் மனைவியிடமிருந்து முந்நூறு மைல் பிரிந்திருந்தால் என்ன, அன்றி மூவாயிரம் மைல் பிரிந்திருந்தால் என்ன?

ஆக்ராவில் எங்கள் கல்லூரியின் முதல்வர் ஒரு வங்காளி. பிரும்மாண்டமாக இருந்த அவருடைய வீட்டின் மாடிப் பகுதியில் நான் தங்குவதற்கு அவரே எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தார். அவரும் அவர் மனைவியும் புதிதாக திருமணமானவர்களைப் போல் தோற்றியதால் இருவருடனும் அதிகமாகப் பழகாதிருந்தேன். என்னுடைய கூச்சம் நிறைந்த போக்கை அவர்களிருவரும் கேலி செய்து பேசுவார்கள்; அடிக்கடி என்னை மாலையில் உலாவுதற்கு அழைத்துச் செல்வார்கள். அப்போதெல்லாம் எனக்கு ஓர் உணர்ச்சிதான் பொங்கியெழும். என் மனைவி என்னுடன் இருந்தால் நானும் அவர்களுடன் சமதையாக நடந்து கொள்ளலாமல்லவா?

என் மனத்தைப் படம் பிடித்தது போல ஒரு நாள் "நீங்கள் இன்னும் கல்யாணம் செய்து கொள்

சித்திரம்: கந்தன்

"இன்னும் இந்தக் கட்டைக்கு என்ன வேணும்? வீடு, வாசல், நிலம் எல்லாத்தையும் தொறந்துவிட்டு வந்திருக்கிறது; ஆயுள் பலம் மட்டும் என்னிக்கும் இருந்தா அதுவே போதும்!"

ளாமலிருப்பது சரியல்ல. ஒரு வங்காளப் பெண்ணை நிச்சயிக்கட்டுமா?" என்று அவர் கிளறிய போது, அவருடைய மனைவி "நேற்று வந்தாரே ஒருவர், அவருடைய இரண்டாவது பெண் கல்யாணத்திற்கு நிற்கிறதாம்," என்று தன் கணவனின் கருத்தை ஊர்ஜிதப் படுத்தினாள். என்னிடமிருந்து நெடு நாட்களுக்கு முன்பு பிரிந்திருந்த மன நெகிழ்வு திரும்பி வந்து பற்றிக் கொண்டது. என் திருமணக் கதையை அவர்கள் இருவரிடமும் சொல்லிக் கதற வேண்டும் போலிருந்தது. நெடுநாட்களாக இறக்கப்பட்டிருந்த சுமை என் நெஞ்சில் ஏறிக் கொண்டது. மனத்தில் இருப்பதை வெளியே சொன்னால் சுமை குறையுமென்று சொல்வார்களே, அதை நம்பி அவர்களிடம் என் வாழ்க்கை ரகசியத்தை வெளியிட்டேன். சுமை அதிகமாகி விட்டது.

"நீங்களெல்லாம் மனிதர்தாமா?" என்று தன் விழிப்

பார்வையால் நெருப்பைக்கொட்டி விட்டு கல்லூரி முதல்வரின் மனைவி என் அறையிலிருந்து கீழே இறங்கிப் போய் விட்டாள். அவரோ ஏதும் பேசாமல் சுருங்கிய முகத்தோடு மொட்டை மாடிக்குச் சென்று விட்டார்— அலையும் உள்ளத்தோடு என்னைத் தனியே தவிக்க விட்டு.

அதற்குப் பிறகு நான் அன்றிரவு அவர்களிருவரையும் சந்திக்கவே இல்லை.

மறுநாள் பொழுது விடிந்து எழுந்திருந்த போது, என் அறையில் ஒரு கடிதம் தரையில் கிடந்ததைத் தெரிந்து எடுத்தேன். முதல்வரின் மனைவியின் கைப்பட அது எழுதப்பட்டதென்று அறிந்த நான் பரபரப்புடன் அதை வாசித்தேன். ''வணக்கத்திற்குரிய நண்பரே, உங்கள் மனைவியை அழைத்து வந்து இருக்க முடியுமானால், இங்கே எப்போதும் போல நிலையாக இருங்கள். அப்படியில்லாமல் ஒரு பெண்ணை வஞ்சித்து இரக்கமற்ற ஆணாகத்தான் வாழ முடியுமென்றால் வேறு இருப்பிடம் தேடிக் கொள்ளுங்கள். எங்கள் பாதுகாப்பில் உங்களைப் போன்ற ஒருவர் இருக்க நாங்கள் இருவரும் விரும்பவில்லை. இவ்வாறு கடுமையாக எழுதுவதற்காக மன்னியுங்கள்.''

வியப்புற்றேன். கூடப் பிறவா விட்டாலும் எவள் என்னைத் தம்பி போல் அன்பு காட்டிப் பாதுகாத்தாளோ, அவளா இப்படி வெட்டி முறித்து எழுதியிருக்கிறாள்?

அவர்கள் இருவரையும் நேரில் நின்று நிமிர்ந்து நோக்கும் திறனற்று அவர்களைச் சந்திக்காமலே கல்லூரிக்குச் சென்றேன். துணை ஆசிரியர் ஒருவர் மூலமாக முதல்வரிடமிருந்து ஒரு கடிதம் பெற்றேன். ''என் மனைவி எழுதிய கடிதம் கிடைத்திருக்கும். நைந்து கருகிய ஒரு பெண்ணின் கடிதமே அது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நாங்கள் இருவரும் ஒரு காலத்தில் இப்படித்தான் பணத் தகராறினால் பிரிக்கப்பட்டிருந்தோம். காலத்தின் மாறுபாட்டினால் நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தோம்; உயிர் பிழைத்தோம். எங்களைப் பின்பற்றி, சிதறலை ஒன்றுபடுத்துங்கள். தேவையான பணத்தை நானே தருகிறேன். இந்த ரகசியம் யாருக்கும் தெரிய வேண்டாம்.''

பதுங்கியிருந்த ஆண்மை நிமிர்ந்தது. கணவன் என்ற சொல்லின் விளக்கம் என் இதயத்தின் திசைகளெங்கும் பாய்ந்தது. பெண்ணுக்குப் பெண் இரங்குவது மட்டுமல்லாமல் ஆணுக்கு ஆண் அறிவு புகட்டும் வெட்கும் நிலையை உருவாக்கிய நான் புது மனிதனாக மாறினேன். என் தந்தையின் எண்ணத்தை மாற்றி மனைவியை ஏற்றுக்கொள்வது, அல்லது ஆசிரியப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு, தந்தை சேர்த்து வைத்த பணத்தைப் பொதுநலத் தொண்டுகளுக்குச் செலவிட்டுக் கரைப்பது என்ற உறுதி பூண்டு ஒரு மாத விடுமுறை எடுத்துக் கொண்டு ஆக்ராவை விட்டுக் கிளம்பினேன்.

என் தந்தை என்னை அன்போடு வரவேற்றார். அவர் உள்ளத்தே எழுந்த பாசம் காலத்தால் குறையவில்லை. ஆதர்சத் தம்பதிகள் மானசீகமாக என்னில் உணர்வூட்ட, என் உள்ளத்தை அவரிடம் திறந்து காட்டினேன்.

''வேலையும் வேணும், வெட்டியும் வேணும். சும்மா இங்கேயே இரு.... ஒப்புக்கொள்றேன். ஆனால் அவள் மறுபடியும் இங்கே வந்து சேரணும்னு நினைச்சியோ அது மட்டும் முடியாது. வேறு கல்யாணம்னாலும் செஞ்சிக்கோ; ஆமாம்.''

சத்தியத்தைக் காப்பாற்றுவதாக வெறி கொண்டிருந்த அவருடைய குரலுக்கு எதிர் நிற்பது போல், ''உங்கள் சொத்து எனக்குத் தேவை இல்லை. வாழ்க்கைக்காக சத்தியமே ஒழிய, அடிப்படையை அழித்து விட்டு—மனச் சாட்சியை அறவே ஒழித்து விட்டு—வாழ்வில் நித்தமும் சாவதற்கு அல்ல,''

என்று கூறிவிட்டுப் படுக்கைச் சாமான்களைக் கட்டினேன். எப்படியும் என் மனைவியைச் சந்தித்துத் தேற்றி, ஆக்ராவிற்கு அழைத்துச் சென்று விட வேண்டுமென்று முடிவு செய்தேன்.

வாசலில் வந்து நின்ற சைக்கிளிலிருந்து இறங்கிய தபால்காரன் ஒரு ரிஜிஸ்தர் தபாலை என்னிடம் கொடுத்தான். ஓர் ஆண்டுக்குப் பின் என் மனைவியிடமிருந்து நான் பெறும் கடிதம்!

பிரித்துப் படித்தேன்.

" தகுதியில்லாதிருந்தும் மனைவி என்ற பொறுப்பில் இதை எழுதுகிறேன். ஆமாம், தங்களுக்கு இனி கடிதம் எழுதக் கூடாது என்று என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்ட தந்தையின் சொல்லையும் மீறியே இதை எழுதுகிறேன். இதுவே என் கடைசிக் கடிதமாக இருக்கும். மன்னித்து விடுங்கள்.

" தாங்களும் தங்கள் தந்தையும் நெடு நாட்களாக எதிர்பார்த்திருந்த என் வரதட்சிணைப் பணம் ரூபாய் இரண்டாயிரத்திற்கு இத்துடன் 'செக்' வருகிறது. பெற்றுக் கொள்ளவும். தன் மகளின் வாழ்வு விடியாதாவென்று ஏங்கிக் கிடந்த என் தந்தை ஐந்து மாதங்களுக்கு முன்பு காலமாகி விட்டார். உயிர் நிறைந்த அவருடைய உடல் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை உயிரில்லாத பிணம் சாதித்து விட்டது. அவருடைய சாவில் தன் பங்கை நிறைவேற்றிக் கொள்ள அவர் இறந்த மறு மாதமே எனக்கு ரூபாய் இரண்டாயிரத்திற்கு 'செக்' அனுப்பி விட்டது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி.

" நான் உங்களுடன் வாழ முடியுமென்றுதான் நினைத்திருந்தேன். காசம் இவ்வளவு சீக்கிரம் என்னை நோயாளியாக்கி வாழ்வின் முடிவைக் காட்டும் என்று நம்பவில்லை. என் தந்தையின் சாவிலே நான் எவ்வளவு மகிழ்ந்தேனே, அவ்வளவு தூரம் என் சாவிலே நீங்கள் மகிழுங்கள்.

" என் பெயரிலிருந்த 'செக்'கை தங்கள் பெயருக்கு மாற்றியிருக்கிறேன். ஒரு விஷயம். அவசியம் சீக்கிரமே இன்னொரு கல்யாணத்தை முடித்துக் கொள்ளுங்கள். என் கடைசி ஆசை இது. அந்தப் பெண்ணின் வரதட்சிணைப் பணமாக இந்த ரூபாய் இரண்டாயிரத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அந்தப் பணம் இப்படி ஒரு பெண்ணுக்கு நல்ல வாழ்வைத் தருமானல், என் தந்தையின் ஆத்மா சாந்தி அடையும்.

" மாமாவிடம் மன்னிப்புக் கேட்டதாகச் சொல்லுங்கள்.

இப்படிக்கு,
விமலா."

நீர் நிறைந்த கண்களோடு என் தந்தையிடம் எதுவும் பேச முடியவில்லை. 'செக்'கைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்து விட்டு வாசலுக்கு ஓடினேன். கள்ளங் கபடமற்ற ஒருத்தி சொல்லுதிர்த்து ஆணினத்தைக் கசக்கிப் பிழியும் நிலையில் என்னை ஓட ஓட விரட்டிக் கொண்டேயிருந்தாள்.

" சார், தந்தி ."

நான் தந்தியைப் படித்தேன்.

விமலா இனி என் உணர்வுக்கு மட்டுமே எட்டக் கூடியவள்! ○

★

அறிவாளி!

சோம்பேறிகளான மூடர்களின் மத்தியில் கருத்து முயற்சி உள்ளவனும், உறங்குபவர்களின் மத்தியில் விழிப்புள்ளவனும், அறிவாளி விளங்குவான். பந்தயக் குதிரை மற்ற வாடகைக் குதிரைகளைப் பின்னல் விட்டுவிட்டு முன்னேறிப் பாய்ந்து ஓடுவது போல், அவன் மற்றவர்கள் மத்தியில் முன்னேறி விடுகிருன்.

— புத்தர்

3

மனிதர் மதியினால் விதியை மாற்றி விடலாம் என்கிறார்கள். ஆனால் விதி மனிதர்களை எப்படியெல்லாம் சுழற்றி விட்டு ஆட வைத்து வேடிக்கைப் பார்க்கிறது என்பதைப் பார்க்கும்போது விதியை மதியால் வெல்லுவதென்பது சாத்தியமா என்ற மலைப்பு எழுந்து விடுகிறது. வீட்டு வாசலில், தெருக் கோடியில், அடுத்த தெருத் திருப்பத்தில் அது ஒருவனை எந்த மாதிரிச் சுழலில் சிக்க வைக்கத் திட்டம் போட்டு வைத்துக் காத்திருக்கிறது என்பதை அறியும் உபாயத்தைக் கண்டு பிடிக்கும் நாள்வரை மனிதன் விதியின் கைப் பொம்மையாகத் தான் இருந்து தீருவான்.

ஒரு வாரத்திற்கு முன்வரை இந்திராவுக்குத் தன் வாழ்க்கை என்ற ஆற்றோட்டத்தில் இந்த மாதிரித் திடீர்த் திருப்பங்கள், சுழிப்புகள் வழி மறைக்கும் பாறைகள் எல்லாம் நேரும், எதிர்ப்படும் என்பது தெரியாது. கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பை முடித்து விட்டுத் தன் தந்தையின் மேலுத்தரவை எதிர்பார்த்துக் காத்திருந்த பருவப் பெண் அவள். அந்தப் பருவத்துக்கே உரிய மனோராஜ்யக் கற்பனைகளில் அவள் சில சமயங்களில் ஈடுபடுவது உண்டு. அதைத் தவிர தன்னுடைய வருங்காலத்தைப் பற்றி அவளுக்குத் திட்டமான கருத்து ஏதும் ஏற்பட்டு விடவில்லை.

அந்த நிலைமையில் அவளுடைய தந்தை அர்ஜுனப் பிள்ளை அவளை அழைத்து, "சென்னையில் உங்கள் மாமன் சீனுவாசம் பிள்ளையின் உடல் நிலை கவலைக்கிடமான எல்லைக்குப் போய்க் கொண்டிருக்கிறதாம். பழைய குடும்ப மனத் தாங்கல்களை யெல்லாம் மறந்து நம்மை யெல்லாம் புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறார்," என்றார்.

அதைத் தொடர்ந்து அவர் அவளுக்குப் பழைய மனத் தாங்கல்களைப் பற்றி விளக்கிச் சொன்னார். சீனுவாசப் பிள்ளை இயல்பில் சிறிது செல்வச் செருக்கு பற்றியவர். அதை யாரும் சுலபமாகக் கண்டு கொள்ள இடம் கொடுக்க மாட்டார். இருந்தும் ஓரோர் சமயங்களில் அவரை மீறி அந்தக் குணம் மேலோங்கி வந்து விடும். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் அவர் தமது சொந்தத் தங்கை சண்பகத்தின் கணவர் அர்ஜுனப்



பிள்ளையையே அலட்சியமாகப் பேசி விட்டார். நிலைமை ரஸாபாச மாகாதபடி சீனுவாசப் பிள்ளையின் மனைவி ருக்மிணி குறுக்கிட்டுக் காப் பாற்றினாள். ஆயினும் அவர்கள் உறவிலே விரிசல் கண்டு விட்டது.

அதற்குச் சில நாட்களுக்கு முன் தான் வீட்டிலே எல்லோரும் கூடிப் பேசிக்கொண்டிருந்தபோது ருக்மிணி சீனுவாசப் பிள்ளையிடம், "என்னங்க! உங்க தங்கச்சி மக இந்திராவை நம்ப சாதிக்குக் கட்டிக்கணும்னு பெண்ணை எது வரையிலே படிக்க வைக்கணும், அவளுக்குப் பாட்டு, நாட்டியம் எதெல்லாம் கத்துக்குடுக்கணும்னு இப்பவே சொல்லிடுங்க", என்று வேடிக்கையாகச் சொன்னாள்.

சீனுவாசப் பிள்ளை, "அவங்க எதைக் கத்துக் கொடுத்தாலும் கத்துக் கொடுக்காட்டியும் அவன் அவளைத் தான் கட்டிக்கப்போறான். அவங்க ஊருக்கு புறப்படறதுக்கு முன்னே நிச்சயதார்த்தம் நடத்தி

பத்திரிகை வச்சுடப் போறேன்,'' என்றார்.

அதைக் கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். சாரதி துரத்த 'அத்தே அத்தே' என்று கூவிக்கொண்டு ஓடி வந்த இந்திராவும் அங்கே வந்து அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டாள்.

அப்போதிருந்த மகிழ்ச்சிப் பெருக்குக் குரலில் அர்ஜுனப் பிள்ளை, ''குழந்தை பெண்ணாத் தான் பிறக்கணும்னு உங்கதங்கச்சி எத்தனை சாமியை வேண்டிக்கிட்டிருப்பா! சாரதிக்காகன்னே அவ வரம் கேட்டுப் பெண்ணைப் பெத்திருக்காளே!'' என்றார்.

அது நடந்த சில நாட்களுக்குள் சீனுவாசப் பிள்ளையின் மட்டு மீறிய நாவின் பயனாக இரு குடும்பங்களுக்கிடையே மனக் கசப்பு புகுந்து விட்டது. அதிலிருந்து இரு குடும்பங்களும் எட்டி எட்டி விலகிப் போய்க் கொண்டேயிருந்தன. அந்தத் தடவை குடும்பத்துடன் பெங்களூருக்குச் சென்ற அர்ஜுனப்பிள்ளை மறுபடி சென்னைக்கு வரவேயில்லை. ருக்மிணி இறந்தபோது கூட அவர் தமது மனைவியை மட்டுமே அனுப்பி வைத்தார். சண்பகம், ''நீங்களும் வந்து தலையைக் காட்டிட்டுத் திரும்பிடுங்க. நல்லா இருக்காது,'' என்று கண்ணீருடன் கெஞ்சியதற்கு அவர், ''நான் வந்து இன்னொரு தடவை அந்த மண்டைக் கர்வம் பிடிச்சவருகிட்டே அவமானப்படறது தான் நல்லா இருக்குமோ? உங்க அண்ணி சடங்குக்கு நீ மாத்திரம் போயிட்டு வா, போதும்,'' என்று சொல்லிக் கண்டிப்பாக மறுத்து விட்டார்.

எவ்வளவு பணமிருந்தால்தான் என்ன? இரண்டுங்கெட்ட வயதுப் பையன் தாயில்லா வீட்டில், வேறு பெண் உறவினரே இல்லாத வீட்டில் வளர்ந்தால் அந்த வளர்ச்சி அப்படி அப்படித்தானே இருக்கும்? சண்பகத்திற்கு அண்ணன் மகனைத் தன்னிடன் கொண்டுபோய் வைத்துக் கொண்டு வளர்க்க வேண்டுமென்ற ஆசை. ஆனால் கணவர்

சுதந்திர உழைப்பு நமக்கு செல்வம் தரும்; சுதந்திரப் பிரச்னை உண்மையை உணர்த்தும். மெதுவாக, ஆனால் உறுதியாக மனிதன் பழமைக் கட்டிலிருந்து விடுதலை பெற்று வருகிறான். சுய நம்பிக்கை கொள்ள அவன் தெரிந்து கொண்டான். பேய்களை, பிசாசுகளை, பூதங்களை அவன் வெறுத்தான்.

— இங்கர்சால்

என்ன சொல்லுவாரோ என்று பயம். முதலில் அண்ணனிடம் கேட்டு அவரும் சம்மதித்த பிறகு கணவர் மறுத்த விட்டாலும் நிலைமை இன்னும் மோசமாகி விடும். அதனால் அவள் அதைப் பற்றி ஒன்றும் பேசாமலே பெங்களூருக்குப் புறப்பட்டு விட்டாள். பின்னால், நிகழ்ந்தவற்றிலிருந்து அந்த நெருக்கடி நேரத்தில் தான் அப்படிக் கோழையாகப்பேசாமல் இருந்து விட்டது எத்தகைய தவறு என்பதை எண்ணி எண்ணி அவள் துடிக்க நேர்ந்தது.

சீனுவாசப் பிள்ளை வீம்புடன் மகனைத் தாமே வளர்த்தார். அவன் தாயற்றவன் என்ற மன இளக்கம், அவருடைய செல்வச் செருக்கு இயல்பு இரண்டும் சேர்ந்து பையனை உதவாக்கரையாக்கி விட்டன என்பதை அவர் வெள்ளம் அணை கடந்த பின்தான் உணர்ந்தார். அவன் கட்டு மீறிப் போன பிறகு அவனைத் திருத்தித் திருப்பி மறுபடியும் மகனாக்கிக் கொள்ள என்ன செய்யலாம், யார் உதவியை நாடலாம் என்று அவர் மனம் பறந்தது. அந்தப் பதைப்பு நேரத்திலும் கூட அவர் சண்பகம், அவள் கணவரின் உதவியை நாட விரும்பவில்லை.

கடைசியாக அவர் படுத்த படுக்கையாகி விட்டார். அந்த நேரத்திலும் சாரதி தன் தான் தோன்றிப் போக்கிலிருந்து மாறவில்லை. வீட்டுக்குச் சரியாகவே வருவதில்லை. வந்தாலும் தந்தை

அறிவுக் கூர்மையும், நேர்மையும், உறுதிப் பாங்கும் உள்ளவனுய், உன்னேடு ஒத்துப் பழகக் கூடியவனுய் ஒரு வழித் துணைவன் கிடைக்கிருனு? எல்லாக் கவலைகளையும் விட்டு விட்டு, களிப்புடனும் கருத்துடனும் அவனேடு நடந்து செல்.

—புத்தர்

எப்படி யிருக்கிருர், அவருக்கு என்ன சிகிச்சை நடக்கிறது. அதன் பலன் என்ன என்பதைப் பற்றி வேலைக்காரர்களிடம் கூடக் கேட்பதில்லை. ஓரோர் நாள் சினுவாசப் பிள்ளையே மகனைக் கூப்பிட்டனுப்புவார். அவன் வேண்டா வெறுப்பாக அவர் படுத்துக் கிடக்கும் அறைக்கு வந்து அவர் கேட்கும் கேள்விகளுக்கு அரைச் சொல், முனகல்களில் பதில் சொல்லி விடுவான்.

அவன் இப்படி அவரிடம் ஒட்டாமல் ஒதுங்க முயன்றதற்கும் ஒரு வகையில் பிள்ளையே தான் காரணம். அவன் கூடா நட்பு கோஷ்டியொன்றைச் சேர்த்துக் கொண்டு 'மைனர்' விளையாடத் தொடங்கி விட்டான் என்று அறிந்த பிள்ளை அவனை அழைத்துக் கண்டித்தார். அவன் செலவுக்குப் பணம் கொடுக்க முடியாதென்று மறுத்தார். சாரதி கையெழுத்துப் போட்டுக் கடன் வாங்கத் தொடங்கி விட்டான். பிள்ளை அவனை மறுபடி கூப்பிட்டு, ''இந்தச் சொத்து முழுவதும் என் சொந்த சம்பாத்தியம். இதன் மேல் கடன் வாங்க உனக்கு உரிமையில்லை. இந்தச் சொத்தையெல்லாம் உனக்குத் தான் விட்டு விட்டுப் போக வேண்டுமென்று என்னைக் கட்டாயப் படுத்தும் சக்தி எதுவும் கிடையாது. என் மகனுக்கு என் சொத்துக்களின் மேல் எவ்விதமான உரிமையுமில்லையென்று பத்திரிகையில் விளம்பரம் போட்டு விடுவேன்'' என்று மிரட்டினுர்.

சாரதி, ''எனக்கு மாதம் இவ்வளவென்று செலவுக்குக் கொடுத்து விடுங்கள்'' என்ருன்.

பிள்ளை கோபத்துடன், ''உன்னுடைய இந்தக் காலாடி ஆட்டத்திற்கு நான் மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமோ? போடா வெளியே; இனி என் முகத்திலே விழிக்காதே'' என்று இரைந்தார்.

பையன், ''நானுக வந்து விழிக்க மாட்டேன். நீங்கள் தான் என் முகத்தில் விழிக்க ஓடி வருவீர்கள். நான் அனுபவித்திருப்பது கொஞ்சம் தான். அவ்வளவு தான் எனக்கு விதித்தது. அல்லது அதுவே போதும் என்ற திருப்தியுடன் கடலில் விழுந்து விடுவேன். அலை புரட்டிக் கொண்டு வந்து கரை மணலில் போட்டிருக்கும். என் முகத்தில் விழிக்க ஓடி வருவீர்கள்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

சீனுவாசப் பிள்ளை கிடு கிடுத்துப் போய் விட்டார். அன்று முழுவதும் ஏருத படியெல்லாம் ஏறி எங்கெல்லாமோ அலைந்து மகனைத் தேடிப்பிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தார். அவன் அதுவரை பட்டுள்ள கடனை யெல்லாம் தீர்த்து, அவனுக்கென்று தனியாகக் கார் வாங்கிக் கொடுத்து மாதம் முன்னூற்றைம்பது ரூபாய் கொடுத்து விடுவதாக பிள்ளை அவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அந்த நேரத்தில் அவர் காட்டிய பெற்ற பாசக் கோழைத்தனம் சாரதியின் எடையில் அவரைத் துரும்பளவாக்கி விட்டது. எவ்வளவு செல்வத்தை வைத்துக் கொண்டு தம் ஒரே மகனுக்கு மாதத்துக்குப் பிச்சைக்காசு முன்னூற்றைம்பது ரூபாய் கொடுக்கும் தகப்பனிடம் ஒரு வெறுப்பையும், அலட்சியத்தையும் வளர்த்து விட்டது.

தமது உடல் நிலையின் போக்கு அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. இந்தத் தடவை படுக்கையிலிருந்து எழுந்து நடமாடுவதென்பது

நிகழப் போவதேயில்லை; ஆகை யால் மகனையும், சொத்துக்களை யும் காப்பாற்றிக்கொள்ள கடைசி முயற்சி ஏதாவது செய்துவிட வேண்டுமென்ற பதைப்பு தோன்றி விட்டது. இப்போது இந்திரா பருவப் பெண்ணாக வளர்ந் திருப்பாள். அவள் வந்தால் சாரதியை நிச்சயமாகத் தடம் திருப்பி விடலாமென்ற ஆசை நம் பிக்கை வேகமாக எழுந்தது. மாப் பிள்ளை அர்ஜுனப் பிள்ளைக்குக் கடிதம் எழுதினார்.

தந்தையின் வாய்மொழியாகத் தன் மாமாவுக்கு நேர்ந்த மனத் துன்பங்களை எண்ணி எண்ணி இந் திரா மனம் உருகினாள். அவரை அந்தக் கடைசி நேரத்திலும் அலட் சியம் செய்து காலாடியாகச் சுற்

றும் அத்தான் பார்த்தசாரதியின் மேல் கோபம் கோபமாக வந்தது.

அர்ஜுனப் பிள்ளை சாரதியைச் சிறு பையனாக இருந்த போது பார்த்ததுதான். ஓராண்டுக்கு முன் அவர் அவனுடைய காளைப் பருவ வளர்ச்சியைக் காணும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அவன நண்பர்களுடன் மைசூருக்கு உல்லாசப் பிரயாணமாக வந்திருந்தான். பெங்களூரில் அவனைத் தற்செயலாகக் கண்ட சண்பகம் தன் கணவரிடம், "அது எங்க அண்ணு மகன் சாரதி மாதிரியில்லே இருக்கு. கொஞ்சம் கூப்பிட்டுக் கேளுங்க!" என்ருள். பிள்ளை முதலில் ஆட்சேபித்தாலும் முடிவில் கூப்பிட்டார். அவன் சீனுவாசப் பிள்ளையின் மகன் பார்த்தசாரதி தான் என்பது நிச்சயமானவுடன் இருவரும் அவனை வீட்டுக்கு வரும்படி வருந்தி அழைத்தார்கள்.

அவன் ஒப்புக்கு வந்துவிட்டுப் போனுன். அவன் வந்த போது இந்திரா வீட்டில் இல்லை. சாரதி தன் அத்தையிடம், "நாங்கள் எல்லாம் அவசரமாக மைசூருக்குப் புறப்படுகிறோம். அங்கிருந்து உதகமண்டலம் வழியாகச் சென்னைக்குத் திரும்புவதாகத் திட்டம். இந்த வழியாக வந்தால் கட்டாயம் வீட்டுக்கு வருகிறேன்," என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். அவன் வராததால் நண்பர்களுடன் உதகமண்டலம் வழியாகப் போய் விட்டதாக அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள்.

அவன் வந்து போன தகவலை இந்திராவுக்குச் சொன்ன பெற்ரோர்கள் அப்போது அவனைப் பற்றி அதிகமாகப் பேசும் மன நிலையிலில்லை. ஆனால் இப்போது சீனுவாசப் பிள்ளையின் மன்னிப்புக் கோரலும் அழைப்பும் கலந்த கடிதம் வந்தவுடன் சண்பகமும், அர்ஜுனப் பிள்ளையும் சாரதியின் காளைப் பருவம், கட்டழகு தோற்றத்தைப் பற்றி வர்ணிக்கத் தொடங்கி விட்டார்கள். மெழுகு பதத்திலிருந்த அவள் மனத்தில் இவர்களுடைய வர்ணனைகளின் விளைவாக ஒரு உருவம் பதிந்தது.

சீனுவாசப் பிள்ளையின் கடிதத்தில் அவருடைய உடல்நிலை கவலைக்கிடமான எல்லையை எட்டிக் கொண்டிருக்கிறது என்று எழுதப் பட்டிருந்தது. ஆயினும் அர்ஜுனப் பிள்ளையும் சண்பகமும் உடனே புறப்பட்டுப் போக முடியாதபடி சில குடும்ப விவகாரங்கள் குறுக்கிட்டன. நாலைந்து நாட்களில் வருவதாகப் பதில் எழுதிவிட்டு அர்ஜுனப் பிள்ளை அந்த விவகாரங்களை முடிப்பதில் முனைந்தார்.

அந்த நிலைமையில் தான் சீனுவாசப் பிள்ளையிடமிருந்து, "இந்திராவை உடனடியாக அழைத்துக் கொண்டு இருவரில் ஒருவராவது இங்கு வந்து சேரவும்" என்று தந்தி வந்தது. அன்றும் அவர்கள் உடனே புறப்பட இயலாத நிலைமையாக இருந்தது. அர்ஜுனப் பிள்ளை, "நாளை வண்டியில் இந்திரா மட்டும் வருகிருள். நானும் சண்பகமும் நாளை கழித்து மறு நாள் புறப்படுகிறோம்." என்று சீனுவாசப் பிள்ளைக்குப் பதில் எழுதினுர். அடுத்த நாளே இந்திராவை ரயில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

ரயிலில் தனிமையிலிருந்த இந்திராவின் உள்ளத்தில் மாமாவின் உடல் நிலையைப் பற்றிய கவலையையும் மீறி ஒரு புதிய கிளர்ச்சி தோன்றி விட்டது. பார்த்த சாரதியை நேரில் சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணம் அவள் நெஞ்சிலே நாணம், மகிழ்ச்சி, ஒருவித பயம் ஆகிய பல்வேறு உணர்ச்சி வேகங்களை எழுப்பிக் குழப்பத் தொடங்கி விட்டது.

சாரதியின் மைனர் ஆட்டங்களைப் பற்றி அர்ஜுனப் பிள்ளையின் குடும்பத்துக்குத் தெரியும். ஆனால் அது எவ்வளவு தூரத்திற்கு முற்றியிருந்தது என்பது தெரியாது. "ஏதோ விளையாட்டு வயது; பணக்கார வீட்டுப் பையன்; வீட்டிலே அடக்கி ஆள சரியான ஆள் இல்லை. கொஞ்சம் நாள் இப்படி ஊர் சுற்றி விட்டுத் தானே அடங்கி

வந்து விடுவான்'' என்று சண்பகம் அதைப் பற்றி அபிப்பிராயம் கூறினாள். அர்ஜுனப் பிள்ளையும் அந்தக் கருத்தை ஆதரித்தார். அதோடு அவர்கள் இந்திராவிடம், ''அவனை வீட்டுக்குத் திருப்பி வழிக்குக் கொண்டு வரும் பொறுப்பு உன்னுடையது தான்,'' என்றும் ஜாடையாகச் சொன்னார்கள்.

ரயிலில் இந்திரா அந்தப் பொறுப்பைப் பற்றிக்கூடச் சிந்திக்கத் தொடங்கி விட்டாள்.

ஆகையால் சென்னையில் வந்து இறங்கிய போது அவள் மனம் ஒரு பெரிய மகிழ்ச்சியை எதிர் பார்த்துப் பரபரத்துக் கொண்டிருந்தது.

ரயிலடிக்கு சீனுவாசப் பிள்ளையின் கார் வந்திருந்தது. அவள் எப்படியிருப்பாள் என்பதைப் பற்றிய விவரமொன்றும் அறியாத ஒரு கார் ஓட்டியும், தோட்டக்கார பச்சையப்பனும் வந்திருந்தார்கள். பச்சையப்பன இந்திரா இருந்த வண்டியிலிருந்து இறங்கிய ஒரு பெண்ணிடம் போய், ''நீங்க சீனுவாசப்பிள்ளை வீட்டுக்கு வந்தவங்க தானுங்களே?'' என்று கேட்டதைக் கேட்டு இந்திரா அவனை அழைத்தாள். பச்சையப்பன், ''அம்மா! ஐயா சொன்னாப் போலேயே இருக்கிங்களே! உங்களை முன்னாலே பார்த்தா ஒடனே கண்டுக்கிட்டிருப்பேன்!'' என்று பெட்டி படுக்கைகளைத் தூக்கினான்.

அவள் கேட்ட கேள்விக்குப் பதிலாக காரோட்டி, ''ஐயாவுக்கு, உடம்பு அப்படியேதானிருக்குங்க. டாக்டர் தெனம் ரெண்டு நேரம் வந்து போராரு. சின்னவர் வீட்டிலேயே தங்கிட்டாலே அவருக்குக் கொணமாயிடுங்க,'' என்றது அவள் நெஞ்சை அதிர வைத்து விட்டது.

பார்த்தசாரதி தந்தையின் அந்த உடல் நிலையில் அவரைப் பற்றிய கவலையேயின்றி ஊர் சுற்றுகிறான் என்ற செய்தி அவள் உள்ளத்தைக் கலக்கி விட்டது.

மதிப்புரை :

## ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

**ஆசிரியர் :** முரசொலி மாறன் எம். ஏ; **வெளியீடு :** முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி; **விலை :** ரூ. 1-50.

'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம், தெரியுமா?' என்ற கேள்வியில் வாசகர்களை ஈடுபடச் செய்துவிட்டு, தன்னுடைய கழகக் கொள்கைகள் – அமைப்பு முறை – கட்டுத் திட்டங்கள் ஆகியவற்றின் எல்லைக் கோட்டிற்குள்ளேயே பேனாவை ஓட விட்டிருக்கின்றார் திரு மாறன். அரசியலில் மொழி வழி அமைப்பை பெரும்பாலான தலைவர்கள், அரசியல் அறிஞர்கள் ஆதரிப்பார்கள். ஆனால் 'இன்பத திராவிடம்' ஒரு தீராத—தீர்க்க முடியாத பிரச்சினை—தி. மு. க. வுக்கு. ஏனென்றால், மேற்படி திராவிட நாட்டுப் பிரச்சினை மற்றவர்களுக்கு விருப்பமில்லாதது.

ஆனால், இத்தகைய இக்கட்டான நிலையிலே, இன்பத் திராவிடம் ஏன் வேண்டும் என்பதற்குக் குறிக்கோள் ஈடேறும் வகையில் ஆதாரங்களைக் காட்டியிருக்கின்றார் ஆசிரியர்.

நகராண்மைக் கழகத்திலே ஆண்டுக்கு ஒரு முறை தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவது மாதிரி, ஆட்சி பீடத்துக்கும் ஆண்டுதோறும் தலைவர் தேர்தல் நடைபெற வேண்டுமென்று குறிப்பிட்டுள்ள ஆசிரியரின் ஆலோசனை செயற்பட முடியாது; அப்படிச் செயற்பட்டாலும், விளைவது குழப்பமாகத்தான் இருக்க முடியும்.

'சுதந்திர திராவிடத்தைப் பிரித்துக் கொடுக்கட்டும்....அது எந்தக் காரணத்தைக் கொண்டும் சர்வதேச அரசாங்கம் அமையப் போவதைத் தடுத்து நிறுத்தி விட முயற்சிக்காது....'—தி. மு. கழகத்தின் உயிர்க் குரலும் கேட்கிறது—இப் புத்தகத்தில்.

தமிழகத்தின் வாழ்வுக்கும் வளத்துக்கும் 'திராவிடஸ்தான்' பரிகாரம் காட்ட முடியாது. தமிழ் நாட்டின் விடிவு அது ஐக்கிய இந்தியாவின் அங்கமாக விளங்கும் முடிவைப் பொறுத்திருக்கிறது.

திரு மாறன் கூறியுள்ள கருத்துக்கள் மாற்றுக் கட்சியினருக்குப் பிடிக்காது; என்றாலும், உயிருள்ள தமிழில் எழுதியிருக்கின்றார்.

—'பதி'

வீட்டுக்குப் போனவுடன் அவள் நேரே சீனுவாசப் பிள்ளை படுத்திருந்த அறைக்கு விரைந்தாள். அவரருகில் போய் நடுங்கும் குரலில், ''மாமா'' என்று கூப்பிட்டாள். அந்தக் குரலைக் கேட்டுக் கண்களைத் திறந்த பிள்ளை அவளை உற்றுப் பார்த்து விட்டு நைந்த குரலில், ''இந்திரா, வா அம்மா. இப்படி இரு,'' என்று நாற்காலியைக் காட்டினார். அதற்குள் அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகத் தொடங்கி விட்டது. இந்திராவாலும் கண்ணீரை அடக்க இயலவில்லை.

பிள்ளை அவளைப் பற்றியும், அவளுடைய பெற்றோரைப் பற்றியும் சுருக்கமாகச் சில கேள்விகள் கேட்டார். பிறகு, ''நேற்று அவன் வந்திருந்தான். உங்க அப்பா கடிதத்தைப் படித்துப் பார்த்தான். இன்று காலையில் அவன் வந்து உன்னை ரயிலடியிலிருந்து அழைத்து வருவான் என்று நினைத்தேன். எங்கே போய் விட்டானோ? போ; முதலில் முகத்தை அலம்பிக் காப்பி குடித்து விட்டு வா,'' என்றார்.

அன்று பகல் முழுவதும் அவள் பிள்ளையின் சேவையில் முனைந்தாள். அவளுடைய இனிய வடிவமும், அன்பு பொங்கிய மனமும், பேச்சும் அவருக்கு ஒரு பெரிய 'டானிக்' போல இருந்தன. அவராகத் தொடங்கினாலன்றி அவள் பார்த்தசாரதியின் பெயரையே எடுக்கவில்லை. அவர் அவனைப் பற்றிக் குறைவாக, அல்லது குற்றம் கூறும் வகையில் எதாவது சொன்னாலும் அவள், ''பாவம், அத்தான் அவ்வளவு கெட்டவராக இருக்க முடியாது மாமா. வேண்டுமானால் பாருங்கள்; அவர் வீட்டுக்கு வந்தவுடன், உங்கள் உடல் நிலைமையின் உண்மையை நான் அவருக்கு விளக்கிச் சொன்னவுடன் எப்படி மாறி விடுகிறார், பாருங்கள்!'' என்று அவருக்குச் சமாதானம் சொன்னாள்.

அன்று பகல் கழிந்து இரவு படரத் தொடங்கியும் அவன் வீட்டுக்கு வராததைக் கண்டு அவள் உள்ளத்திலும் ஆட்டம் கண்டு விட்டது. மெய்யாகவே சாரதியின் உள்ளம் ஈரமேயில்லாமல் வறண்டு போயிருக்குமோ என்ற சந்தேகம் எழத் தொடங்கி விட்டது. அப்படிப்பட்ட ஒருவனைப் பற்றி அவள் நெஞ்சகத்தில் தோன்றி வளர்ந்திருந்த கற்பனைகள் கலகலக்கத் தொடங்கி விட்டன. அந்தச் சந்தேகத்தை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது.

பிள்ளையின் அறையில் ஒரு பக்கச் சுவரில் ஒரு பெரிய படம் மாட்டியிருந்தது. அதில் பிள்ளையும், சாரதியும் சேர்ந்து நின்றார்கள். இரண்டரை வருஷத்துக்கு முன் எடுக்கப் பட்டது என்று அதன் கீழேயே தேதி குறிக்கப் பட்டிருந்தது. சாரதி தானே காமிராவைத் தயாராகக் கால அளவுடன் திறந்து மூடும்படி இயக்கி வைத்து விட்டுத் தந்தையின் அருகில் வந்து நின்று கொண்டான். அந்தச் சிறிய படத்தைக் கொடுத்துப் பெரிதாக்கி வாங்கி வந்து மாட்டினான்.

அந்தப் படத்திலிருந்த சாரதி அவள் கற்பனையில் எழுந்த வடிவத்துக்குச் சரியாக இல்லைதான். ஆயினும், அவளுடைய பெற்றோரின் வருணனைக்கு நிறையப் பொருந்தியிருந்தது. பிள்ளைக்கு சிசுருஷை செய்து அவர் அருகில் உட்கார்ந்திருக்கும் போது அவளுடைய கண்கள் மறுபடி மறுபடி அந்தப் படத்திடமே பாய்ந்தோடின. பிள்ளையின் கண்கள் பெரும்பாலும் மூடியே இருந்தன. ஆயினும் தான் படத்தை அப்படி ஆவலுடன் பார்ப்பதை அவர் எங்கே கவனித்து விடுவாரோ என்ற கூச்சமும் இருந்து கொண்டேயிருந்தது.

இரவு ஒன்பது மணிக்கு அவள் டாக்டர் உத்தரவின்படி பிள்ளைக்கு மருந்து கொடுத்தாள். அவருடைய படுக்கை, தலையணைகளைத் தட்டிப் போட்டு, பச்சையப்பன் உதவியுடன் அவரைச் சரியாகப் படுக்க வைத்தாள். அவர் தலையருகில்

உட்கார்ந்து தணிந்த குரலில் தன்னுடைய பள்ளி வாழ்க்கையைப் பற்றியும், தன் சொந்த அனுபவங்களைப் பற்றியும் சொன்னாள். அதையெல்லாம் கேட்டுக்கொண்டே பிள்ளை உறங்க முயன்றார்.

அவர் உறங்கி விட்டதாக நம்பி இந்திரா தனக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றாள். அங்கே தனிமையில் தன் உள்ளத்து உணர்ச்சிகளைத் தெரியப்படுத்தி, இனம் பிரித்து அதை ஒரு கட்டுக்குக் கொண்டு வர முயன்றாள். அந்த முயற்சியில் நேரம் கழிந்ததே தெரியவில்லை. பத்தரை மணி இருக்கும். பிள்ளை வேலைக்காரர்களை அழைக்கும் மணி படபடத்து அலறியது. எழுந்து அவர் அறைக்கு விரைந்தாள்.

பிள்ளையின் முகமெல்லாம் வியர்த்திருந்தது. அவளைக் கண்ட அவர், "வா அம்மா. இப்படி உட்காரு. உறக்கத்தைக் கலைத்து விட்டேனா?" என்று குழந்தைக் குரலில் கேட்டார். ஏதோ பயத்தில் தன் தாயைக் கட்டிக் கொள்ளும் குழந்தையினதைப் போலவே இருந்தது அவருடைய முகத் தோற்றம். இந்திரா அவசரமாக அவர் முகத்தைத் துவாலையில் துடைத்து மருந்தைக் கொடுத்தாள். கவலையுடன் "என்ன செய்கிறது மாமா? டாக்டரை வேண்டுமானால் கூப்பிடட்டுமா?" என்றாள். அவர், "வேண்டாம். நீ தான் எனக்குப் பெரிய டாக்டர், மருந்து எல்லாம். என் பக்கத்தில் உட்கார்ந்து கொள்," என்றார்.

அவர் கண்களில் கண்ணீர் முண்டியது. கஷ்டப்பட்டு அதை அடக்கிக் கொண்டு அவர் தலையருகில் உட்கார்ந்து பேச்சு கொடுத்தாள். அவர் முழுக்க முழுக்க குழந்தையே ஆகி விட்டார். அந்தமாதிரி என்னவெல்லாமோ கேள்விகளெல்லாம் கேட்டார்.

இரவு பதினொன்றரை மணிக்கு அவர் தம்மை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். மூச்சு நிதானமாக வரத் தொடங்கி விட்டது. இந்திரா பெரிய விளக்கை அணைத்து, இரவு விளக்கைப் போட்டு விட்டு மாடியின் பின்புறத் தளத்திற்குச் சென்றாள். அவள் அறையில் ஒரு மணி நேரம் சிரமப்பட்டு ஒழுங்கு படுத்திய அவளுடைய உணர்ச்சிகள் மறுபடி திக்குத் திக்காகக் கிளைத்து ஓடத் தொடங்கின.

இருபது வயதாகி விட்டாலும் அவள் உலகம் அறியாத பருவப் பெண். அதனால் அவள் மனக் குழப்பத்திலிருந்து விடுபடுவதற்கு வேண்டிய அனுபவ அறிவின் பலம் அவளுக்கு இல்லை. பர பரப்புடன் மாடித்தளத்தில் குறுக்கும்


உத்திரவாதமுள்ள

- ❋ பவுன் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள்
- ❋ ஸ்விஸ், ஜெர்மன் கைக் கடியாரங்கள்
- ❋ மேஜை கடியார வகையராக்களுக்கு

**ஜெயின் ஜுவல்லரி கம்பெனி**

*1, நாகேஸ்வரராவ் ரோட்,*

தியாகராயநகர், மதராஸ்-17·

நெடுக்குமாக நடந்தாள். தளத்தின் ஓரத்தில் போய்க் கைப் பிடிச் சுவரின் மேல் சாய்ந்து கீழே தோட்டத்தையும், பின்னால் தெருவையும் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அப்படி நின்ற போது தான் யாரோ ஒருவன் பங்களாச் சுற்று மதிலின் மேல் ஏறிக் குதிக்க முயலுவதைக் கண்டு திடுக்கிட்டாள். அதே சமயம் வீதி வழியாக இன்னொரு ஆள் மரங்களின் நிழலில் மறைந்து மறைந்து அவனை நோக்கி வருவதையும் கண்டாள். சுவரின் மேலிருந்தவன் தெருப் பக்கம் குதித்ததையும், வெளியிலிருந்தவன் அவனைப் பிடித்துக் கொண்டதையும் கண்டவுடன் அவளுக்கு 'ஓ'வென்று கூச்சலிட வேண்டும் போலாகி விட்டது. சுவரேறிக் குதித்தவன் தன் மாமன் மகன் சாரதி தான் என்று அவள் நிச்சயம் செய்து கொண்டு விட்டாள். அவனை யாரோ பிடித்துக் கொண்டது அவளை ஒரு குலுக்கு குலுக்கி எடுத்து விட்டது. ஆயினும், அவள் கூச்சலிடாமல் சமாளித்துக் கொண்டாள். மாடித் தளத்து விளக்கைப் போட்டுக் கைப் பிடிச் சுவர் மேல் சாய்ந்து நின்று அங்கே நடப்பதைக் கவனித்தாள்.

அவள் சாரதியென்று நம்பியவனைப் பிடித்துக் கொண்டவர் ஒரு போலீஸ்காரர் தான் என்பது அவளுக்குத் தெளிவாகி விட்டது. அவனை அவரிடமிருந்து விடுவிக்க ஓடினாள்.

போலீஸ்காரர் பிடியிலிருந்த ராஜாபாதரை முதல் முதலாக விளக்கு ஒளியில் பார்த்தவுடன் அவள் நெஞ்சம் பொங்கியது. சாரதியின் போட்டோவிலிருந்து அவள் கற்பனை செய்து கொண்ட அவனுடைய இப்போதைய தோற்றத்திற்கு அது மிகவும் பொருந்தியிருந்தது.

அவனைப் போலீஸ்காரனிடமிருந்து மீட்டு வீட்டுக்குள் அழைத்துச் சென்ற போது அவள் உள்ளமும் உடலும் பதைத்துப் பதறுவது போல இருந்தது அவளுக்கு. அத்தானுக்கு அவ்வளவு அருகில் நின்று நடந்து செல்வது ஒரே சமயத்தில் சகிக்க முடியாத இன்பமாகவும், துன்பமாகவும் இருந்தது.

ஆனால் அவன் அவளிடம், "உன் பெயரென்ன?" என்று கேட்டவுடன் அவள் மனம் ஒரேயடியாகக் குழம்பி விட்டது. சமாளித்துக் கொண்டு பதில் சொன்னாள்.

கடைசியாக அவன், "நான் சாரதியல்ல. அவன் மணப்பதாக வாக்களித்துள்ள பெண்ணின் அண்ணன்" என்று சொன்னதைக் கேட்டவுடன் அவளுக்கு வாய் விட்டு 'ஹோ'வென்று அழவேண்டும் போல ஆகிவிட்டது.

அவள் உள்ள நிலைமையைப் பற்றி அறியாத நிலையில் ராஜாபாதர் தான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டுப் போய் விட்டான். அவனை வெளியே அனுப்பித் தோட்டக் கதவை அடைத்துக் கொண்டு திரும்பிய போது, அவளால் அடக்க முடியாமல் அழுகை பீறிக் கொண்டு புறப்பட்டு விட்டது. தாழ்வார விளக்கை அணைத்து விட்டு, விம்மி விம்மி அழுது கொண்டே தன் அறைக்கு ஓடினாள்.

அவளால் படுக்கையில் படுத்திருக்கவும் இயலவில்லை. உட்கார்ந்திருக்கவும் இயலவில்லை. அவள் மனம் திருப்பித் திருப்பி, "இவர் ஏன் அத்தானாக இருந்திருக்கக் கூடாது? அத்தானல்லாத இவரை நான் அவர் தான் என்று நினைக்கும்படி ஏன் நடந்தது? அத்தான் இன்னொருத்தியை மணக்க வாக்களித்திருக்கும் போது என்னை ஏன் இங்கே வரவழைத்திருக்க வேண்டும்?" என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தது.

(தொடரும்)

'டங்க்! டங்க்!'

மூர்த்தி நிமிர்ந்தான். வீணையின் நரம்புகள் இசை கூட்டியவுடன் அமைதி பெற்றன. அவனுடைய இதய நரம்புகள் திரும்பத் திரும்ப மீட்டிவிடப் பட்டன.

"கமலா!"

அவன் விம்மினன்; கண்ணீர் பெருக்கினன்; கதறினன்.

திரும்பவும் அந்தப் பாட்டு நினைவில் எழுந்தது.

நெஞ்சைப் பிளந்தெறியும்
நெடுவேலோ உன்கண்கள்?
சுடரம்போ, கூர்வாளோ
சுட்டெரிக்கும் உன்கண்கள்?
வைத்தவிழி வாங்காது
வாகையால் எரிக்கின்ருய்!

"மூர்த்தி, இனி தங்களை நான் சந்திக்க முடியாது!"

"ஏன்...கமலா....?"

"என் வீட்டில் நமது விஷயங்கள் தெரிந்து விட்டன!"

"அப்படியா, மிக நல்லது. தெரிய வேண்டியதுதானே....?"

"தெரிய வேண்டியதுதான்; ஆனல்....?"

"எதற்காக இந்த 'ஆனல்' எல்லாம்? விஷயத்தை விளங்கும்படி சொல்லேன்!"

# ஜோடி

"நீங்கள் தம் குல எதிரியின் மகனும்!..."

"யார் சொன்னது கமலா...?"

"என் தந்தை!"

"அப்படியானல், இனி நம் எதிர் காலம்...?"

"எனக்கே ஒன்றும் புரியவில்லை!"

"கமலா, நீ என்னைக் காதலிப்பது உண்மைதானே?"

"அப்பேர்ப்பட்ட சந்தேகம் ஏற்படக் காரணம்....?"

"பிறகு ஏதாவது வழி?"

"எனக்கு அழுது புலம்புவதைத் தவிர வேறெதுவும் வழி புலனுகவில்லை. நீங்களே யோசித்துச் சொல்லுங்கள். நானை எப்படியும் உங்களைச் சந்திக்க முயல்வேன்," என்று கூறி விடைகூடப் பெற்றுக் கொள்ள மனமில்லாதவள் போல் சென்று விட்டாள்.

மறுபடியும் பழைய எண்ணங்கள் பிறந்தன. அவன் குருடன் போலத் திண்டாடினன்.

மூர்த்தி மேலையூரிலேயே பிரபல மிராசு குடும்பத்தைச் சேர்ந்தவன். ஒரே பிள்ளை. ஏராளமான ஆஸ்திகளுக்குச் சொந்தக்காரன். இருப்பினும் பி. ஏ. பட்டதாரியான அவன் கிராமாந்தரச் சூழ்நிலையை வெறுத்துப் பட்டணத்தில் வசித்து வந்தான். அவன் வசித்த அதே

ஆர். ஸி. மணி

வீதியில்தான் அவனது பக்கத்தூர் சின்னப் பண்ணையார் சிவபாதமும் வசித்து வந்தார். அவரது ஒரே புதல்விதான் கமலா; 'இண்டர்' படிப்பு; ஒரே கல்லூரி; நல்ல அழகி.

எழுதின பதில்க் கடிதத்தை எடுத்துக் கொண்டு நேரே கமலாவின் தெருவுக்குப் புறப்பட்டான்.

ரிக்ஷா மறுபடியும் திரும்பிச் செல்ல எத்தனித்த சமயம், அந்த வீட்டிலிருந்து வந்தார் கமலாவின் தகப்பனார். அவரைக் கண்டவுடன், மூர்த்தியின் தலைமறைந்தது. அவன் மறுபடியும் தலையைத் திருப்பிய போது, அந்தப் பெரியவர் பின்னிருந்து அசுர வேகத்தில் வந்த காரைக் கவனிக்காமல் நிற்பதைக் கண்டான்; ஒரு கணநேரப் போராட்டம். பிறகு, ரிக்ஷாவிலிருந்து இறங்கி ஓடிப்போய் அவரது கைகளைப் பிடித்து வேகமாக இழுத்துத் தள்ளி விட்டுத் திரும்பினான். பெரியவர் ஆபத்திலிருந்து தப்பினார். ஆனால் மூர்த்தியின் மேல் கார் மோதிற்று. வலது காலில் ரத்தம் சொட்டியது.

கமலாவின் அப்பாவான சாம்பசிவம் அந்த இளைஞனை நோக்கினார். ''யார், நீ சிவபாதத்தின் மகன்தானே?''

''ம்....''

''என் விரோதியின் மகனான நீயா வந்து கடவுள் போல என்னைக் காப்பாற்றினாய்?''

''ம்....''

மூர்த்தி வேதனையைத் தாளமாட்டாமல் எழுந்து கிளம்பினான். பண்ணையார், ''மூர்த்தி, மூர்த்தி!'' என்று கூப்பிட்டார். அவன் போய்க் கொண்டேயிருந்தான். பெரியவர் அவன் பின்னால் ஓடினார்.

''மூர்த்தி, என் நன்றியைக்கூட எதிர்பார்க்காமல் போகிறாயே?''

''என் கடமை முடிந்தது. போகிறேன்.''

''என் கடமை ஒன்று பாக்கியிருக்கிறதே? நில், மூர்த்தி!''

''உமக்கும் என் தந்தைக்கும் ஏற்பட்ட பகையினால் எனக்கும் உங்கள் கமலாவுக்கும் இடையே உருவான காதலைப் பிரித்து விட்டு வேடிக்கை பார்ப்பது தானே உங்கள் கடமை?...''

''மூர்த்தி, என்னை மன்னித்துவிடு; நீ இனி என் மாப்பிள்ளை!''

''அப்பாவின் மனசை மாற்ற நான் தயாரித்த மனோதத்துவத் திட்டம் வெற்றி பெற்றது, பார்த்தீர்களல்லவா? கார் கொடுத்த என் தோழிக்கு நன்றி சொல்ல வேண்டும்,'' என்று ரகசியமாகச் சொன்னாள் கமலா, தன் காதலனிடம்—மூர்த்தியிடம்! ★

## தங்கமலை ரகசியம்

'சிவாஜி கணேசன் முற்றிலும் புதிய பாத்திரம் ஏற்றுத் திறம்பட நடிக்கும் படம்' என்று 'தங்கமலை ரகசிய'த்தின் சுவரொட்டிகள் கூறின. கதையின் 'ரகசியம்' தங்கமலையில் இருக்கிறது – படத் தயாரிப்பாளருக்கு. வெற்றியின் ரகசியம் சிவாஜியிடம் கிடைக்கிறது–படத்தைப் பார்க்கும் பொது மக்களுக்கு. டார்ஜான் படங்களை அனுசரித்துத் தமிழில் படங்கள் அதிகம் வரவில்லை. இக் குறையை நீக்கியதுடன், புதுமையையும் காட்டுகிறது படம். காட்டு மனிதனே கண்டு ஆச்சரியப்படும் படியாக வேஷம் போடப் பட்டிருக்கிறது திரு கணேசனுக்கு. அவர் வாயை மூடிக் கொண்டு உண்மையான காட்டு மனிதனாகவே மாறி நடிக்கும் கட்டங்கள் நம்மை நாமே மறந்து விடச் செய்கின்றன. 'முற்றிலும் புதிய பாத்திரம்' என்ற எச்சரிக்கை இத்துடன் சரி. அவருடைய வாயைத் திறக்கிறார் ஜமுனா. அவர் பழைய சிவாஜியாகி விடுகிறார்.

தூய அன்பும் மாசற்ற காதலும் சந்திக்கும் உச்ச நிலைக் கட்டம். 'பியாஸா'

காலம் மாறினாலும், இளமை மாறாத எழில் நங்கையாகப் பாத்திரமறிந்து நடித்திருக்கிறார் திருமதி ராஜகுமாரி. அவருடைய நடனங்களுக்குப் பதிலாகப் பாட்டுக்களைக் கேட்கவே ரசிகர்கள் விரும்புவார்கள்–இன்று. ஜமுனாவின் தோற்றம் வண்ணக் காட்சிகளில் அற்புதம். ராஜம்மாவின் நடிப்பு சோடை போகவில்லை. நம்பியார், வீரப்பா இருவருக்குமே சிரமப்படாமல் நடித்துப் பழக்கமாகி விட்ட பழைய பாத்திர அமைப்புத் தான் கொடுக்கப் பட்டிருக்கிறது.

திருவாளர்கள். சின்ன அண்ணாமலை–லட்சுமணன் எழுதின கதை இது. சுவை நிரம்பிய–பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த உணர்ச்சிச் சித்திரம். ஆனால் பிற்பகுதியில், பழைய தமிழ்ப் படங்களின் சாயல் தெரிவதைத் தடுத்திருக்க வேண்டும். திருவாளர்கள் கு. மா. பா. வும் கு. சா. கி. யும் பாடல்களைச் சிறப்புறத் தயாரித்துள்ளனர்.

## பியாஸா

பாடல்கள் எழுதும் கவிஞன் அவன். அவன் மீது இரு பெண் உள்ளங்கள் மையல் கொள்கின்றன. ஒருத்தி குடும்பப் பெண்; கணவனின் நிழலில் ஒண்டியவள். இன்னொருத்தி தாசி; ஆனாலும் மனித மனம் படைத்தவள். காதலின் கதை சோகத்தில் முடிவதைக் காட்டுகிறது மேற்படி படம். குரு தத், மாலா சின்ஹா, வாஹிதா ரஹ்மான்—மூவரும் கதைக்கு உயிர்; படத்துக்கும் அவர்கள் வெற்றி தேடித் தருகின்றனர். தான் உயிரோடிருக்கையில் வாழ வைக்காத சமூகம், தான் செத்து

மடிந்ததைக் கேட்ட பிறகு, தன் பெயரால் விழா நடத்துவதைக் காணும் சந்தர்ப்பம் ஏற்படுகையில், குருதத் சிறப்பாக நடித்திருக்கிறார். சிறு கதைக்குரிய கருவை வைத்துக் கொண்டு நல்ல படமாகத் தயாரித்து, வாரக் கணக்கில் ஓட வைத்து விடுவதில் வடநாட்டவர்கள் கெட்டிக்காரர்கள்தாம்! ஆனாலும், பார்க்கக் கூடிய பண்புள்ள படம் இது.

## மல்லிகா

புராணப் படங்கள் நம்மைத் திணறவடித்தன; வாழ்க்கை ஒரு சோதனைச் சாலை என்ற உணர்ச்சியைத் தூண்டித் தோல்வி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளும்படியாக மேற்படி படங்களின் கதைகள் எழுதப் பட்டிருந்தன. புராணப் படங்களிலாவது ஆபத்துக்கு உதவ ஒரு கற்பகக் கனி கிடைத்தது; தெய்வங்கள் வினாடிக்கு வினாடி தோன்றின!

மணப்பந்தல் கூவியழைக்கிறது ;
சீவிச் சிங்காரிக்கிறாள் சித்திரப் பாவை !

'திருமணம்' — சாவித்திரி

ஆனால் சமூகப் படங்களில் இத்தகைய தொல்லைகள் இல்லை. படத்திற்கு 'உயிர்' கொடுத்து விட்டால், பொதுமக்கள் அந்தப் படத்திற்கு நூறாவது நாள் விழா நடத்தினால்தான் ஆறுதல் அடைவார்கள்.

'இதய கீதம்,' 'ஞான சௌந்தரி' போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்த திரு ஜோஸப் தளியத் அவர்கள்தான் 'மல்லிகா'வையும் வெளியிட்டிருக்கின்றார். கதை அமைப்பு, புகுத்தப்பட்டிருக்கின்ற சம்பவங்கள் புத்தம் புதியன அல்ல யென்றாலும், படம் எடுக்கப்பட்டுள்ள முறை ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் அமைந்திருக்கின்றது.

பர்மாவிலிருந்து திரும்பும் ஒரு தமிழ்க் குடும்பம் விமான விபத்துக்கு இலக்காகிறது. அதில் பத்மினியும் பேபி ராஜகுமாரியும் மட்டுமே உயிர் தப்புகின்றனர்.

அல்லல் பல அனுபவிக்கின்றனர். பாலையாவுக்கு வில்லன் பாகம்; ஜெமினி கணேசனுக்குக் காதலிக்கும் பொறுப்பு, தங்கவேலு, தான் வரும் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் சிரிப்பையும் உடனழைத்து வந்து விடுகிறார்.

'மல்லிகா' வாக மாறும் இடங்களில் பத்மினியின் நடனங்கள் அற்புதமாக உள்ளன. 'மங்காமல் வளரும் சிங்கார நடனம்' என்றமுதற் பாட்டு பத்மினியின் சிறந்த ஆட்டத்துக்கும், டைரக்டரின் திறமைக்கும், ஒளிப்பதிவின் மேன்மைக்கும், ஒலிப்பதிவின் வெற்றிக்கும் ஒன்று சேர்ந்த உதாரணம்.

பத்மினிக்குப் பிறந்த மண் மறந்து போகுமா, என்ன ?

'மல்லிகா'—பத்மினி

பேபி ராஜகுமாரி வெகு அழகாகப்பேசி உணர்ச்சி பொங்க நடித்திருக்கிறாள். ஜெமினி கணேசனின் நடிப்பு கதையின் கடைசிப் பகுதியில் சோபிக்கிறது. எம். என். ராஜம்–நட்சத்திர மதிப்புக்கு !

படத்தின் இறுதியில் காட்டப்படும் 'பஞ்சம்–பட்டினி' நடனம் சோகரசமும் சிருங்கார ரசமும் பொருந்தி மிகவும் விறுவிறுப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இதே கதையை 'பாயல்' என்ற பெயரில் ஹிந்தியில் தயாரித்து வெளியிட்டார்கள். படம் வெற்றி காணவில்லை. ஆனால் 'மல்லிகா' பொது மக்களிடம் நல்ல புகழ் வாங்குவாள். ''எங்களை விட தமிழ் நடிகர்–நடிகைகள் சிறப்பாகவே நடித்திருக்கிறார்கள் –மல்லிகாவிலே!'' என்று வடநாட்டு நட்சத்திரங்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

நீண்ட இடைவேளைக்குப் பின் ஒரு நல்ல படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கும் படத்தயாரிப்பாளர்–டைரக்டர் திரு ஜோசப் தளியத் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

பைரவி ★

மூன்று ஜோடிக் கண்கள்–சிந்தனை, சூது, கலக்கம்!

ஆரவல்லி—மைனாவதி, முத்துலட்சுமி, 'காக்காய்!'

நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா ரப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 -- சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

# குடும்பக் கட்டுப்பாடு

கர்ப்பத்தடை

இம்மாத்திரைகளை 12 தினங்கள் உட்கொண்டால் கர்ப்பக்கட்டுப்பாட்டுக்குப் பாதுகாப்பளிக்கிறது

முழுசிகிச்சைக்கான 24 பில்லைகள் பாக்கிங் விலை ரூ. 12/- வி.பி.பி. தனி

இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமிருந்து பலதுறைகளிலுமுள்ள இதை உபயோகித்த எண்ணற்றவர்களிடமிருந்து ஏராளமான நற்சாட்சிப்பத்திரங்கள் கிடைத்துள்ளன.

அரங்கில் "ஸ்பெக் டாப்லெட்டுகள்" (ரிஜிஸ்டர்டு) வெண்மணிகள் வாயில் போட்டு சாப்பிடுவதற்கு வழங்கப்படுகிறது.

எங்கும் கிடைக்கும்

தந்தி "ORCAS" (ஸ்தாபிதம் 1946) போன் 55357

**சீனு அண்ட் கோ.,** 28, R. தாண்டவராய கிராமணி தெரு, மதராஸ்-21.

கிளை சிங்கப்பூர் 8. (சிலோன்) ஏஜண்டுகள் N. C. M. ஸ்டோர்ஸ் 82 மெயின் தெரு கொழும்பு-11. (ADVT. PERMITTED UNDER G. O. MS. NO. 1121 HEALTH)

---

'பூவை' எழுதிய

## வசந்தபைரவி

விலை: (எட்டணா) 50 நயா பைசா

விவரங்களுக்கு: 'உமா', :: சென்னை-1.

---

## உங்கள் அதிருஷ்டம் 1957-58க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

**Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM**
(U. M.) HOSHIARPUR (Pb.)

---

# மாதவிடாய் தாமதமா?

"தேவி பில்ஸ்" முக்கியமாக தாமதித்த, குறைவான, வலியுடன் கூடிய, தடைப்பட்ட மாதவிடாய் இவைகளுக்கு மிகச் சிறந்தது

இயற்கை தவறிவிட்டால் பிரசித்தமான தேவி பில்ஸ்களை உபயோகிக்கத் தொடங்கவும்

விலைகள்
முழுகோர்ஸ் 28 மாத்திரைகள் ரூ. 11/-
அரைகோர்ஸ் 14 மாத்திரைகள் ரூ. 6/8.
வி.பி.பி. தனி

எங்கும் கிடைக்கும்

1. எல்லா சந்தர்ப்பங்களிலும் துரிதமாக திறமையாக குணமளிக்கிறது.
2. எந்த நிலைமையிலும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்காது..

(ESTD. 1946)

**SEENU & CO.,** 28, R. THANDAVARAYA GRAMANI STREET, MADRAS-21.

BRANCH - SINGAPORE - 8. AGENTS - N. C. M. STORES, 82, MAIN STREET, COLOMBO-11. (ADVT. PERMITTED UNDER G. O. MS. NO. 1121, HEALTH)

*For*

**QUALITY DIAMONDS**

**EXQUISITE JEWELLERY**

**ARTISTIC SILVER WARES**



## M|s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

**Phone: 4818** **T. G. N.** **Grams: "ALANKAR"**

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்.
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன் 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்ச் அச் அச் அச்
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில்
ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம். நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சிலே சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309 UMA August 1957
Registered as a Newspa  Ceylon.

இலங்கையில் கிடைக்கும் இடம்: AVRA Ltd., Colombo.

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers, "Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu)